2026

# வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை

2025 நவம்பர் 7

# வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2026

அனுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,
இலங்கை

2025 நவம்பர் 07

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் வெளியிடப்பட்டது.

இல. 118, கலாநிதி டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள் | | vii |
| 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் | | viii |
| இணக்கம் - 2025/2026 | | x |
| **பகுதி I** | | |
| **01. நடுத்தர கால அரசிறை மூலோபாயம்** | | |
| 1.1 | மேன்நோக்கு | 5 |
| 1.2 | பேரினப் பொருளாதார அரசிறை செயலாற்றுகை | 9 |
| 1.3 | நடுத்தர கால அரசிறை மூலோபாயம் | 13 |
| **பகுதி II** | | |
| **02. அரசிறை அபிவிருத்தி, திறைசேரித் தொழிற்பாடு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்** | | |
| 2.1 | மேன்நோக்கு | 23 |
| 2.2 | அரசாங்க வருமானம் | 26 |
| 2.3 | அரசாங்கச் செலவினம் | 39 |
| 2.4 | பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை | 42 |
| 2.5 | அரசாங்க படுகடன் முகாமைத்துவம் | 43 |
| 2.6 | வெளிநாட்டு நிதியளிப்பு | 43 |
| **03. பொருளாாதார நோக்குகள்** | | |
| 3.1 | மேன் நோக்கு | 49 |
| 3.2 | பொருளாதார வளர்ச்சி | 51 |
| 3.3 | நாணயத் துறை அபிவிருத்திகள் | 60 |
| 3.4 | பங்குச் சந்தை | 63 |
| 3.5 | வெளிவாரித் துறையின் அபிவிருத்திகள் | 63 |
| 3.6 | உலகப் பொருளாதாரத்தின் எதிர்கால நோக்கு | 67 |
| **04. அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை** | | |
| 4.1 | மேன்நோக்கு | 73 |
| 4.2 | பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு | 73 |
| **05. 2026 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை** | | |
| 5.1 | மேன்நோக்கு | 83 |
| 5.2 | மொத்த உள்நாட்டு உற்பத்தி | 83 |
| 5.3 | நுகர்வோர் விலைகள் | 83 |
| 5.4 | வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை | 84 |
| 5.5 | வெளிநாட்டுத் துறை | 84 |
| 5.6 | நாணயத்திரட்டுக்கள் | 84 |
| 5.7 | வருமானம் | 84 |
| 5.8 | செலவினம் | 84 |
| 5.9 | கடன்கள் | 85 |
| 5.10 | மதிப்பீடுகளுக்கான உணர்திறன் | 85 |

பக்கம்

## அட்டணை

### பகுதி I


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | நடுத்தரகால அரசிறைச் கட்டமைப்பு 2025-2030 | 16 |


### பகுதி II


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.1 | அரசிறைச் செயற்பாடுகளின் சுருக்கம் | 24 |
| அட்டவணை 2.2 | மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2025 | 25 |
| அட்டவணை 2.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் | 27 |
| அட்டவணை 2.4 | வருமான வரியின் செயலாற்றுகை | 28 |
| அட்டவணை 2.5 | பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை | 28 |
| அட்டவணை 2.6 | உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை | 29 |
| அட்டவணை 2.7 | மோட்டார் வாகன இறக்குமதிகள் | 31 |
| அட்டவணை 2.8 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி | 31 |
| அட்டவணை 2.9 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் | 31 |
| அட்டவணை 2.10 | அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு | 32 |
| அட்டவணை 2.11 | அரசாங்க செலவின செயலாற்றுகை | 39 |
| அட்டவணை 2.12 | அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2024 - 2025 | 40 |
| அட்டவணை 2.13 | நலன்புரி செலவினம் | 41 |
| அட்டவணை 2.14 | அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று | 42 |
| அட்டவணை 2.15 | மொத்த உள்நாட்டு கடன்கள் (2025 சனவரி முதல் ஆகஸ்ட் வரை) | 43 |
| அட்டவணை 2.16 | வெளிநாட்டு கடன்கள் மற்றும் மானியங்கள் (சனவரி முதல் ஆகஸ்ட் 2025 வரை) | 44 |
| அட்டவணை 3.1 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) | 51 |
| அட்டவணை 3.2 | சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் | 58 |
| அட்டவணை 3.3 | சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை | 59 |
| அட்டவணை 3.4 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) | 60 |
| அட்டவணை 3.5 | நுகர்வோர் விலைப் பணவீக்கம் (அடிப்படை : 2021 = 100) | 62 |
| அட்டவணை 3.6 | மூலதனச் சந்தை அசைவுகள் | 64 |
| அட்டவணை 3.7 | வெளிநாட்டு வர்த்தகம் | 67 |
| அட்டவணை 3.8 | உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2025 (கணிப்பு) | 69 |
| அட்டவணை 4.1 | மின் உற்பத்தி மற்றும் கொள்ளளவு என்பவற்றின் கூட்டமைவு | 75 |
| அட்டவணை 4.2 | 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் வரிக்கு முன்னரான இலாபம் | 78 |
| அட்டவணை 4.3 | அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு/பங்கிலாப வருமானம் | 79 |

பக்கம்

## வரைபு

### பகுதி I

வரைபு 1.1 மொத்த வருமானத்திள் மூ ஆக வட்டிக் கொடுப்பனவு 6

வரைபு 1.2 முக்கிய அரசிறைத் திரட்டுக்கள் - 2022 - 2024 12

### பகுதி II

வரைபு 2.1 மொத்த வருமானத்தின் வகுதிகள் (2025 சனவரி - ஆகஸ்ட்) 26

வரைபு 2.2 மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (2025 சனவரி - ஆகஸ்ட்) 27

வரைபு 2.3 உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை (2025 சனவரி - ஆகஸ்ட்) 29

வரைபு 2.4 அபிவிருத்தி பங்காளிகள்/கடன் வழங்கும் நிறுவனங்களின்படி 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான வழங்கல்கள் (ஐ.அ.டொ மில்லியன்) 44

வரைபு 2.5 பிரதான பொருளாதார துறைகளினால் 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை பயன்படுத்தப்பட்ட வழங்கல்கள் (ஐ.அ.டொ மில்லியன்) 45

வரைபு 3.1 மொ.உ.உ. வளர்ச்சி 49

வரைபு 3.2 மொ.உ.உற்பத்தி வகுதி - 2024 இன் முதல் அரையாண்டு 50

வரைபு 3.3 விவசாயத்துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு 54

வரைபு 3.4 கைத்தொழில் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு 56

வரைபு 3.5 தயாரிப்புத் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு 56

வரைபு 3.6 சேவைத் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு 57

வரைபு 3.7 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம் 60

வரைபு 3.8 விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி 61

வரைபு 3.9 தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் 62

வரைபு 3.10 வர்த்தக மீதி மற்றும் நாணய மாற்று வீத அசைவு 64

வரைபு 3.11 ஏற்றுமதிகளின் வகுதி 65

வரைபு 3.12 இறக்குமதிகளின் வகுதி 66

### கட்டங்கள்

கட்டம் 1.1 இலங்கையின் வயதுக் கட்டமைப்பு மாற்றத்தினாலும் தங்கிவாழ்வோர் விகித அதிகரிப்பினாலும் ஏற்படும் பொருளாதாரத் தாக்கம் 8

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (சனவரி - செப்டெம்பர் 2025) 35

### இணைப்புகள்

இணைப்பு I 2025.08.31 வரையில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் உத்தரவாதகடிதங்கள் பற்றிய நிலுவை விபரப்பட்டியல் 87

இணைப்பு II பேரினப் பொருளாதார குறிகாட்டிகள் 89

இணைப்பு III வருமான மதிப்பீடுகளுக்கான அனுமானங்கள் - 2026 97

முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2024 | 2025 |
| **மெய்த் துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் அரையாண்டு | % | 4.6 | 4.8 |
| விவசாயம் | முதல் அரையாண்டு | % | 1.8 | 0.6 |
| கைத்தொழில் | முதல் அரையாண்டு | % | 10.5 | 7.9 |
| சேவைகள் | முதல் அரையாண்டு | % | 2.3 | 3.3 |
| பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) – CCPI (2021=100) | செப் இறுதி | % | -0.5 | 1.5 |
| பணவீக்கம் (சராசரி) – CCPI (2021=100) | செப் இறுதி | % | 2.4 | -1.4 |
| வேலையின்மை வீதம் | முதலாம் காலாண்டு | % | 4.5 | 3.8 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | முதலாம் காலாண்டு | % | 47.1 | 49.7 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன -ஆக | ரூபா. பில். | 911 | 411 |
| மொத்த வருமானம் | சன -ஆக | ரூபா. பில். | 2,558 | 3,295 |
| வரி வருமானம் | சன -ஆக | ரூபா. பில். | 2,349 | 3,068 |
| வரியல்லாத வருமானம் | சன -ஆக | ரூபா. பில். | 209 | 226 |
| மொத்த செலவினம் | சன -ஆக | ரூபா. பில். | 3,477 | 3,712 |
| மீண்டெழும் செலவினம் | சன -ஆக | ரூபா. பில். | 3,042 | 3,381 |
| அரசாங்க முதலீடு | சன -ஆக | ரூபா. பில். | 455 | 339 |
| அரசாங்க படுகடன் | செப் இறுதி | ரூபா. பில். | 28,563 | 29,635 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 8,506 | 9,077 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 1,804 | 2,030 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 6,666 | 7,015 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 3,365 | 3,595 |
| ஏனையவை | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 3,301 | 3,420 |
| இறக்குமதிகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 12,073 | 13,341 |
| நுகர்வுப் பொருட்கள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 2,176 | 3,295 |
| இடைநிலைப் பொருட்கள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 7,750 | 7,437 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 2,897 | 2,521 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 2,140 | 2,597 |
| வர்த்தக மீதி | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | -3,566 | -4,264 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன -ஆக | எண். | 1,362,668 | 1,566,523 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 2,167 | 2,290 |
| தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் | சன -ஆக | ஐ.அ.டொ.மில் | 4,288 | 5,116 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | யூன் இறுதி | ஐ.அ.டொ.மில் | -26 | 557 |
| மொத்த சென்மதி நிலுவை | சன - யூன் | ஐ.அ.டொ.மில் | 1761 | 522 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | ஆகஸ்ட் இறுதி | ஐ.அ.டொ.மில் | 5,654 | 6,178 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | செப் இறுதி | ஐ.அ.டொ. ஒன்றிற்கான ரூபா | 299.36 | 302.61 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன -செப் | ஐ.அ.டொ. ஒன்றிற்கான ரூபா | 301.15 | 302.20 |
| **நாணயத்துறை** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) | ஆகஸ்ட் இறுதி | % | 8.25 | 7.25 |
| துணைநில் கடன் வசதி வீதம் (SLFR) | ஆகஸ்ட் இறுதி | % | 9.25 | 8.25 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | செப் இறுதி | % | 2.00 | 2.00 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் - வாராந்தம் (AWPR) | ஆகஸ்ட் இறுதி | % | 9.13 | 8.10 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (91 நாட்கள்) | ஆகஸ்ட் இறுதி | % | 9.49 | 7.58 |
| திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (364 நாட்கள்) | ஆகஸ்ட் இறுதி | % | 10.01 | 8.03 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | 2023 ஆகஸ்ட் / 2024 ஆகஸ்ட் | % | 9.3 | 10.7 |
| தனியார துறை கடன் வளர்ச்சி | 2023 ஆகஸ்ட்/ 2025 ஆகஸ்ட் | % | 8.7 | 20.5 |

## 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | நோக்கம் | இணக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 11 | நிதிச் செயல்நுணுக்கக் கூற்றினைச் சமர்ப்பித்தல்* | அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம் பற்றிய முறையான கூற்றொன்றை பாராளுமன்றத்திற்கும் பொது மக்களுக்கும் வழங்குதல், எதிர்வரும் வருடாந்த வரவு செலவுத்திட்டத் திற்கான மூலோபாய வழிகாட்டலை வழங்குதல், அரசிறைச் செயலாற்றுகையை பாரநிலையாக மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையொன்றை நிறுவுதல், அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயத்திற்கு எதிரான செயலாற்றுகை பற்றிய பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்தல் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 11(4) இன் பிரகாரம் அரசிறை வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தல். | அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் யூன் முப்ப தாம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நிதிச் செயல்நுணுக்கக் கூற்று நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். |
| பிரிவு 49 | வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை அறிக்கையை சமர்ப்பித்தல்* | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 49 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலைமையில் பொருள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து அரசாங்க முடிவுகள் மற்றும் அனைத்து பிற சூழ்நிலைகளையும் பற்றிய தகவல்களை வழங்குதல். | ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நிர்ணயிக்கப் பட்ட தினத்தன்று நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டதன் பின்னர் நிதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் அறிக்கை வெளியிடப் படும். |
| பிரிவு 50 | மத்திய ஆண்டு அரசிறை நிலைமை அறிக்கையை சமர்ப்பித்தல்* | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 50 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கம் உட்பட அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதன் அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையை பொதுமக்களுக்கு வழங்குதல். | நிதி அமைச்சின் இணையத்தளத்தில், உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் கடைசி நாளுக்குள் அல்லது உரிய ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பத்து மாதங்கள் கழிந்தால், இவற்றில் எது பிந்தியதோ அத்தினத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் அத்துடன் அவ்வாறான அறிக்கையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் அல்லது அறிக்கை வெளியிடப்பட்ட திகதியில் பாராளுமன்றம் அமர்வில் இடம்பெறாவிடின், அத்தகைய அறிக்கையினை பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கச் செய்தல். |

| பிரிவு | தேவைப்பாடு | நோக்கம் | இணக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 51 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையை சமர்ப்பித்தல் (வருடாந்த அறிக்கை)* | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட தொடர்புடைய நிதியாண்டிற்கான அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் வருடாந்த அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொது மக்களுக்கு ஒரு அடிப்படையை வழங்குதல். | நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்கு மிகாமல் நிதி அமைச்சரின் அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும் மற்றும் அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 52 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலை அறிக்கை சமர்ப்பிப்பு ** | பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 52(2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல். | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தலொன்றை நடத்துமாறு கோரும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்கு வெளியிடப்படுதல் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. நிதியமைச்சர், திறைசேரியின் செயலாளருக்கு அறிக்கையைத் தயாரிப்பதற்கு இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பொருண்சார் நிதிசார் அல்லது பொருளாதாரத் தாக்கங்களைக் கொண்ட, அல்லது கொண்டிருக்கக்கூடிய அவரது அறிவுக்குட்பட்ட அனைத்து அரசாங்கத் தீர்மானங்கள் மற்றும் பிற சூழ்நிலைகள் பற்றிய விபரங்களை செயலாளருக்கு வெளிப்படுத்துதல் வேண்டும். |
| பிரிவு 53 | நிதி அமைச்சரின் அமைச்சின் நிதி செயலாற்றுகை மீதான அறிக்கைகளை சமர்ப்பித்தல்* | அரசின் வருமானம் மற்றும் செலவினங்கள் உள்ளிட்ட நிதி செயல்பாடு குறித்த அறிக்கை அளித்தல். | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததன் பின்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் ஒரே நேரத்தில் நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட வேண்டும். |

* நிதி அமைச்சரால்

** திறைசேரியின் செயலாளரால்

## இணக்கம் - 2025/2026

- **இறுதி நிலை வரவு செலவுத் திட்ட அறிக்கை - 2025**

  2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 51 (1) ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரினால் வருடாந்த அமைச்சின் அறிக்கையின் ஒரு பகுதியாக இறுதி நிலை வரவு செலவுத் திட்ட அறிக்கை - 2025 ஜுன் 30 ஆம் திகதியன்று நிதி அமைச்சரால் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது

- **நிதி செயல் நுணுக்கக் கூற்று - 2026**

  2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் படி, நிதி செயல் நுணுக்கக் கூற்று 2025 யூன் முப்பதாம் திகதி நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. நிதி அமைச்சரால் அறிவிக்கப்பட்டவுடன் நிதி அமைச்சரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் 2025 யூன் முப்பதாம் நாளன்று நிதி செயல் நுணுக்கக் கூற்று வெளியிடப்பட்டது

- **மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை - 2025**

  முதல் ஆறு மாதங்களுக்கான நிதி மற்றும் பொருளாதார நிலைமை 2025 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது

- **இந்த வரவு செலவுத் திட்டம், பொருளாதார மற்றும் நிதி நிலைமை அறிக்கை - 2026**

  இந்த அறிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவு மற்றும் அரசாங்க கடன், மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை, மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளின் உணர்திறன் தொடர்பான அறிக்கை மற்றும் அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் பொருளாதார அல்லது பிற அடிப்படையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்களுக்கிடையில், அரசிறை நிலைமையின் மீது பொருண்மிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகள் என்பவற்றை நடைமுறைக்கு சாத்தியமான அளவுக்கு அளவிடப்பட்ட ஒரு கூற்று என்பவற்றை உள்ளடக்கி நவம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

## வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2026

இந்த அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி I நடுத்தர கால அரசிறை மூலோபாயத்தை முன்வைக்கிறது. பகுதி II 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி சார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் மீது பொருண்மிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து அரசாங்க தீர்மானங்தள் மற்றும் பிற அனைத்து சூழ்நிலைகள் பற்றிய அறிக்கையை முன்வைக்கிறது.

# பகுதி I

# நடுத்தர கால அரசிறை மூலோபாயம்

# 01

## 1.1 மேன் நோக்கு

அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட தீர்க்கமான மற்றும் தொலைநோக்கு கொள்கை மறுசீரமைப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இது பேரினப் பொருளாதார குறிகாட்டிகளினால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பொருளாதாரம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8 சதவீதத்தினால் விரிவடைந்தது. பதினொரு மாதகால பணவாட்டத்திற்குப் பின்னர், 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் பணவீக்கம் நேர்மறையாக மாறியது. அமெரிக்க வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறை மீள்தன்மையுடன் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத இறுதியில் மொத்த அந்நியச்செலாவணி இருப்பு 6.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரிவருமானம் 14.8 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்படாத மிக உயர்ந்த ஆரம்ப மிகை ஆகும். இதற்கு உள்நாட்டு பெறுமதிசேர் வரிச் சேகரிப்பு, வருமான வரி மற்றும் குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மீதான வரிகள் ஆதரவளித்திருக்கின்றன. சர்வதேச நாணய நிதியம் (IMF) நிர்ணயித்த 2.3 சதவீதம் ஆக இலக்கிடப்பட்ட ஆரம்ப மிகையின் அதிகப்படியான செயல்திறன், கடன் சேவைச் செலவுகளைக் குறைக்க உதவியதுடன், கடன் இயக்கவியலை மேம்படுத்தியுள்ளது. கடன் மறுசீரமைப்பு செயன்முறை பெரும்பாலும் கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதை நோக்கி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் விரிவான ஊழல் எதிர்ப்பு இயங்குகையானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தியுள்ளது. இது விரைவான பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்ற மிகவும் எதிர்வுகூறக்கூடிய கொள்கை சூழலை உறுதிப்படுத்துகின்றது.

2024 ஆம் ஆண்டு செப்டெம்பரில் அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து ஒரு வருடத்திற்குள் இலங்கையின் பொருளாதார, அரசியல் மற்றும் ஆட்சிக் கட்டமைப்புக்களை புத்துயிர் பெறச் செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளது. அரசாங்கம் விரைவான மறுசீரமைப்புக்களுக்கான உறுதியான அர்ப்பணிப்பு மூலம், பிரஜைகள் மற்றும் சர்வதேச ரீதியான அபிவிருத்திப் பங்காளிகளின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்தமை மட்டுமல்லாமல், பெரும்பாலும் அவற்றையும் விஞ்சி செயற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த ஈடு இணையற்ற அர்ப்பணிப்பு, குறிப்பிடத்தக்க குறுகிய காலத்திற்குள் இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பை ஒரு புதிய அரசியல் மற்றும் பொருளாதார மாதிரியாக மாற்றியமைத்துள்ளது. இதனால், பொருளாதாரத்தின் அனைத்துப் பங்குதாரர்களும் தற்போது இந்த மறுசீரமைப்புக்களின் பலன்களை அறுவடை செய்துவருகின்றனர். இவை நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரை அதிக பலனைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு ஒரு பெரிய தடையாக அடையாளம் காணப்பட்டுள்ள ஊழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் முழுமையாக உறுதி பூண்டுள்ளது. தற்போதுள்ள இலக்கிய மதிப்பாய்வுகளின்படி ஊழல் பாதிப்புகளைக் குறைப்பது பொருளாதார வளர்ச்சியில் நேர்மறையான விளைவைக் கொண்டுள்ளது. எனவே, நிதி நிருவாகம், பணச்சலவைத் தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் (AML/CFT), ஊழல் எதிர்ப்புச் சட்டம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மத்திய வங்கியின் சுயாதீனம் ஆகிய துறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக அரசாங்கம் விரிவான மறுசீரமைப்புத் தொடரை மேற்கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆளுகை கண்டறிதல் மதிப்பீட்டின் (GDA) முக்கிய பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. பூர்வாங்க ஆட்சி மறுசீரமைப்புக்கள் இலங்கையின் வருமானப் பரம்பல் மற்றும் கடன் இயக்கவியலை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசிறை ஆளுகை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு (CIABOC) உறுப்பினர்களை நியமிப்பதற்கான, திறமை அடிப்படையிலான மற்றும் சுயாதீனமான செயல்முறை, வினைத்திறனான மற்றும் பொதுமக்கள் அணுகக்கூடிய சொத்து வெளிப்படுத்தல் முறைமை மற்றும் வெளிப்படையான பெறுகை செயல்முறை ஆகியவற்றை இந்த மறுசீரமைப்புக்கள் உள்ளடக்கியுள்ளன. பகிரங்கமாக அணுகக்கூடிய வகையில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளவும், சமர்ப்பிக்காதவர்களின் விபரங்களை வெளியிடவும், வெளிப்படுத்தல் தேவைகளை விரிவுபடுத்தவும் மேலும், வெளிப்படையான கணக்கு மற்றும் சொத்துத் தகவல்களை வழங்கும் வகையிலும் சொத்து வெளிப்படுத்தல் முறைமையானது மெருகூட்டப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் மூலம் குற்றவியல் சொத்துக்களை முடக்கவும், பறிமுதல் செய்யவும் மற்றும் நிருவகிக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டம் (NACAP) 2025-2029, முன்னெச்சரிக்கை, கல்வி மற்றும் சட்ட மறுசீரமைப்புக்களை கோடிட்டுக் காட்டுகின்ற அதேவேளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழவின் சுயாதீனம் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆளுகை மறுசீரமைப்புக்களின் நீடித்த வெற்றிக்கு மிக உயர்ந்த அரசியல் ஆதரவு இருப்பதால், எதிர்பார்க்கப்படும் நன்மைகள் நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரை நிலைத்திருக்க வாய்ப்புள்ளது.

மறுசீரமைப்புக்களின் தாக்கத்திற்கு எதிர்ப்பாற்றல் (Vulnerability) குறைந்த மக்கள் மீதான சுமையைக் குறைக்க, இலக்கு வைக்கப்பட்ட சமூக ஆதரவு நடவடிக்கைகளுடன் விரிவான அரசிறை மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புக்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவுகளை அரசாங்கம் அதிகரித்ததுடன் முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்த அதேவேளை அத்தகைய குடும்பங்களின் பாடசாலை சிறுவர்களுக்கான எழுதுகருவிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்தது. இந்த அதிகரித்த இலக்கிடப்பட்ட உதவியானது சர்வதேச நாணய நிதியத்தின் (IMF-EFF) விரிவாக்கப்பட்ட

நிதி வசதியின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதியில் இலக்கை அடைந்து, 2025 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத இறுதியில் இலக்கின் சரியான பாதையில் பயணித்து முதன்முறையாக சமூக செலவின மைல்கற்களை அடைய உதவியது. இத்தகைய சமூக செலவினம் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 230 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பயனாளிகள் தொடர்பான திருத்தங்கள் 2026 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் முடிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இது வெளிப்படைத்தன்மையை மேலும் மேம்படுத்துதல், இரு தடவை உள்ளடக்கப்படுவதை நீக்குதல், மற்றும் நன்மைகள் மிகவும் தேவைப்படுபவர்களை சென்றடைதல் ஆகியவற்றை உறுதிசெய்யும். இதற்கிடையில், மனித மூலதன மேம்பாட்டில் வலுவான கவனம் செலுத்துவதை பிரதிபலிக்கும் வகையில், மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மஹாபொல உதவித்தொகைகள் மற்றும் உதவிக்கொடுப்பனவுகள் மேம்படுத்தப்பட்டன. மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலின் மையமாக சமூகப் பாதுகாப்பு மறுசீரமைப்பு உள்ளது. மேலும், தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயம் நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கான நீண்டகால, ஒருங்கிணைந்த சட்டகத்தை வழங்கும். பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, ஓய்வூதியங்கள், அஸ்வெசும, உரம், மருந்துகள் உள்ளிட்ட அனைத்து வீட்டுத்துறை மானியங்கள் உட்பட மொத்த நலன்புரிச் செலவு 2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 16.2 சதவீதம் அதிகரித்து ரூபா 731.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 629.8 பில்லியனாக இருந்தது.

அரசிறைத் திரட்டு முயற்சிகள் உறுதியான பலன்களைத் தந்துள்ளன. மொத்த வருமானம் மற்றும் மானியங்களின் பங்காக வட்டிச் செலுத்துதல்கள் 2022 ஆம் ஆண்டில் 79.1 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 66.7 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், 2030 ஆம் ஆண்டிற்குள் அண்ணளவாக 42 சதவீதத்தை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் வலுவான வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கான செலவின முகாமைத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. ஆரம்ப மிகை சீராக அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டில் 114.2 சதவீதமாக இருந்த மத்திய அரசாங்கத்தின் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2024 ஆம் ஆண்டில் 96.1 சதவீதமாகக் குறைவதற்கு ஆதரவளித்திருக்கின்றது. மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 87.0 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அடைவு மட்டங்கள் வெளிநாட்டுத்துறைச் சமநிலையை வலுப்படுத்துதல், நடைமுறைக் கணக்கு நிலைமையை மேம்படுத்துதல், உள்நாட்டு கடன் அழுத்தத்தை குறைத்தல், அரசிறை நிலைபேற்றுத் தன்மையின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புதல் ஆகியவற்றை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிப்படையான கடன் மீள்கட்டமைப்பு செயல்முறை மற்றும் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை அளவீடுகள் ஆகியன இறையாண்மை மதிப்பீடுகள் மற்றும் கடன் தகுதி ஆகியவற்றை மேம்படுத்தியுள்ளதுடன் முதலீட்டாளர் நம்பிக்கையையும் வலுப்படுத்தியுள்ளன. இந்த அடைவுமட்டங்கள் வெளிநாட்டுத்துறை சமநிலையை வலுப்படுத்துதல், நடைமுறைக் கணக்கு நிலைமையை மேம்படுத்துதல், உள்நாட்டு கடன் அழுத்தத்தை குறைத்தல், அரசிறை நிலைபேற்றுத் தன்மையின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புதல் ஆகியவற்றை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபு 1.1 மொத்த வருமானத்தின் % ஆக வட்டிக் கொடுப்பனவு**




*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எண்ணியமயமாக்கல், எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமைத் (SVAT) திட்டத்தை நீக்குதல், ஏற்றுமதியாளர்களுக்கு முழுமையாக செயற்படுத்தப்படும் பெறுதிசேர் வரி திரும்பப் பெறும் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் அதியுயர் செல்வந்தர்களின் மேம்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான கணக்காய்வு போன்ற தற்போதைய வருமான நிருவாக மறுசீரமைப்புக்கள் வரி இணக்கத்தையும் நடுநிலைமைத் தன்மையையும் மேம்படுத்தும் அதே வேளையில் வரி ஏய்ப்புகளைத் தவிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் வருமான நிருவாகத்தின் எண்ணியமயமாக்கல் வரி இணக்கத்தை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், அரசாங்கம் 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தை இயற்றியுள்ளது. இது சூதாட்ட நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், வருமான சேகரிப்பை வலுப்படுத்துதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கின்ற அதேவேளை பொறுப்பான மற்றும் நியாயமான சூதாட்ட நடைமுறைகள் மூலம் சுற்றுலா, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கான ஒரு கட்டமைப்பை நிறுவுகிறது.

குறிப்பாக அரசு உடைமை நிறுவனங்களின் (SOE) மீள்கட்டமைப்பு மற்றும் பொதுச் சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றில் நிருவாக மறுசீரமைப்புக்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேறியுள்ளன. புதிய அரசு உடைமை நிறுவனச் சட்டம் தவறுகளை வலுப்படுத்தும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும் மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும். 36 அரசு உடைமை நிறுவனங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்பட்டன. மீதமுள்ள முக்கிய அரசு உடைமை நிறுவனங்கள் ஜூன் மாத இறுதிக்குள் ஆண்டுதோறும் தங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை வெளியிட உறுதிபூண்டுள்ளன. முக்கிய அரசு உடைமை நிறுவனங்களின்

பணிகள், நிறுவன நோக்க அறிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தப்படும். மேலும், அவற்றின் இயக்குநர் சபை, பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் அடிப்படையில் திருப்திகரமான முடிவுகளை வழங்குவதற்கு வகைகூறும். வலுசக்தி துறை மறுசீரமைப்புக்களில் செலவு மீட்பு அடிப்படையிலான மின்சாரக் கட்டண நிர்ணயம், இலங்கை மின்சார சபையை வேறாக்குதல், ஒழுங்குமுறை தவறுகளை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் மரபுரீதியான கடன்களை படிப்படியாக செலுத்துதல் ஆகியவை அடங்கும். அரசுடைமை வங்கிகளின் இயக்குநர் சபை ஒன்பது முதல் பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருப்பதையும், சுயாதீன இயக்குநர்களின் பெரும்பான்மையை உருவாக்குவதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பகிரங்க பெறுகை சட்டம் மற்றும் பகிரங்கச் சொத்து முகாமைத்துவ சட்டமூலம் ஆகியவை பெறுகை மற்றும் சொத்து ஒதுக்கீட்டை நவீனமயமாக்கும் என்றும், வினைத்திறனின்மை மற்றும் ஊழலைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கம்பனிகள் (திருத்தச்) சட்டம், சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப ஒரு நன்மை பயக்கும் உரிமைக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. இது நிறுவன வெளிப்படைத்தன்மை மற்றும் இணக்கத்தை மேம்படுத்துகின்றது.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுடனான மூலோபாய கூட்டாண்மைகளில் கவனம் செலுத்தி, அடுத்த ஆண்டில் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) ஈர்க்க அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது. திருத்தப்பட்ட மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் (SDP) மற்றும் துறைமுக நகரச் சட்டங்களின் கீழ் வெளிப்படையான மற்றும் விதி அடிப்படையிலான பொறிமுறைகள் மூலம் முதலீட்டு ஊக்கத்தொகைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய ஏற்றுமதி மூலோபாயம் மற்றும் தொடர்ச்சியான சுதந்திர வர்த்தக பேச்சுவார்த்தைகளுடன் இணைந்து, பாரா-தீர்வை நியாயப்படுத்தல், சுங்கத் துறையை நவீனமயமாக்கல் மற்றும் ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் உள்ளிட்ட வர்த்தகக் கொள்கையின் மறுசீரமைப்புக்கள் மூலம், இலங்கை பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளில் அதன் ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துகிறது.

எண்ணியப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் GovPay, தேசிய சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மையம், பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உரங்களுக்கான டிஜிட்டல் உறுதிச்சீட்டுக்கள் மற்றும் தூதரகங்கள் வழியாக பிரஜைகள் ஆவணங்களை நிகழ்நிலையில் அணுகுதல் போன்ற முயற்சிகள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 5G தொழில்நுட்பத்தின் வெளியீடு இணைப்பை மாற்றுதல் புத்தாக்கங்களை தூண்டுதல் மற்றும் முன்னேற்றமடைந்த டிஜிட்டல் சேவைகளை உருவாக்க இடமளிக்கும். அரசாங்கம் முழுமையாக பணமில்லா, காகிதமில்லா மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் அனைத்து பிரஜைகளும் சேவைகளையும் மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்களையும் அணுகுவதை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

2024 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பொருளாதார நிலைமாற்றச் சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு அரசாங்கம் முழுமையாக உறுதிபூண்டுள்ளது. இது கவனம் செலுத்தப்பட்ட மற்றும் வளர்ச்சி நோக்கிய திருத்தச் சட்டங்களால் ஆதரவளிக்கப்படுகிறது. இதற்கிடையில், உட்கட்டமைப்பு மற்றும் பொதுச் சேவைகளில் தனியார் துறையினர் ஈடுபடுவதற்கான சட்டரீதியான கட்டமைப்பை உருவாக்க பொது-தனியார் பங்குடமை சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொது-தனியார் பங்குடமை சட்டம் ஆனது பொது-தனியார் திட்டங்களுக்கான செயல்முறையை நெறிப்படுத்தி வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் அதே வேளையில், அபிவிருத்திக்கு அதிகம் தேவைப்படுகின்ற முன்னுரிமைப் பரப்புகளுக்கான தனியார் மூலதனத்தை ஈர்க்கும். அனைத்தும் உள்ளடக்கிய வளர்ச்சி, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீள்தன்மை ஆகியவற்றை ஊக்குவிக்க வலுவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, குறைந்த வேலையின்மை வீதம், அதிக பெண் தொழிலாளர்படை பங்கேற்பு, ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி, நிலைபேறான அரசிறைச் சமநிலைகள், விவசாயத்தை நவீனமயமாக்குதல், டிஜிட்டல் பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல், 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர-பூஜ்ஜிய உமிழ்வை அடைதல் மற்றும் வறுமையைக் குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு அரசாங்கம் ஏற்கனவே பூர்வாங்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மறுசீரமைப்புக்கள் மூலம், அரசாங்கம் நடுத்தர காலத்தில் 6-8 சதவீத நிலைபேறான வளர்ச்சி வீதத்தை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது. இது மேம்பட்ட உற்பத்தித்திறன், பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் மற்றும் துடிப்பான தனியார்துறை ஆகியவற்றால் உந்தப்படும். நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல், முறைமையான வேலைவாய்ப்பை ஊக்குவித்தல் மற்றும் வளர்ந்து வரும் தொழிற்துறை தேவைகளுடன் குறிப்பாக தொழில்நுட்பம், உற்பத்தி, விநியோகச் செயன்முறை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி ஆகியவற்றில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியை இணைப்பதை தொழிற்சந்தை மறுசீரமைப்புக்கள் நோக்கமாகக்

கொண்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி, டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் பசுமைப் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் அதே வேளையில் அரசிறை மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை மேம்படுத்தும்.

இந்த விரிவான நடவடிக்கைகள், மீள்தன்மை கொண்ட அனைத்தும் உள்ளடக்கிய மற்றும் முன்னோக்கிச் செல்கின்ற பொருளாதாரத்திற்கு அடித்தளமிடுகின்றன. அரசிறை ஒழுங்கை நிலைநிறுத்துதல், நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் பரந்த அடிப்படையிலான வளர்ச்சியை ஊக்குவித்தல் போன்றவறின் மூலம், நாட்டின் புதுப்பிக்கப்பட்ட வளர்ச்சி உந்துதலிலிருந்து ஒவ்வொரு இலங்கையரும் பயனடைவதை அரசாங்கம் உறுதிசெய்கிறது.

**கட்டம் 1.1 : இலங்கையின் வயதுக் கட்டமைப்பு மாற்றத்தினாலும் தங்கிவாழ்வோர் விகித அதிகரிப்பினாலும் ஏற்படும் பொருளாதாரத் தாக்கம்**

**(i) அறிமுகம்**

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட "15 ஆவது மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு 2024" இன் படி, இலங்கையின் குடித்தொகை 2012 இல் 20.4 மில்லியன் மக்களிலிருந்து 2024 இல் 21.8 மில்லியன் மக்களாக அதிகரித்துள்ளது. இது 0.5 சதவீதமான மிகக் குறைந்த சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதத்தை பிரதிபலிக்கிறது. முந்தைய 0.7 சதவீத விகிதத்திலிருந்து இந்த மந்தநிலை ஒரு குறிப்பிடத்தக்க குடித்தொகை நிலைமாற்றத்தை எடுத்துக்காட்டுவதுடன் எதிர்காலத்திற்கான ஆழமான பொருளாதார தாக்கங்களையும் குறித்துநிற்கின்றது.

**(ii) பகுப்பாய்வு**

இந்த பகுப்பாய்வு குடித்தொகை நிலைமாற்றத்தின் போக்குகளையும் அதைத் தொடர்ந்து வரும் பொருளாதார சவால்கள் மற்றும் வாய்ப்புகளையும் எடுத்துக்காட்டுகிறது.

**வரைபு 1 : சனத்தொகை அளவும் சனத்தொகை வளர்ச்சியும் (1871-2024)**




*மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**வரைபு 2 : வயதுக் கட்டமைப்பில் மாற்றம் (1946 - 2024)**




*மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**இலங்கையின் நீண்டகால குடித்தொகை நிலைமாற்றம் (1946-2024)**

| வயதுக் குழு | 1946 இல் பங்கு (%) | 2024 இல் பங்கு (%) | போக்குப் பகுப்பாய்வு | பொருளாதார தாக்கங்கள் |
|---|---|---|---|---|
| சிறுவர்கள் (0-14 வயது) | 40–42% | ≈20% | நிலையான, கூர்மையான சுருங்கல் | எதிர்கால தொழிலாளர் விநியோகத்தைக் குறைத்தல் |
| வேலை செய்யும் வயது (15-59 வயது) | ≈52% | ≈61% | உச்சமாக உள்ளது, தற்போது நிலையாக உள்ளது | மக்கள்தொகை வருமானம் முடிவுக்கு வந்து, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம். |
| முதியவர்கள் (60+ வயது) | ≈5% | ≈18% | 2001 இற்குப் பிறகு விரைவான, துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சி | முதுமை சார்ந்திருத்தல் அதிகரிப்பது நிதி இடத்தின் மீதான சுமையை அதிகரிக்கும். |

**கட்டம் 1.1 : இலங்கையின் வயதுக் கட்டமைப்பு மாற்றத்தினாலும் தங்கிவாழ்வோர் விகித அதிகரிப்பினாலும் ஏற்படும் பொருளாதாரத் தாக்கம் (தொடர்ச்சி)**

**(அ) இளைஞர் அடித்தளத்தில் குறிப்பிடத்தக்க சுருக்கம் (0-14 வயது)**

வரைபு 2 ஆனது 0-14 வயதுடைய குழந்தைகளின் விகிதத்தில் கூர்மையான மற்றும் தொடர்ச்சியான சரிவைக் காட்டுகிறது. மேம்பட்ட கல்வி மற்றும் தாமதமான திருமணங்கள் போன்ற சமூக முன்னேற்றங்களுடன் சேர்ந்து, கருவுறுதல் விகிதங்களில் தொடர்ச்சியான வீழ்ச்சியே இந்த குடித்தொகைப் போக்கிற்கான மூல காரணங்களாகும். இன்று மக்கள்தொகையில் குறைவான குழந்தைகளின் நுழைவு, எதிர்வரும் தசாப்தங்களில் தொழிலாளர் படையில் நுழைபவர்களின் எண்ணிக்கை குறைவதற்கான அறிகுறியாகும். இதன் விளைவாக தொழிலாளர் விநியோக வளர்ச்சியின் வேகம் குறைகிறது. இது உற்பத்தித்திறன் மேம்பாட்டால் கவனிக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் விரிவான நெருக்கடிக்கு இட்டுச்செல்லும்.

**(ஆ) வேலை செய்யும் வயது மக்கள் தொகையை நிலைப்படுத்துதல் (15-59 வயது)**

2012 முதல் 2024 வரையிலான சமீபத்திய தரவுகள், இலங்கையின் வேலை செய்யும் வயது மக்கள்தொகையில் ஒரு தனித்துவமான மற்றும் அதன் விளைவாக நிலைப்படுத்தும் போக்கைக் காட்டுகின்றன. இந்தக் குழு 2012 இல் மக்கள்தொகையில் 62.4 சதவீதமாக இருந்ததுடன், 2024 இல் 61.3 சதவீதமாகக் சற்றுக் குறைந்துள்ளது. இந்த நிலைப்படுத்தல் போக்கு, இலங்கை 1960 களில் இருந்து 2000 கள் வரை அனுபவித்த அதன் மக்கள்தொகை வருவாயின் முடிவை நெருங்கி வருவதை உறுதிப்படுத்துகிறது. மக்கள்தொகை வருவாய்கள் முடிவடைவதால், அதிக சேமிப்பு, மூலதனக் குவிப்பு மற்றும் உழைப்பால் இயக்கப்படும் பொருளாதார விரிவாக்கம் ஆகியவை விரைவாகக் குறைவடையும். அதன்படி, “செல்வந்தராவதற்கு முன்னர் வயதாகிவிடுதல்” என்ற அபாயத்தைக் குறைக்க கட்டமைப்பு நவீனமயமாக்கலுக்கான உடனடி கவனம் தேவையாகும்.

**(இ) முதியோர் மக்கள் தொகையின் வேகவளர்ச்சி (60+ வயது)**

1946 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 5 சதவீதமாக இருந்த முதியோர் மக்கள்தொகையின் பங்கு 2024 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 18 சதவீதமாக அதிகரித்தது. வரைபு 2, முதியோர் மக்கள்தொகை வளர்ச்சியின் கூர்மையான மேல்நோக்கிய பாதையை விளக்குவதுடன் 2001 இற்குப் பிறகு குறிப்பிடத்தக்க வேகவளர்ச்சியினையும் காட்டுகிறது. இந்தப் போக்கு முதன்மையாக அதிகரித்த ஆயுட்காலத்தால் இயக்கப்படுகிறது. 70 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்களை விட அதிக நீண்ட ஆயுளைக் கொண்டுள்ளனர் என்ற முதுமையின் பெண்மயமாக்கல், காலப்போக்கில் அதிகரித்து வருகிறது. மேலும் இந்தப் போக்கு அரசாங்கத்தின் மீது நீண்டகால செலவுச் சுமையை அதிகரிக்கிறதுடன், இதனால் நிதி நெருக்கடி ஏற்படுகிறது. ஒட்டுமொத்த முதுமைப் போக்கு, முதியோர் சார்புநிலையை அதிகரிப்பதன் மூலமும், தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தைக் குறைப்பதன் மூலமும், எதிர்கால ஓய்வூதியங்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு செலவினங்களை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதார நிலப்பரப்பை கணிசமாக பாதிக்கும்.

**முடிவுரை**

இந்த குடித்தொகை நிலைமாற்றத்தினால் எழும் உடனடி சவால், முதியோர் தங்கிவாழும் விகிதத்தின் விரைவான அதிகரிப்பாகும். இது சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைப்புகளில் முன்னெப்போதும் இல்லாத நிதி அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன், இதனால் தேசிய சேமிப்புகளை அரிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். நிலையான வளர்ச்சியை அடையவும், வயதானதால் ஏற்படும் கட்டமைப்பு மந்தநிலையைக் குறைக்கவும் இலங்கை அவசரமாக முன்னெச்சரிக்கை மற்றும் ஒருங்கிணைந்த சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டும். இத்தகைய சீர்திருத்தங்களில், பயன்படுத்தப்படாத பெண் தொழிலாளர் இருப்புக்களை பயன்படுத்துதல், பராமரிப்புப் பணியாளர்களை அத்தியாவசிய பொருளாதார உட்கட்டமைப்பாக அங்கீகரித்தல், வளர்ந்து வரும் “முதியவர்களின் தேவைகளில் முழுமையாக கவனம் செலுத்துகின்ற வயது சார்ந்த சந்தை - வெள்ளி பொருளாதாரம்”, மற்றும் மூலோபாய முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் ஓய்வூதிய வயதை அதிகரிப்பதில் கொள்கை திருத்தம் ஆகியவற்றிலுள்ள பின்னடைவுகளை சரிசெய்தல் ஆகியவை அடங்கும்.

## 1.2 பேரினப் பொருளாதார அரசிறை செயலாற்றுகை

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவான 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பொருளாதாரம் 4.8 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த வளர்ச்சி விவசாயம், கைத்தொழில், சேவைகள், வரிக்குறைப்பு மானியங்கள் ஆகிய அனைத்து முக்கிய துறைகளிலும் ஏற்பட்ட நேர்மறையான செயலாற்றுகையால் ஆதரவளிக்கப்பட்டது. விவசாயத் துறையின் 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 0.6 சதவீதம் ஓரளவு அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் கைத்தொழில்துறை மிதமான விகிதத்தில் 7.9 சதவீதமாக விரிவடைந்தது. இது

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 10.5 சதவீதமாக காணப்பட்டது. அதேவேளை, சேவைகள் துறை 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 3.3 சதவீதமாக மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2.3 சதவீதமாக காணப்பட்டது. பொருட்கள் மீதான வரிக் குறைப்பு மானியங்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில 10.6 சதவீதம் அதிகரித்துள்ளன. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 6.4 சதவீதமாக காணப்பட்டது. உற்பத்தி கொள்முதல் மேலாளர் குறியீடு 55.2 ஆகவும், சேவைகள் கொள்முதல் மேலாளர் குறியீடு 68.9 ஆகவும், கட்டுமான கொள்முதல் மேலாளர் குறியீடு 61.1 ஆகவும் காணப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்கான இலங்கையின் கொள்முதல் மேலாளர் குறியீடு (PMI) பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை பிரதிபலித்தது. இது மூன்று துறைகளிலும் வலுவான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

நீண்ட காலத்தில் அதிக ஏற்ற இறக்கம் இருந்தபோதிலும், இந்த ஆண்டில் அதிக தீர்வைச் சீராக்கங்களில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, உலகளாவிய பொருளாதார வளர்ச்சி அண்மைய காலத்தில் மிதமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (WEO) உலகளாவிய வளர்ச்சி கணிப்புக்களை மேல்நோக்கித் திருத்தியுள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு 1.5 சதவீத வளர்ச்சியும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு 4 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியும் முறையே எதிர்பார்க்கப்பட்டு உலகளாவிய வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 3.1 சதவீதமாகவும் மெதுவடையும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. அமெரிக்க தீர்வை விதிப்பு மற்றும் அதிக கடன் குவிப்பு, தொழிலாளர் வழங்கல் அதிர்ச்சிகளுடன் அரசிறை மற்றும் நிதிப் பலவீனங்கள் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியைத் தடுக்கின்றமையால் உலகப் பொருளாதார பாதிப்பு அதிகரித்துள்ளது. பொருளாதாரங்களிற்கிடையில் சில மாறுபாடுகளுடன் உலகளாவிய பணவீக்கம் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (WEO) ஆனது எதிர்பாராத அதிர்ச்சிகளைத் தாங்கும் வகையில் நிதி இடையகங்களை மீண்டும் கட்டியெழுப்புகின்ற அதேவேளை நம்பிக்கையை மீட்டெடுக்கவும் அதிர்ச்சிகளை எதிர்கொள்ளவும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை இரட்டிப்பாக்குவதுடன் அனைத்து பரப்புக்களிலும் நிலைபேறான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை 2025 ஆம் ஆண்டில் வருமான அடிப்படையிலான அரசிறைத் திரட்டு செயல்முறையைத் தொடர்ந்தது. பெறுமதிசேர் வரி (VAT), வருமான வரிகள் மற்றும் குறிப்பாக மோட்டார் வாகனங்களுக்கான வரிகள் ஆகியவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட அதிகூடிய வருமானத்தால் உந்தப்பட்டு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்க வருமானம் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது. இந்த கவர்ச்சியான வருமானச் சேகரிப்பு பிரதானமாக வரிக் கொள்கை மறுசீரமைப்புக்களின் தாக்கம் மற்றும் நிருவாக மறுசீரமைப்புக்களினை நடைமுறைப்படுத்தியமையுடன் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளில் அதிகரிப்பு மற்றும் மூன்று முக்கிய வருமானம் சேகரிக்கும் நிறுவனங்களின் எணணியமயமாக்கல் முயற்சிகள் உட்பட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் ஆகியவற்றால் உந்தப்பட்டது.

இடர் அடிப்படையிலான கணக்காய்வுகள், கணக்காய்வு வினைத்திறன், உயர் மதிப்புள்ள தனிநபர்கள் (HWI) பிரிவுக்கான அதிகரித்த இணங்கியொழுகும் நடவடிக்கைகள், பாரிய மற்றும் சிறிய வரி செலுத்துவோரிடையே வரி வருமானக்கூற்று சமர்ப்பிப்பதில் இணங்கியொழுகுதல், சேகரிக்கக்கூடிய கடனை முகாமைசெய்தல் மற்றும் பெறுமதிசேர் வரிக்கு பதிவுசெய்தல் போன்ற முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை (KPIs) அறிமுகப்படுத்துவதன் ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செயலாற்றுகையை சரியான பாதையில் செல்வதை அவதானித்து கண்காணிப்பதன் மூலம் வருமானத் திரட்டலை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிறுவன நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்த உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவை குறிப்பிடத்தக்க ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தானியங்கிப் பொறிமுறை மற்றும் எண்ணியமயமாக்கலை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் முறையான ஒழுக்கவிதிக் கோவையை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதன் இடர் முகாமைத்துவ இயலுமையையும் மேம்படுத்தியுள்ளது. இலங்கைச் சுங்கம், தானியங்கி இடர் முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துதல், உள்ளக மேற்பார்வை அலகுகளை நிறுவுதல் மற்றும் சுங்க பிரகடன (CUSDEC) கண்காணிப்பு முறைமை மற்றும் வாகன சரிபார்ப்பு நுழைவாயில் போன்ற டிஜிட்டல் தளங்களை உருவாக்குதல் உள்ளிட்ட இலக்கிடப்பட்ட மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தியள்ளது. அதேவேளை, மதுவரித் திணைக்களம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் இணைந்து நேர்மையான அதிகாரியை நியமித்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் உள்ளக விடயங்கள், இடர் முகாமைத்துவம் மற்றும் நிதி விசாரணை பிரிவுகளை நிறுவுதல் போன்ற ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பெறுமதிசேர் வரி இணக்கத்தை மேம்படுத்துவதற்காக தகுதியான ஏற்றுமதியாளர்கள் மற்றும் அவர்களின் வழங்குநர்களுக்கு பெறுமதிசேர் வரியை மீளப்பெறும் ஒரு தரமான செயல்முறையை நோக்கி நகர்த்தப்பட்டு, எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி (SVAT)

முறைமை 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் நீக்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தொடர்ச்சியான இணக்க மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டம் மூலம், பெறுமதிசேர் வரிப் பதிவுகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் காணப்பட்ட 21,542 இலிருந்து 44.5 சதவீதம் அதிகரித்து 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதிக்குள் 31,134 ஆக உயர்ந்தது. வதிவுள்ள மற்றும் வதிவற்ற நிறுவனங்களின் பதிவுகளும் 18.2 சதவீதம் அதிகரித்து, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் காணப்பட்ட 100,409 இலிருந்து 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதியில் 118,678 ஆக உயர்ந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் கொடுப்பனவுகள் உட்பட அரசாங்க வருமானம் 28.7 சதவீதம் அதிகரித்து ரூபா 3,301.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 2,565.9 பில்லியனாக காணப்பட்டது. வரி வருமானச் சேகரிப்பு ரூபா 3,068.5 பில்லியனாக குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது. இது 2025 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத இறுதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூபா 318 பில்லியனை விஞ்சியது. வருமான வரிகளிலிருந்தான வருமானம் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 12.4 சதவீதம் அதிகரித்து ரூபா 702.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 624.7 பில்லியனாக காணப்பட்டது. இது வருடாந்த வருமான மதிப்பீட்டில் 60.2 சதவீத தேறிப்பெறுகை ஆகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளிலிருந்து கிடைத்த வருமானம் 36.4 சதவீதம் அதிகரித்து ரூபா 1,939.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,421.3 பில்லியனாக காணப்பட்டது. இது பிரதானமாக பெறுமதிசேர் வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் 28.7 சதவீத அதிகரிப்பான ரூபா 1,084.2 பில்லியன் மற்றும் குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) மூலம் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் 57.6 சதவீத அதிகரிப்பான ரூபா 607.9 பில்லியன் என்பவற்றால் ஏற்பட்டதாகும். இது முழு ஆண்டு உற்பத்தி தீர்வை வருமான இலக்கான ரூபா 598.5 பில்லியனை விஞ்சியது. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 41.2 சதவீதம் அதிகரித்து ரூபா 427.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 468.8 பில்லியனாக காணப்பட்ட உள்நாட்டு நடவடிக்கைகளுக்கான பெறுமதிசேர் வரி 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 21.1 சதவீதம் அதிகரித்து ரூபா 567.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதிகளில் இருந்தான பெறுமதிசேர் வரி வருமானம், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 373.7 பில்லியனாக காணப்படதிலிருந்து 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 38.3 சதவீதம் அதிகரித்து ரூபா 516.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானத்தில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு, பிரதானமாக 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெற்ற அனைத்து வகை வாகனங்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களிலிருந்து அதிக பெறுமதிசேர் வரி வருமானச் சேகரிப்பு காரணமாக உந்தப்பட்டது.

மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 36.5 பில்லியனாக காணப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி தீர்வை வருமானம் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 234 பில்லியன் அதிகரித்து ரூபா 270.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதி தீர்வைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் குறிப்பிடத்தக்களவில் 117.5 சதவீதம் அதிகரித்து ரூபா 151.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 69.4 பில்லியனாக காணப்பட்டது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி (PAL) மற்றும் பண்ட ஏற்றுமதி வரி (CESS) ஆகியவற்றின் வருமானம் முறையே 1.7 சதவீதம் அதிகரித்து ரூபா 115.9 பில்லியனாகவும், 8.8 சதவீதம் அதிகரித்து ரூபா 56.5 பில்லியனாகவும் அதிகரித்துள்ளது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி மீதான வருமானம் அதிகரித்தமைக்கு பிரதானமாக இறக்குமதி அளவுகள் அதிகரித்ததே காரணம் ஆகும். பண்ட ஏற்றுமதி வரி (CESS) விதிக்கப்பட்ட பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான பண்ட ஏற்றுமதி வரி (CESS) விகிதங்கள் அதிகரித்ததாலும் உந்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி அல்லாத மூலங்களிலிருந்தான வருமானம் 8.1 சதவீதம் மிதமாக அதிகரித்து ரூபா 226.2 பில்லியனாக அதிகரத்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 209.3 பில்லியனாக காணப்பட்டது. இது வருடாந்த வருமான மதிப்பீட்டில் 61.1 சதவீத தேறிப்பெறுகையை பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கச் செலவினம் 6.8 சதவீதம் அதிகரித்து ரூபா 3,712.5 பில்லியனாக அதிகரத்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 3,476.9 பில்லியனாக காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடான ரூபா 7,190.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது 51.6 சதவீத செயற்படுத்தல் வீதத்தை அடைந்து, அரசாங்கச் செலவினம் இலக்கிடப்பட்ட வகையில் தொடர்ந்து காணப்படுகின்றது. மொத்தச் செலவினத்தில் 91 சதவீதமாக காணப்பட்ட மீண்டெழும் செலவினம், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 11.2 சதவீதம் அதிகரித்து ரூபா 3,381.3 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 3,041.6

பில்லியனாக காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வட்டிச் செலுத்துதல்கள் 8.2 சதவீதம் மிதமாக அதிகரித்து ரூபா 1,466.5 பில்லியனாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,559.7 பில்லியனாக காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உள்நாட்டுக் கடன் மீதான வட்டிச் செலுத்துதல்கள் 0.5 சதவீதம் சற்று அதிகரித்து ரூபா 1,687.6 பில்லியனாக அதிகரித்தது. இது மொத்த வட்டிச் செலவினத்தில் 87 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிச் செலுத்துதல்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 121.1 சதவீதம் அதிகரித்து ரூபா 221.1 பில்லியனாக அதிகரித்தது. கடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து சீன அபிவிருத்தி வங்கி, ஜப்பான் அரசு, இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி மற்றும் சர்வதேச இறையாண்மை பிணைகள் (ISBs) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான உண்மையான வட்டிச் செலுத்துதல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிச் செலுத்துதல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் பொதுத்துறையில் செயற்படுத்தப்பட்ட அடிப்படைச் சம்பள திருத்தம் காரணமாக 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான செலவு 15.3 சதவீதம் அதிகரித்து ரூபா 760.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 6.1 சதவீதம் அதிகரித்து ரூபா 210.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 198.6 பில்லியனாக காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கம் ரூபா 1,276.5 பில்லியன் ஆரம்ப மிகையைப் பதிவு செய்துள்ளது. 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தொகைச் செயல்திறன் அளவுகோலான (QPC) ரூபா 300 பில்லியனை விஞ்சியது. மேலும், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 648.8 பில்லியனில் இருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில ரூபா 627.8 பில்லியனாக விரிவடைந்துள்ளது. பேரினப் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை உறுதி செய்வதற்காக 2026 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னரும் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.1 சதவீதத்திற்கும் குறைவாகப் பேண அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பெயரளவிலான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 911.0 பில்லியனில் இருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 411.0 பில்லியனாகக் குறைவடைந்தது. இது வருமான அடிப்படையிலான அரசிறைத் திரட்டு மற்றும் செலவின நியாயப்படுத்தல்களின் வெற்றியைப் பிரதிபலிக்கின்றது. நடுத்தர காலத்தில், வருமான அடிப்படையிலான அரசிறைத் திரட்டு நடவடிக்கைகள் முழுமையாக செயற்படுத்தப்பட்டு கடன் மறுசீரமைப்பு செயன்முறை நிறைவடைவதன் மூலம் ஆரம்ப மிகை மற்றும் மொத்த மிகை என்பன மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காரணமாக அரசிறைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் பிரதானமாக உள்நாட்டு மூலங்களில் தங்கியிருந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தேறிய உள்நாட்டு நிதியிடல் ரூபா 462.9 பில்லியனாகவும், தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூபா 51.8 பில்லியனாகவும் காணப்பட்டது. புகிரங்க நிதி முகாமைத்துவச் (PFM) சட்டத்துடன் இணங்கி, வினைத்திறனை மேம்படுத்தவும் நிலைபேறான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் பொது முதலீட்டு முகாமைத்துவ மதிப்பீட்டின் (PIMA) பரிந்துரைகளை உள்ளடக்கி, நடுத்தர காலத்தில் பொது முதலீடு மூலோபாய ரீதியாக முன்னுரிமை அளிக்கப்படும்.

**வரைபு 1.2 : முக்கிய அரசிறைத் திரட்டுகள் 2022 - 2024**




2024 செப்டெம்பர் இறுதியில் ரூபா 29,402 பில்லியனாக இருந்த நிலுவையில் உள்ள மத்திய அரசாங்கத்தின் கடன், 2025, செப்டெம்பர் இறுதிக்குள் 5.2 சதவிகிதம் அதிகரித்து ரூபா 30,928 பில்லியனாக உயர்ந்துள்ளது. 2024 செப்டெம்பர் உடன் ஒப்பிடும்போது 2025 செப்டெம்பர் இறுதிக்குள் மொத்த நிலுவையில் உள்ள உள்நாட்டுக் கடன் 9.5 சதவிகிதம் அதிகரித்து ரூபா 19,660 பில்லியனாக உள்ளதுடன் நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன் 1.6 சதவிகிதம் குறைந்து ரூபா 11,268 பில்லியனாக உள்ளது.

2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதி நிலவரப்படி, அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு ஆண்டு முதல் திகதி அடிப்படையில் 3.3 சதவீதம் குறைவடைந்துள்ளது. கிட்டத்தட்ட ஒரு வருட பணவாட்டத்தைத் தொடர்ந்து, 2025 ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 2.1 சதவீதமாகவும், செப்டெம்பர் இல் 1.5 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது. மின்சாரத் தீர்வைகள், எரிபொருள் மற்றும் LP எரிவாயு விலைகளில் பல்வேறுபட்ட குறைப்புக்கள், உள்நாட்டு வழங்கலில் முன்னேற்றங்கள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் மீட்சி போன்ற வழங்கல் பக்க காரணிகளால் பணவாட்டம் பெரும்பாலும் உந்தப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் (CCPI, 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம், 11 மாத பணவாட்டத்தைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் இல் 2.1 சதவீதத்திலிருந்து

2025 ஆம் ஆண்டு செப்தெம்பரில் 1.5 சதவீதமாக அதிகரித்தது. உணவுப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) 2025 ஆம் ஆண்டு செப்தெம்பரில் 2.9 சதவீதமாக அதிகரித்த, அதே வேளை உணவு அல்லாத பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) 0.7 சதவீதத்தில் நிலையாக காணப்பட்டது. நாட்டின் நேர்மறையான பொருளாதாரக் கண்ணோட்டத்தைக் கருத்தில் கொண்டு, பணவீக்கம் அதன் இலக்கை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இலங்கை மத்திய வங்கி (CBSL) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் காணப்பட்ட 8.00 சதவீதத்தில் ஓரிரவு கொள்கை வீதத்தை (OPR) பேணுவதற்கு முடிவு செய்தது. 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓரிரவு கொள்கை வீதம் 25 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு 7.75 சதவீதமாக மாற்றப்பட்டது. இதனால் பணக் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது. அதன்படி, ஓரிரவு கொள்கை வீதத்துடன் (OPR) இணைக்கப்பட்ட துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் (SDFR) துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் (SLFR) முன்னரே தீர்மானிக்கப்பட்ட ± 50 அடிப்படை புள்ளிகள் எல்லைகளுடன் முறையே 7.25 சதவீதம் மற்றும் 8.25 சதவீதமாகக் குறைக்கப்பட்டன. தற்போதைய பணவியல் நிலைப்பாடு பணவீக்கத்தை 5 சதவீத நடுத்தர கால இலக்கை நோக்கி வழிநடத்துகின்ற அதேவேளை தற்போதைய பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒத்திசைந்து செல்வதனால், கொள்கை வீதம் இந்த மட்டத்தில் பராமரிக்கப்பட்டிருக்கின்றது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் பேரளவு அரசிறை செயலாற்றுகையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பிரதிபலிக்கும் வகையில், இலங்கையின் இறையாண்மை கடன் தரப்படுத்தல் மூன்று பிரதான சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனங்களால் தரமுயர்த்தப்பட்டன. ∴பிட்ச் ரேற்றிங்ஸ் (Fitch Ratings), மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை (Moody's Investors Service) மற்றும் S&P உலகளாவிய தரப்படுத்தல் (S&P Global Ratings) ஆகியவை நாட்டின் கடன் தரப்படுத்தல்களை முறையே CCC+, Caa1, மற்றும் CCC+ ஆக உயர்த்தின. இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதையும் நாட்டின் அரசிறை மற்றும் பொருளாதார முகாமைத்துவம் குறித்த நேர்மறையான கண்ணோட்டத்திற்கும் சமிக்ஞையை வழங்குகின்றது.

## 1.3 நடுத்தர கால அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைககள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைமுறைக்கு வந்த 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தினால் (PFMA) நிர்வகிக்கப்படுகின்றன. பகிரங்க நிதிசார் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் வெளியிடுதலுடன் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுக் கடனை நிலையான அளவில் பராமரித்தல், எதிர்கால அதிர்ச்சிகளுக்கு எதிராகப் பாதுகாக்க அரசிறை இடையங்களை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல், அரசிறை அபாயங்களை நிர்வகித்தல் மற்றும் குறைத்தல், மற்றும் அரசிறை நிர்வாகத்தில் ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்தல் போன்ற முக்கிய நோக்கங்களை அடைவதற்கான சட்ட கட்டமைப்பை இச் சட்டம் வழங்குகின்றது. மேலும், இது வருடாந்த அரசிறை மூலோபாய கூற்றை வெளியிடுவதற்கும், ஐந்து வருட நடுத்தர கால அரசிறை கட்டமைப்பை வெளியிடுவதற்கும் சட்டபூர்வமாக பிணைக்கப்பட்ட தேவையை கட்டாயப்படுத்துகிறது.

இச் சட்டத்தின் கடன் குறைப்பு நோக்கமானது முதன்மை இருப்பு இலக்கு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவாக நிர்ணயிக்கப்பட்ட முதன்மை செலவின உச்சவரம்பு மூலம் கண்காணிக்கப்படுகின்றது, இது அரசிறை மூலோபாய கூற்றில் நடுத்தர கால அரசிறை கட்டமைப்பின் கீழ் நிறுவப்படும் வட்டி அல்லாத செலவினங்களை நிர்வகிப்பதன் மூலம் இக் கட்டமைப்பு நிதி ஒழுக்கத்தை உறுதிசெய்கின்றதுடன் முதன்மை இருப்பை வலுப்படுத்தவும் கடன் குறைப்பை ஆதரிக்கவும் வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கைகளை அனுமதிக்கின்றது.

2025 ஆம் ஆண்டில் அரசாங்க வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.9 சதவீதத்தை விஞ்சும் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை அரசாங்க செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20.5 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 3.8 சதவீத முதன்மை இருப்பை அடையும் என்றும் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை 4.5 சதவீதமாகக் கட்டுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.3.1 அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம், 2026 ஆம் ஆண்டின் அரசிறை மூலோபாயக் கூற்றில் காட்டப்பட்டுள்ளபடி, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட அரசிறை விதிகளால் நிர்வகிக்கப்படும் நடுத்தர கால அரசிறை கட்டமைப்பால் (2025-2030) வழிநடத்தப்படுகிறது. 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதத்திற்கு குறையாத முதன்மை உபரியை அடைவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இதற்காக, 2025 ஆம் ஆண்டில் அரசாங்க வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 சதவீதமாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பல வருவாய் நடவடிக்கைகளை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்தியதாலும், மோட்டார் வாகன இறக்குமதியிலிருந்து எதிர்பார்த்ததை விட அதிகமான வருவாய் கிடைத்ததாலும், அரசாங்கம் அதன் 2025 ஆம் ஆண்டிற்கான வருவாய் மதிப்பீட்டை மொத்த

உள்நாட்டு உற்பத்தியில் 15.1 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.9 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்த முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், அரசாங்க வருவாய் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, அதேவேளை முதன்மை உபரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது 2.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரி நிர்வாகத்தை வலுப்படுத்த ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, வரி இணக்கத்தை அதிகரித்தல், ஊழல் பாதிப்புகளைக் குறைத்தல், வரி நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல், பயனுள்ள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, அதன் மூலம் நடுத்தர காலத்தில் அரசாங்க வருவாயை அதிகரிக்கின்றன.

அரசாங்க வருவாயை அதிகரிக்கும் அதேவேளை, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்திற்கிணங்க, அரசாங்க செலவுகள் மற்றும் முதன்மை செலவினங்களின் விவேகமான அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவாக பராமரிக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. சமூக பாதுகாப்பு வலைகள் திட்டத்தை வலுப்படுத்தும் அதேவேளை, பொருளாதாரத்தின் முக்கிய முன்னுரிமைத் துறைகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. வளர்ச்சி சார்பு நடவடிக்கைகள், விலை மற்றும் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த பொருளாதார நிலைப்படுத்தல் நடவடிக்கைகளால் அரசிறை மூலோபாயம் ஆதரிக்கப்படும்.

IMF-EFF நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் நிலைத்தன்மை இலக்குகளுக்கு ஏற்ப கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு (EDR) செயல்முறை நிறைவடையும் தருவாயில் உள்ள நிலையில், உள்நாட்டு கடன் முறைப்படுத்தலின் அனைத்து கூறுகளையும் அரசாங்கம் பூர்த்திசெய்துள்ளது. 2025 ஆம் ஆண்டில், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் (PDMO) நிறுவப்பட்டதன் மூலம் இலங்கை பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் 2025-2029 ஆம் ஆண்டுக்கான நடுத்தர கால கடன் முகாமைத்துவ மூலோபாயத்தை (MTDS) வெளியிட்டது, இது அரசாங்கத்தின் வருடாந்த கடன்பெறுகை திட்டம் (ABP) மற்றும் நடுத்தர காலத்திற்கான மூலோபாய திசையைக் கோடிட்டுக் காட்டுகிறது. திருத்தப்பட்ட நடுத்தர கால கடன் முகாமைத்துவ மூலோபாயம் (MTDS) மற்றும் வருடாந்த கடன்பெறுகை திட்டம் (ABP) என்பன 2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்துடன் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர கால கடன் முகாமைத்துவ மூலோபாயம், உள்நாட்டு நிதியுதவியை வலுப்படுத்துகின்ற அதேவேளை புதிய வெளிப்புற கடன்களை இருதரப்பு மற்றும் பலதரப்பு வளங்களுக்கு மட்டுப்படுத்துவதை வலியுறுத்துகிறது. 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதிகாரபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இலங்கை 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் அதன் முக்கிய கடன் வழங்குநர்களுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை உறுதி செய்தது. இதன் விளைவாக, சில இருதரப்பு கடன் வழங்குநர்களால் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களுக்கான கடன்கள் வழங்கத் தொடங்கியுள்ளன. இக் காலகட்டம் முழுவதும், பலதரப்பு நிதி தடையின்றித் தொடர்ந்தது, இது நாட்டின் நிதித் தேவைகளுக்கு நிலையான ஆதரவை வழங்குகின்றது.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் படி, 2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஒரு மூலோபாய வரைபடத்தை வழங்குவதற்காக, நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பு உட்பட அரசிறை மூலோபாய கூற்று 2025 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

2025 - 2030 ஆம் ஆண்டிற்கான அரசிறைப் பாதை மற்றும் அரசிறை நிலைத்தன்மையை நோக்கிய பேரினப் பொருளாதார திசை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**அரசிறைப் பாதை:**

- வலுவான வருவாயை அதிகரிக்கும் முயற்சிகள் மற்றும் அரசாங்க செலவினங்களை பகுத்தறிவுபடுத்துதல் மூலம் 2025 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2.3 சதவீத முதன்மை உபரியை அடைதல்.
- வரிக் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மூலம் 2025 மற்றும் அதற்குப் பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 15 சதவீதத்திற்கு மேல் அதிகரித்தல்.
- வளர்ந்துவரும் மற்றும் நடுத்தர வருமான நாடுகளின் தரநிலைகளுக்கு ஏற்ப, நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு நேரடி - மறைமுக வரி விகிதத்தை 25:75 இலிருந்து 40:60 ஆக அதிகரித்தல்.
- பெறுமதிசேர் வரி (VAT) இணக்க அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், முக்கிய வரிகளின் வரி இணக்கத்தை விருத்திசெய்தல் மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி (SVAT) முறைமையை முழுமையாக ரத்து செய்வதை உறுதிசெய்வதற்காக முழுமையாக தொழிற்படும் பெறுமதிசேர் வரி மீளளிப்பு முறைமையை நிறுவுதல்

- கட்டணம் செலுத்துதல், தாக்கல் செய்தல், அறிக்கையிடுதல் மற்றும் பதிவு செய்தல் தொடர்பான முக்கிய செயல் திறன் குறிகாட்டி களின் (KPIs) கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைக் கண்காணித்தல்.
- RAMIS 3.0 ஐ அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை நவீனமயமாக்குதல், தனியார் வரி தாக்கலை இலகுபடுத்துவதற்கு ஒரு நிகழ்நிலை வாயிலை அறிமுகப்படுத்துதல் மற்றும் RAMIS மூலம் அனைத்து வரி சேகரிப்புகளையும் செய லாக்குதல்.
- பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்திற் கிணங்க மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டிய நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட முதன்மை செலவின உச்சவரம்புக்குக் கீழே முதன்மை செலவினங் களை நிர்வகித்தல்.
- சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு நிவாரணம் வழங்க சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களை தொடர்ந்து வலுப்படுத்துதல்.
- 2026 மற்றும் அதற்குப் பிறகு பொது முதலீட்டை 4 சதவீதத்திற்கும் அதிகமாகப் பராமரித்தல்.
- பொது முதலீட்டை கவனமாக முன்னுரிமைப் படுத்துதல் மற்றும் வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தேர்ந் தெடுத்தல், அதேவேளை சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற முன்னுரிமைத் துறைகளுக்குச் செலவினம் போதியளவு ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல். (பகிரங்க முதலீட்டு முகாமைத்துவ மதிப்பீட்டு (PIMA) பரிந் துரையைப் பார்க்க)
- 2026 ஆம் ஆண்டளவில் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையை (ITMIS) பயன்படுத்தி மத்திய அரசாங்கத்தின் காசோலை பணம் செலுத்தல்கள் மற்றும் மின்னணு நிதிப் பரிமாற்றங்கள் செய்தல் மற்றும் இந்த அமைப்பு தயாரானதும் e-GP அமைப்பை ITMIS உடன் ஒருங்கிணைத்தல்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம் ஆகியவற்றில் வருவாய் நிர்வாக முறைமைகளையும், மதுவரித் திணைக் களத்தில் முன்மொழியப்பட்ட RASED ஐயும் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமைக்கு (ITMIS) ஒருங் கிணைத்தல்.
- 2026 மற்றும் அதற்குப் பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு குறைவாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை படிப்படியாகக் கட்டுப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் அரசாங்கத்தின் மொத்த நிதித் தேவைகளைக் குறைத்தல்
- நிலுவைத் தொகை தீர்வு மூலோபாயத்தின் பிரகாரம் 3 மாதங்களுக்கு மேல் நிலுவைத் தொகை குவிவதை நீக்குதல்.
- அரசாங்க உத்தரவாதங்களிலிருந்து வெளிப் படும் அரசிறை அபாயங்களைக் கட்டுப் படுத்தும் நோக்கில், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிலுவையிலுள்ள அரசாங்க உத்தரவாதங்களின் மொத்த இருப்பை, தொடர்புடைய நிதியாண்டு மற்றும் அதற்கு முந்தைய இரண்டு நிதியாண்டுகளின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதத்திற்கும் மிகைப்படாமல் பராமரிக்க அரசாங்க உத்தரவாதங்களை வழங்குவதைக் குறைத்தல்.
- இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) ஆகியவற்றின் சிறந்த நிதி செயல்திறனை உறுதிசெய்வதற்காக தானியங்கி எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணய பொறிமுறைகளை தொடர்ந்து செயல்படுத்துதல்
- அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOEs) நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தவும், நிர்வாகத்தை வலுப்படுத்தவும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- இலங்கை மத்திய வங்கி அறிவித்தபடி, நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கை 5 சதவீதமாகப் பராமரித்தல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரசிறைப் பாதை முதன்மையாக வரிக் கொள்கை மற்றும் வரி நிர்வாகம் மற்றும் அரசாங்க செலவினங்களின் விவேகமான முகாமைத்துவம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வருவாய் திரட்டும் மூலோபாயங்களை அடிப்படையாகக் கொண்டது. அரசிறைக் கண்ணோட்டமானது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு முயற்சிகள், ஒரு வலுவான நிறுவன கட்டமைப்பு, டிஜிட்டல் முறைமைகள் மற்றும் தரவுகளின் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட நிர்வாகம் மற்றும் வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றால் ஆதரிக்கப்படும்.

### 1.3.2 நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பு

நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பு பின்வருவன வற்றை அடிப்படையாகக் கொண்டது:

- 2025 ஆம் ஆண்டில் அரசாங்க வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக அதிகரித்தல் மற்றும் நடுத்தர காலத்தில் அதை அதிகரித்தல்
- முதன்மை செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கு குறைவாக பராமரித்தல் மற்றும் பொது முதலீடுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு மேல் பராமரித்தல்

- 2025 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 2.3 சதவீத முதன்மை உபரியை அடைதல் மற்றும் காலப்போக்கில் அதே நிலை அல்லது அதற்கு மேல் பராமரித்தல்.

- 2026 மற்றும் அதற்குப் பிறகு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை 5 சதவீதத்திற்கும் குறைவாகக் கட்டுப்படுத்துதல்.

- மத்திய அரசின் கடனை படிப்படியாகக் குறைத்து, கடனை 2026 ஆம் ஆண்டில் 96.8 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டில் 87 சதவீதமாக நிலையான நிலைக்குக் கொண்டுவருதல்.

**அட்டவணை 1.1: நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பு 2025 - 2030**

*மொ.உ.உ. சதவீதத்தில்*

| குறிகாட்டி | 2024 | 2025 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 | 2030 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தற்காலிகமான | வரவு செலவு | திருத்தப்பட்ட | எதிர்வு கூறல் | | | | |
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **13.7** | **15.1** | **15.9** | **15.4** | **15.5** | **15.5** | **15.5** | **15.5** |
| **மொத்த வருமானம்** | **13.5** | **15.0** | **15.9** | **15.3** | **15.4** | **15.4** | **15.4** | **15.5** |
| **வரி வருமானம்** | **12.4** | **13.9** | **14.8** | **14.2** | **14.4** | **14.4** | **14.3** | **14.4** |
| வருமான வரி | 3.4 | 3.5 | 3.5 | 3.5 | 3.6 | 3.6 | 3.6 | 3.7 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 7.4 | 8.4 | 9.2 | 8.9 | 8.9 | 8.9 | 8.7 | 8.7 |
| வெளிப்புற வர்த்தகத்தின் மீதான வரிகள் | 1.6 | 2.0 | 2.0 | 1.9 | 1.9 | 1.9 | 2.0 | 2.0 |
| **வரியல்லா வருமானம்** | **1.1** | **1.1** | **1.1** | **1.0** | **1.0** | **1.1** | **1.1** | **1.1** |
| **மானியங்கள்** | **0.2** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** |
| **மொத்த செலவினம்** | **20.5** | **21.8** | **20.5** | **20.5** | **20.0** | **19.8** | **19.6** | **19.4** |
| **மீண்டெழும் செலவினம்** | **17.9** | **17.8** | **17.3** | **16.5** | **15.9** | **15.7** | **15.5** | **15.2** |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 3.6 | 3.7 | 3.8 | 3.8 | 3.8 | 3.8 | 3.8 | 3.8 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் | 1.2 | 1.3 | 1.2 | 1.2 | 1.2 | 1.2 | 1.2 | 1.2 |
| வட்டி | 9.0 | 8.9 | 8.3 | 7.6 | 7.1 | 6.9 | 6.7 | 6.5 |
| மானியங்கள் மற்றும் இடமாற்றல்கள் | 4.1 | 3.9 | 4.0 | 3.9 | 3.8 | 3.8 | 3.7 | 3.7 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **2.6** | **4.0** | **3.2** | **4.0** | **4.0** | **4.1** | **4.2** | **4.2** |
| அதில் பொது முதலீடுகள் | 2.7 | 4.0 | 3.2 | 4.0 | 4.1 | 4.1 | 4.2 | 4.2 |
| **நடைமுறைக்கணக்கு மீதி** | **(4.4)** | **(2.8)** | **(1.4)** | **(1.2)** | **(0.5)** | **(0.3)** | **(0.0)** | **0.3** |
| **முதன்மை மீதி** | **2.2** | **2.3** | **3.8** | **2.5** | **2.6** | **2.6** | **2.6** | **2.6** |
| **வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை** | **(6.8)** | **(6.7)** | **(4.5)** | **(5.1)** | **(4.5)** | **(4.3)** | **(4.1)** | **(3.8)** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) திட்ட அளவு கோல்கள்*

### 1.3.3 நிதிக் கட்டமைப்பு இலக்கிலிருந்து விலகல்களை நியாயப்படுத்துதல்

**அரசாங்க வருமானம்:**

2025 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக அதிகரிப்பதும், நடுத்தர காலத்தில் அதன் வளர்ச்சியைத் தொடர்வதும் இலக்காகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருவாய் மதிப்பீடு அட்டவணை 1.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.9 சதவீதமாக அதிகரித்துள்ளது, இது ஆரம்ப வரவுசெலவு இலக்கை விட அதிகமாக உள்ளது என்பதை அட்டவணைக் காட்டுகிறது. இந்த நேர்மறையான விலகல் வரி வருவாய் செயல்திறனில் எதிர்பார்த்ததை விட அதிகமான செயல்திறன், குறிப்பாக பொருட்கள் மற்றும் சேவைகள் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2 சதவீதம்) மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிகள் ஆகியவற்றிலிருந்து, பயனுள்ள வருவாய் நடவடிக்கைகள் மற்றும் இணக்க மேம்பாடுகளை பிரதிபலிக்கின்றது. வரி தளத்தை விரிவுபடுத்துவதற்கும் வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுடன் இந்த மேல்நோக்கிய திருத்தம் ஒத்துப்போகின்றது.

**முதன்மை உபரி:**

இக் கட்டமைப்பு 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத முதன்மை உபரியை இலக்காகக் கொண்டது. திருத்தப்பட்ட அட்டவணை, 2025 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.8 சதவீத முதன்மை உபரியைக் காட்டுகிறது, இது இலக்கை விட அதிகமாகும். இந்த நேர்மறையான விலகல் பெரும்பாலும் அதிக வருவாய் திரட்டலுடன் இணைந்து மூலதனச் செலவினங்களை குறைவாக செயல்படுத்துவதன் காரணமாகும், இது எதிர்பார்த்ததை விட வலுவான அரசிறை செயல்திறனைக் குறிக்கிறது.

**வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை:**

2026 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கும் குறைவான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதே இலக்காகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதமாக உள்ளது, இது ஏற்கனவே வரம்பிற்குக் கீழே உள்ளது, இது விரைவான அரசிறைத் திரட்டலைப் பிரதிபலிக்கின்றது. இந்த இலக்கை முன்கூட்டியே அடைவது வருவாய் அதிகரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் விவேகமான செலவினக் கட்டுப்பாட்டின் செயல்திறனை நிரூபிக்கின்றது.

# பகுதி II

## வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2026

### 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

இந்த அறிக்கையானது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளில் நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவினம், அரசாங்க கடன், மேற்கூறிய மதிப்பீடுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அடிப்படை தொடர்பான மதிப்பீடுகளை உள்ளடக்கியதுடன் இவ்வறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள், இயன்ற வரையில், அரசின் அனைத்துத் தீர்மானங்ளைகளையும் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் மீது பொருள் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து சூழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

# 02

# அரசிறை அபிவிருத்தி, திறைசேரித் தொழிற்பாடு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்

## 2.1 மேன்நோக்கு

அரசாங்கத்தின் அரசிறைத் தொழிற்பாடுகள், அரசாங்க மீண்டெழும் செலவினத்தின் முன்மதிமிக்க முகாமைத்துவம், அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் புத்துயிர்பெற்றமை என்பவற்றுடன் ஒன்றிணைந்து, தொலைநோக்கு மிக்க கொள்கை மறுசீரமைப்புகளின் நடைமுறைப்படுத்தல் மூலம் துணையளிக்கப்பட்டு அரசாங்க வருவாயில் ஊக்கமளிக்கும் வளர்ச்சி காரணமாக 2025 இன் முதல் எட்டு மாதங்களில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன. எனினும், கணக்கு மீதான வாக்கின் கீழ் முதல் நான்கு மாதங்களில் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளை நடாத்தியமையின் காரணமாக மூலதனச் செலவின ஒதுக்கீடானது குறைவாகவே காணப்பட்டது. ஆகையினால் வரவு செலவுத்திட்டத்தின் முதலாந்தர மிகை 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.648.8 பில்லியனிலிருந்து 2025 இன் அதே காலப்பகுதியில் ரூ.1,276.5 பில்லியனாக குறிப்பிடத்தக்களவு மேம்பட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூ.300 பில்லியன் கொண்ட முதலாந்தர மீதி செப்டெம்பர் இலக்கிற்கான அளவுசார் செயலாற்றப் பிரமாணத்தை விஞ்சிச்சென்றது. இவ்வதிகரித்த முதலாந்தர மிகை அரசாங்கத்தின் கடன்பெறுதல் தடைகளுக்கு ஈடளித்து, படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுக்கான பாரிய தாங்கு இருப்புகளைப் பேணியது. முதலாந்தர மிகையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதம் கொண்ட 2025 இலக்கினை விஞ்சுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்டகால படுகடன் நிலைபெறுதன்மையை நோக்கிய பாதையொன்றை இதுஉறுதி செய்யும். படுகடன் இயக்கவாற்றல்கள் மேம்படுகின்ற அதேவேளை, ஒட்டுமொத்த வரவு செலவுதிட்டப்பப்பற்றாக்குறை 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.911.0 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.411.0 பில்லியனாக 54.9 சதவீதத்தினால் குறைவடைந்தது.

கொடைகள் உள்ளடங்கலாக மொத்த அரசாங்க வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.2,565.9 பில்லியனிலிருந்து 2025 இன் அதே காலப்பகுதியில் ரூ.3,301.5 பில்லியனாக 28.7 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூ.4,990 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டிற்கு எதிராக 66.2 சதவீத அடைவாக இது அமைந்தது. வரி வருவாய் 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.3,068.5 பில்லியனாக 30.7 சதவீதத்தினால் அதிகரிதத அதேவேளை, வரியல்லா வருவாய் ரூ.226.2 பில்லியனாக 8.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

2025 இன் முதல் எட்டு மாதங்களில் அரசாங்க வருவாய் அதிகரிப்பு பிரதானமாக வரித் தளத்தை விரிவுபடுத்துவதை நோக்கி முன்னெடுக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய வரிக் கொள்கை மற்றும் நிர்வாக ரீதியான வழிமுறைகள் என்பவற்றுடன் பெறுமதிசேர் வரி வருவாய், வருமான வரிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் மீதான வரிகள் என்பவற்றின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. மொத்த வரி வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.2,348.5 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.3,068.5 பில்லியனாக 30.7 சதவீதத்தினால் அதிகரித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூ.318.5 பில்லியனில் ரூ.2,750 பில்லியன் கொண்ட செப்டெம்பர் இறுதி வரிவருவாய் அளவுசார் செயலாற்றப் பிரமாணத்தை விஞ்சிச்சென்றது. மேம்பட்ட வருவாய்க்கு 2025 முதல் எட்டு மாதங்களில் நடாத்தப்பட்ட கொள்கை மற்றும் நிர்வாகச் சீராக்கங்களுடன் ஒன்றுசேர்ந்து நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் துணையளித்தது. பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.842.5 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.1,084.2 பில்லியனாக 28.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த வரிவருவாயின் 35.3 சதவீதத்திற்கு பெறுமதிசேர் வரி வகைகூறி, பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இவ்வளர்ச்சியானது உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மீளத் தொடங்குதல், 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக பெறுமதிசேர் வரிவீத அதிகரிப்பின் முழுமையான தாக்கம் மற்றும் ஆண்டுக்கு ரூ.80 மில்லியனிலிருந்து 60 மில்லியனாக பெறுமதிசேர் வரி பதிவு அடிப்படை அளவைக் குறைத்தல் அத்துடன் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அகற்றியதைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களிலிருந்து உயர்வான பெறுமதிசேர் வரி வருமான சேகரிப்பு என்பன மூலம் பெருமளவில் தூண்டப்பட்டிருந்தது. மொத்த வரிவருவாயின் 22.9 சதவீத பங்குடன் வருமான வரி இரண்டாவது பாரிய பங்களிப்பாளராக விளங்கி, அதனைத் தொடர்ந்து மொத்த வரி வருவாயில் 19.8 சதவீதத்திற்கு உற்பத்தி வரிகள் வகைகூறின. பொருளாதார நடவடிக்கைகளில் விரிவடைதல், முறைசாரா தனியார் துறைகளில் சம்பள உயர்வுகள் அதனைத் தொடர்ந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டமையிலிருந்து உருவான இணங்குவித்தலில் அதிகரிப்பு என்பன காரணமாக வருமான வரியிலிருந்தான வருவாய் அதிகரித்தது. மோட்டார் வாகனங்கள், மதுபானம் மற்றும் ஏனைய வரிவிதிக்கத்தக்க பொருட்கள் என்பவற்றிலிருந்து உயர்வான வருவாய் சேகரிப்புகள் காரணமாக உற்பத்தி வரிகளிலிருந்தான வருவாய் அதிகரித்தது.

அட்டவணை 2.1 : அரசிறைச்செயற்பாடுகளின் சுருக்கம்

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - ஓக. 2024 | 2025 (அ) |
|---|---|---|
| **வருமானமும் செலவினமும்** | **2,565,921** | **3,301,459** |
| வருமானம் | 2,557,792 | 3,294,740 |
| வரி | 2,348,529 | 3,068,495 |
| வரி அல்லாத | 209,263 | 226,244 |
| மாணியம் | 8,129 | 6,720 |
| **செலவினம்** | **3,476,885** | **3,712,492** |
| **நடைமுறை** | **3,041,565** | **3,381,309** |
| சம்பளம் | 659,502 | 760,687 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 1,559,721 | 1,687,571 |
| பிற | 822,342 | 933,051 |
| அரசாங்க முதலீடுகள் | 454,744 | 338,846 |
| பிற | -19,424 | -7,663 |
| **வருமானப்பற்றாக்குறை (-)/மிகை (+)** | **-483,773** | **-86,569** |
| **முதன்மை இருப்பு பற்றாக்குறை (-)/மிகை (+)** | **648,757** | **1,276,538** |
| **மொத்த வரவு செலவுதிட்ட பற்றாக்குறை (-)/மிகை (+)** | **-910,965** | **-411,033** |
| **நிதியளிப்பு** | **910,965** | **411,033** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | 168,551 | -51,849 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 742,414 | 462,882 |

*மூலம் : அரசிறைக் கொள்கை திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

2025 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம் என்பன வருவாய் திரட்டலை அதிகரித்தல், இணங்குவித்தல், வெளிப்படைத் தன்மை மற்றும் ஊழல் பாதிக்கப்படும் தன்மையினைக் குறைத்தல் என்பவற்றுக்கான முக்கிய நிர்வாக மறுசீரமைப்புகளின் நடைமுறைப்படுத்தலை தொடர்ந்தும் முன்னெடுத்தன. இதற்கு மேலதிகமாக இம்மூன்று முக்கிய வருவாய் சேகரிப்பு முகவராண்மைகளும் சர்வதேச நாணய நிதிய மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை மேற்கொண்டன. ஊழல் பாதிக்கப்படும் தன்மைகளை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் மீதான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் 2025 ஆகஸ்டில் நிதி அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டன. தன்னியக்கப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல், முறையான நடத்தை கோவையை உருவாக்கிப் பின்பற்றுதல் ஏற்கனவே காணப்படுகின்ற இடர் முகாமைத்துவ பிரிவு இயலளவை மேம்படுத்துதல் போன்ற ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. இலங்கைச் சுங்கம், தன்னியக்கப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவ முறைமையினை உருவாக்குதல் உள் விவகாரங்கள் அலகினை தாபித்தல், டிஜிட்டல் மய கொத்தணியைத் தாபித்தல், சுங்கப் பிரகடன (ஊருளுனுநுஊ) கண்காணித்தல் முறைமையை அறிமுகப்படுத்தல் வாகன உறுதிப்படுத்தல் வாயில் என்பன உள்ளடங்கலாக பல இலக்கிடப்பட்ட ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. மதுவரித் திணைக்களம் நிறுவனத்தினுள் ஊழல் இடர்களைத் தடுத்து, கண்டுபிடித்து எதிர்வினையாற்றுவதற்கு ஊழல் அல்லது இலஞ்சம் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடனான கூட்டிணைப்புடன் தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட முன் முயற்சியினை மேற்கொண்டது. நேர்மை அலுவலர் ஒருவரை நியமித்தல், விழிப்புணர்வு மற்றும் ஊழல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், உள் விவகாரங்கள் அலகு, இடர் முகாமைத்துவ அலகு மற்றும் நிதியியல் விசாரணை அலகு என்பவற்றை தாபித்தல் ஆகிய முக்கிய வழிமுறைகள் உள்ளடக்குகின்றன.

பெறுமதிசேர் வரி இணங்குவித்தலினை மேம்படுத்துவதற்கு தகைமை உடைய ஏற்றுமதியாளர்களுக்கும் அவர்களின் வழங்குநர்களுக்கும் எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமை 2025 ஒக்டோபர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டு நியம பெறுமதிசேர் வரி மீளளிப்பு செயன்முறைக்கு மாறுதலடைந்தது. அதேவேளை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செயலாற்றத்தை தடமறிந்து கண்காணிப்பதற்கு முக்கிய செயலாற்றுக் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதே விதத்தில் பெறுமதிசேர் வரி இணங்குவித்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2025 இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. இதன் விளைவாக பெறுமதிசேர் வரிப் பதிவுகளின் எண்ணிக்கை 2024 டிசெம்பர் இறுதியில் 21,542 இலிருந்து 2025 செப்டெம்பர் இறுதியளவில் 31,134 ஆக 44.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பெறுமதிசேர் இணங்குவித்தல் மேம்பாட்டுத் திட்டம் நடுத்தரகால உள்நாட்டு இறைவரித் திணைக்கள நவீனமயப்படுத்தல் உபாயம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்டம் என்பவற்றுடன் இணைந்து இணங்குவித்தலை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அதிக சொத்து மதிப்புள்ள தனிப்பட்டவர்கள் பிரிவானது வரிக் கணக்காய்வுகளையும் நடாத்தி அதிக சொத்துமதிப்புள்ள தனிப்பட்டவர்களின் உள்ளடக்கத்தினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 2.2 : மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2025

ரூபா.பில்லியன்

| விபரம் | வருடாந்த மதிப்பிடப்பட்ட | சன - ஓக. தற்காலிகமானது | அடைவு% |
|---|---|---|---|
| **மொத்த வரி வருமானம்** | **4,960.0** | **3,294.8** | **66.4** |
| **வரி வருமானம்** | **4,590.2** | **3,068.5** | **66.9** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 1,167.0 | 702.4 | 60.2 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 825.0 | 567.5 | 68.8 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு) | 190.0 | 145.8 | 76.7 |
| ஏனைய | 13.2 | 10.7 | 80.8 |
| **உப மொத்தம்** | **2,195.2** | **1,426.3** | **65.0** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 790.0 | 516.8 | 65.4 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (இறக்குமதி) | 74.0 | 45.0 | 60.9 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 185.0 | 115.9 | 62.6 |
| செஸ் அறவீடு | 100.0 | 56.5 | 56.5 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 126.0 | 103.6 | 82.3 |
| இறக்குமதி தீர்வை | 240.0 | 151.0 | 62.9 |
| **உற்பத்தி விசேட ஏற்பாடுகள்** | | | |
| சிகரெட்டுகள் | 130.0 | 61.9 | 47.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 230.0 | 120.8 | 52.5 |
| மோட்டார் வாகன வரிகள் மற்றும் ஏனையவை | 239.0 | 278.6 | 116.6 |
| ஏனைய | 1.0 | 6.1 | 592.5 |
| **உப மொத்தம்** | **2,115.0** | **1,456.3** | **68.9** |
| **மதுவரித் திணைக்களம்** | | | |
| மதுபானம் / புகையிலை | 242.0 | 146.6 | 60.6 |
| **உப மொத்தம்** | **242.0** | **146.6** | **60.6** |
| **ஏனையவை** | | | |
| தொலைதொடர்பு அறவீடு | 18.0 | 10.6 | 58.6 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 19.7 | 28.8 | 145.7 |
| **உப மொத்தம்** | **37.7** | **39.3** | **104.2** |
| **வரி அல்லாத வருமானம்** | **370.0** | **226.2** | **61.1** |
| **மொத்த செலவினம்** | **7,190.0** | **3,712.5** | **51.6** |
| **நடைமுறைச் செலவினம்** | **5,886.0** | **3,381.3** | **57.4** |
| சம்பளங்களும் படிகளும் | 1,230.0 | 760.7 | 61.8 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 2,950.0 | 1,687.6 | 57.2 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 442.0 | 282.9 | 64.0 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 172.0 | 75.2 | 43.7 |
| ஏனையவை | 1,092.0 | 575.0 | 52.7 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **1,304.0** | **331.2** | **25.4** |

*மூலங்கள் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2025 இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த அரசாங்கச் செலவினம், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.3,476.9 பில்லியனிலிருந்து ரூ.3,712.5 பில்லியனாக 6.8 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. மீண்டெழும் செலவினம் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.3,041.6 பில்லியனிலிருந்து 2025 அதேகாலப்பகுதியில் இன் ரூ.3,381.3 பில்லியனாக 11.2 சதவீதத்தினால் அதிகரித்தது. வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவிடுதல் ரூ.1,687.6 பில்லியனாக 8.2 சதவீதத்தினால் அதிகரித்தமை, 2025 ஏப்ரல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்கத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படைச் சம்பள திருத்தத்தின் மூலம் தூண்டப்பட்டு ரூ.760.7 பில்லியனாக 15.3 சதவீதத்தினால் சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதிகரித்தமை, மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ரூ.722.4 பில்லியனாக 15.8 சதவீதத்தினாலும் குடும்ப அலகுகளுக்கான மானியங்கள் ரூ.647.2 பில்லியனாக 16.5 சதவீதத்தினாலும் பொருட்கள் மற்றும் சேவைகள் ரூ.210.6 பில்லியனாக 6.1 சதவீதத்தினாலும் அதிகரித்தமை என்பன இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. மொத்த வட்டிச் செலவினத்தின் 86.9 சதவீதத்தை அமைக்கின்ற உள்நாட்டுக் கடன்பெறுதல் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.1,687.6 பில்லியனாக 0.5 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்த அதேவேளை, 2025 இன் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டு கடன்பெறுதல் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.221.1 பில்லியனாக 121.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. வெளிநாட்டு கடன்பெறுதல் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது படுகடன் மறுசீரமைப்பின் பின்னர் சீன அபிவிருத்தி வங்கி, யப்பான் அரசாங்கம், இந்திய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி மற்றும் பன்னாட்டு நாட்டுக்கான

முறிகள் என்பவற்றிடமிருந்து கிடைத்த கடன்கள் மீது உண்மையான வட்டிக் கொடுப்பனவுகள் மீளத் தொடங்கியமை மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.760.7 பில்லியனாக 15.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

அரசாங்க முதலீடுகள் மீதான செலவினம், 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.454.7 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.338.8 பில்லியனாக 25.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2025 இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கணக்கு மீதான வாக்குமீது வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளை நடத்தியமையின் காரணமாக மூலதனச் செலவினத்தின் மெதுவான ஒதுக்கீட்டை பிரதிபலிக்கின்றது. ஆண்டு மதிப்பீட்டிற்கு எதிரான அரசாங்க முதலீட்டு அடைவு 25.8 சதவீதமாக கணிசமாக குறைவாகக் காணப்பட்டது. இதற்குத் தீர்வுகாண்பதற்கு அரசாங்க முதலீட்டு குழுவைத் தாபித்தல், நீடிக்கின்ற நடுத்தரகால அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்தல், வலுப்படுத்தப்பட்ட கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அத்துடன் மேம்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கையிடல் போன்ற வழிமுறைகள் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்குள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.911.0 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.411.0 பில்லியனாக 54.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு குறுக்கமடைந்தது. வருமான வரி, பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றுக்கிடையில் வலுவான வரி சேகரிப்பு மூலம் துணையளிக்கப்பட்டு, மொத்த வருவாய் ரூ.3,294.7 பில்லியனாக 28.8 சதவீதத்தினால் அதிகரிப்புடன் வலுவான வருவாய் செயலாற்றுகை மூலம் இம்மேம்பாடு பெருமளவில் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை 2025 இல் சம்பள அதிகரிப்பு காரணமாக மீண்டெழும் செலவினத்தில் அதிகரிப்புக்கு மத்தியில் மீண்டெழும் செலவினத்தை சீரமைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொண்டுவருகின்ற அதேவேளை மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ரூ.331.2 பில்லியனாக குறைவடைந்து காணப்பட்டன.

## 2.2 அரசாங்க வருமானம்

கொடைகள் நீங்கலாக மொத்த அரசாங்க வருமானம், 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.2,557.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப் பகுதியில் ரூ.3,294.7 பில்லியனாக 28.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2025 இன் வருமானம் மதிப்பீட்டின் 66.4 சதவீதத்தை அடைந்தது. வருவாயில் இவ்வதிகரிப்புக்கு 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.2,348.5 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.3,068.5 பில்லியனாகப் பதிவாகிய வரிவருவாயில் 30.7 சதவீத அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்தது. வரி வருவாய் சேகரிப்பு மொத்த வருவாயின் 93.1 சதவீதத்துக்கு பங்களித்ததுடன் 2025 இற்கான மதிப்பீட்டின் 66.4 சதவீத அடைவாகவிருந்தது.

வரி வருவாயின் அதிகரிப்பு பின்வருவனவற்றிலிருந்தான வருவாயில் அதிகரிப்பினால் முன்னணி வகித்தது.

1. தனிப்பட்ட வருமான வரி, முற்பண தனிப்பட்ட வருமான வரி, பிடித்து வைத்தல் வரி மீது 2025 ஏப்ரல் 01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிக் கொள்கை மாற்றங்கள், அரசாங்க மற்றும் முறைசாரா தனியார் துறை இரண்டிலும் அதிகரிக்கப்பட்ட சம்பளங்களின் தாக்கம், அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் சாதகமான தாக்கம் மற்றும் வரி நிருவாக வழிமுறைகளின் சாதகமான தாக்கம் என்பவற்றின் விளைவாக வருமான வரிகள் 12.4 சதவீதத்தினால் அல்லது ரூ.77.7 பில்லியன் அதிகரித்தல்.

2. 2025 பெப்ரவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வரையில் அனைத்து வகையான மோட்டார் வாகனங்களினதும் இறக்குமதி கட்டுப்பாடு தளர்த்தல் காரணமாக இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி ரூ.516.8 பில்லியனாக 38.3 சதவீதத்தினால் அதிகரித்தமை, மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகளின் விரிவடைதலின் விளைவாக உள்நாடு மீதான பெறுமதிசேர் வரி ரூ.567.5 பில்லியனாக 21.1 சதவீதமான அதிகரிப்பு, பெறுமதிசேர் வரி வீதத்தில் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பின் முழுமையான தாக்கம் மற்றும் பெறுமதிசேர் வரிப் பதிவு அடிப்படை அளவில் ஆண்டொன்றுக்கு ரூ.80 மில்லியனிலிருந்து ரூ.60 மில்லியனாக குறைப்பு அத்துடன் 2024 இன் அதேகாலப்பகுதியின் 19,987 கோவைகளுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் நிதியியற் சேவைகள் நீங்கலாக பெறுமதிசேர் வரி பதிவுகள் 29,960 கோவைகளாக 49.9 சதவீத அதிகரிப்பை பிரதிபலிக்கின்ற நிர்வாக வழிமுறைகள் என்பவற்றினால் தூண்டப்பட்டு பெறுமதிசேர் வரி 28.7 சதவீதத்தினால் ரூ.241.8 பில்லியனால் அதிகரித்தல்.

**வரைபு 2.1 : மொத்த வருமானத்தின் வகுதிகள் (2025 சனவரி - ஆகஸ்ட்)**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

3. மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை 2025 சனவரி 11 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டியிடலின் பிரயோகத்துடனும் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வை வீதங்கள் 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமையுடனும் ஒன்றிணைந்து 2025 பெப்ரவரி தொடக்கம் அனைத்து மோட்டார் வாகனங்களுக்குமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விடுவிக்கப்பட்டமையுடன் மோட்டார் வாகனங்கள் இறக்குமதியின் தாக்கத்தினால் தூண்டப்பட்டு 640.5 சதவீதத்தினால் அல்லது ரூ.234.0 பில்லியனால் அதிகரித்தமை.

4. மதுபானம் மீதான மதுவரி வரி 2025 சனவரி 11 தொடக்கம் பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டியிடல் பிரயோகத்துடன் மதுவரி வீதங்களில் 5.9 சதவீத அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு 9.1 சதவீதத்தினால் அல்லது ரூ.12.1 பில்லியனால் அதிகரித்தமை.

5. விசேட பண்ட அறவீடு, உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் தீர்வை வீதங்களில் மேல் நோக்கிய திருத்தம் மற்றும் விசேட பண்ட அறவீட்டுக்குப் பொறுப்புடைய முக்கிய பண்டங்களில் இறக்குமதிகளின் அளவில் அதிகரிப்பு காரணமாக 54.2 சதவீதத்தினால் அல்லது 36.4 பில்லியனால் அதிகரிப்பு

6. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.11,083 கோவைகளுடன் ஒப்பிடுகையில் 2025 இன் ரூ.14,898 கோவைகளாக 34.4 சதவீதத்தினால் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீட்டு கோவைப் பதிவுகளின் அதிகரிப்பை பிரதிபலித்து பொருளாதார நடவடிக்கைகளில் அதிகரிப்பும் மற்றும் மேம்பட்ட வரிநிர்வாக வழிமுறைகள் என்பனவற்றின் மூலம் தூண்டப்பட்டு 18.8 சதவீதத்தினால் அல்லது ரூ.30.2 பில்லியனால் அதிகரித்தமை.

7. சுங்க இறக்குமதித் தீர்வை தொடர்புடைய காலப்பகுதியில் பொருட்கள் இறக்குமதி அதிகரிப்புடன் இணைந்து மோட்டார் வாகனங்கள் மீதான சுங்க இறக்குமதித் தீர்வையின் 20.0 சதவீதம் கொண்ட பிரயோகத்தின் பிரதான காரணமாக 117.5 சதவீதத்தினால் அல்லது ரூ.81.6 பில்லியனால் அதிகரித்தமை.

8. இறக்குமதிகளின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு செஸ் வரியானது 8.8 சதவீதத்தினால் அல்லது ரூ.4.6 பில்லியனால் அதிகரித்தது.

வரியல்லா வருவாயில் 2025 இன் முதல் எட்டு மாதங்களில் வருவாய் மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்ததில் 8.1 சதவீதத்தினால் அல்லது ரூ.17.0 பில்லியனால் அதிகரித்தல்.

**அட்டவணை : 2.3 அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

*ரூபா.மில்லியன்*

| விபரம் | சன - ஓக. 2024 | சன - ஓக. 2025 (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **2,348,529** | **3,068,495** | **30.7** |
| **வருமான வரி** | **624,670** | **702,351** | **12.4** |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி** | **801,586** | **929,865** | **16.0** |
| பெறுமதி சேர் வரி | 468,759 | 567,470 | 21.1 |
| உற்பத்தி தீர்வை | 209,910 | 216,614 | 3.2 |
| சமூக பாதகாப்பு பங்களிப்பு அளவீடு | 122,917 | 145,781 | 18.6 |
| **உற்பத்தி அடிப்படையிலான வரி** | **889,813** | **1,380,169** | **55.1** |
| இறக்குமதித் தீர்வை | 69,419 | 150,988 | 117.5 |
| பெறுமதி சேர் வரி | 373,728 | 516,778 | 38.3 |
| சமூக பாதகாப்பு பங்களிப்பு அளவீடு | 37,737 | 45,032 | 19.3 |
| துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) | 113,926 | 115,886 | 1.7 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு (SCL) | 67,222 | 103,641 | 54.2 |
| மது வரி | 175,830 | 391,313 | 122.6 |
| செஸ் | 51,951 | 56,529 | 8.8 |
| **உரிமப்பத்திர வரிகள் மற்றும் ஏனையவை** | **32,460** | **56,110** | **72.9** |
| **வரி அல்லாத வருமானம்** | **209,263** | **226,244** | **8.1** |
| **மொத்த வருமானம்** | **2,557,792** | **3,294,740** | **28.8** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

**வரைபு 2.2 : மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (2025 சனவரி - ஆகஸ்ட்)**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### வருமான வரி

வருமான வரிகளில் இருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூ.624.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.702.4 பில்லியனாக 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேம்பட்ட இணங்குவித்தல் மற்றும் சில விலக்களிப்புகளை அகற்றுதல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு ஆண்டு மதிப்பீட்டின் 60.2 சதவீதம் கொண்ட அடைவினை இது எடுத்துக்காட்டுகின்றது.

முற்பண தனிப்பட்ட வருமான வரியிலிருந்தான வருவாய், 2024 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூ.134.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.143.9 பில்லியனாக 7.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காண்பித்தது. அரசாங்க மற்றும் தனியார் துறைகள் இரண்டிலும் சம்பள அதிகரிப்புகள் இதற்கு காரணமாக அமைந்தன. 2025 இன் முதல் எட்டு மாதங்களில் முற்பண தனிப்பட்ட வருமான வரியிலிருந்து வருவாய் சேகரிப்பு ஆண்டு மதிப்பீட்டின் 92.3 சதவிதத்திற்கு சமமானதாகும்.

தனிப்பட்ட வருமான வரி வருவாயானது 2025 சனவரியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட அரசாங்க துறையில் கணிசமான சம்பள திருத்தங்கள் மற்றும் 2025 ஏப்ரல் தொடக்கம் தனியார் துறையில் குறைந்த பட்ச சம்பளங்களின் மேல் நோக்கிய சீராக்கம் என்பன உள்ளடங்கலாக சம்பள மட்டங்களின் அதிகரிப்பினால் பெருமளவில் துணையளிக்கப்பட்டு 2024 இன் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதே காலப்பகுதியில் 36.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நிறுவன வரி வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.345.3 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.397.3 பில்லியனாக 15.1 சதவீதத்தினால் அதிகரித்தது. சேவைகள் ஏற்றுமதிகள் மீது 15 சதவீத வரிவிதிப்புடன் இணைந்து 2025 ஏப்ரல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானம், புகையிலை, பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிற்றுறைகளுக்கான நிறுவன வருமான வரி வீதம் 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக மேல்நோக்கிய சீராக்கம் வரி தளத்தை விரிவுபடுத்தியதன் மூலமும் வளர்ந்துவருகின்ற வெளிநாட்டு செலாவணியுடன் துறையினை கண்காணிப்பதன் மூலமும் வரவிருக்கும் காலப்பகுதிகளின் சேகரிப்புக்களை மேலும் வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பிடித்து வைத்தல் வரி முன் கூட்டிய வருமான வரியிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.113.4 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.117.9 பில்லியனாக 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இது ரூ.230.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டின் 51.3 சதவீத அடைவாகும். இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக பிடித்து வைத்தல் வரி வீதத்தினை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக 2025 ஏப்ரல் மாதத்திலிருந்து அதிகரித்ததே ஆகும்.

**அட்டவணை 2.4 : வருமான வரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்லியன்*

| வரி அடிப்படை | சன - ஓக. 2024 | சன - ஓக. 2025 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| கூட்டுறவு மற்றும் கூட்டுறவற்ற | 377,003 | 440,494 | 16.8 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 133,974 | 143,949 | 7.4 |
| வட்டி வருமானத்தக்கான வரி | 113,446 | 117,890 | 3.9 |
| பொருளாதார சேவைக்கட்டணம் | 248 | 19 | -92.3 |
| **மொத்தம்** | **624,670** | **702,351** | **12.4** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

### பெறுமதிசேர் வரி

பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாய், 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.842.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.1,084.2 பில்லியனாக 28.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.உள்நாட்டு மற்றும் இறக்குமதி நடவடிக்கைகள் இரண்டிலும் இருந்தான பெறுமதிசேர் வரிவருவாய் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளில் விரிவடைதல் காரணமாக 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.468.8 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.567.5 பில்லியனாக 21.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதிகளிலிருந்தான பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.373.7 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.516.8 பில்லியனாக 38.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. 2025 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் அனைத்து வகையான வாகனங்கள் மீதுமான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இருந்தான பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாயில் அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதற்கமைய 2025 இன் முதல் எட்டு மாதங்களின் ஒட்டுமொத்த வருவாய் செயலாற்றத்தின் 32.9 சதவீதத்திற்கு பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாய் பங்களித்தது. ரூ.1,615.0 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டிலிருந்து 2025 இல் முதல் எட்டு மாதங்களில் பெறுமதிசேர் வரியிலிருந்தான வருவாய் அடைவு 67.1 சதவீதமாகவிருந்தது

**அட்டவணை 2.5 : பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை**

*ரூ.மில்லியனில்*

| வரி அடிப்படை | சன - ஓக. 2024 | சன - ஓக. 2025 (அ) | வளர்ச்சி (% ) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 468,759 | 567,470 | 21.1 |
| இறக்குமதிகள் | 373,728 | 516,778 | 38.3 |
| **தேறிய வருமானம்** | **842,488** | **1,084,248** | **28.7** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

**உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) மற்றும் மதுவரி**

உற்பத்தித் தீர்வையிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.841.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.607.9 பில்லியனாக 57.6 சதவீதத்தினால் அதிகரித்தது. பெற்றோலியம் மற்றும் சிகரட் என்பவற்றிலிருந்தான வருவாயின் வீழ்ச்சிக்கு மத்தியில் மோட்டார் வாகனங்கள், மதுபானம், ஏனைய வரிவிதிக்கத்தக்க பொருட்கள் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்வான வருவாய் மூலம் இவ்வளர்ச்சி பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியிலிருந்து கிடைத்த வருவாய் மொத்த வரி வருவாயின் 19.8 சதவீதத்ததிற்கு வகை கூறியதுடன் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் மொத்த வருவாய் சேகரிப்பில் 18.5 சதவீதமாகவிருந்த அதேவேளை ஆண்டு மதிப்பீட்டின் 72.3 சதவீதத்தை அடைந்தது.

மோட்டார் வாகங்கள் மீதான உற்பத்தி தீர்வையிலிருந்தான வருவாய், 2025 பெப்ரவரி 01 தொடக்கம் மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான தற்காலிக தடைகள் அகற்றப்பட்டமையின் பிரதான காரணமாக 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.36.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.270.5 பில்லியனாக 640.5 சதவீதத்தினால் சடுதியாக அதிகரித்தது.

பெற்றோலியம் மீதான உற்பத்தி தீர்வையிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.139.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.120.8 பில்லியனாக 13.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி உலகளாவிய எரிபொருள் குறைப்புகள், குறைவான டீசல் இறக்குமதி அளவுகள் மற்றும் ரூபாவின் மிதமான உயர்வடைதல் என்பன மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

மதுபானம் மீதான மது வரியிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.133.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.145.7 பில்லியனாக 9.1 சதவீதத்தினால் அதிகரித்தமை உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி வருமானத்தின் 24.0 சதவீதத்திற்கு பங்களித்துள்ளது. மது வரிகளின் பணவீக்க சுட்டியாக்க கொள்கைக்கமைவாக 2025 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானம் மீதான மதுவரி 5.9 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. 2025 இன் முதல் எட்டு மாதங்களின் மதுபானம் மீதான வரியிலிருந்தான வருவாயின் அடைவு 2025 இற்கான ஆண்டு மதிப்பீட்டின் 60.7 சதவீதமாகவிருந்தது. தூய மதுபான உற்பத்தி 2024 இன் அதேகாலப்பகுதியின் 21.4 மில்லியன் முழுமையான லீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் 23.9 மில்லியன் தூய மதுபான லீற்றர்கலாக 11.5 சதவீதமான அதிகரித்தது. கடின மதுபான உற்பத்தி 2024இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் 14.1 மில்லியன் தூய மதுபான லீற்றர்கலாக 15.9 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பியர் உற்பத்தி 9.6 மில்லியன் தூய மதுபான லீற்றர்கலாக 4.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

அதேவேளை இனிப்பூட்டப்பட்ட குடிபானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், செம்பனை எண்ணெய் மற்றும் கொழுப்பமிலங்ள் உள்ளடங்கலாக ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்கள் மீதான உற்பத்தி தீர்வையிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.4.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.8.1 பில்லியனாக 72.9 சதவீதத்தினால் சடுதியாக அதிகரித்தது. ஆண்டு பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டியிடல் பொறிமுறை அதேபோன்று 2025 முதல் எட்டு மாதங்களில் அதிகரித்த கேள்வி மற்றும் வலுப்பெற்ற பொருளாதார நடவடிக்கை என்பன மூலம் தூண்டப்பட்ட உயர்வான இறக்குமதிகள் என்பவற்றின் கீழ் 2025 சனவரி 11 தொடக்கம் உற்பத்தித் தீர்வை 5.9 சதவீதத்தினால் மேல்நோக்கி திருத்தப்பட்டமை இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், சிகரட்டிலிருந்தான வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.71.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.62.8 பில்லியனாக 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 2.6 : உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்லியன்*

| வரி அடிப்படை | சன - ஓக். 2024 | சன - ஓக். 2025 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 133,584 | 145,698 | 9.1 |
| சிகரட், புகையிலை | 71,637 | 62,810 | -12.3 |
| மோட்டார் வாகனங்கள் | 36,532 | 270,526 | 640.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 139,298 | 120,787 | -13.3 |
| ஏனையவை | 4,689 | 8,105 | 72.9 |
| **மொத்தம்** | **385,740** | **607,927** | **57.6** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

**வரைபு 2.3 : உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை (2025 சனவரி - ஆகஸ்ட்)**




*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு

சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2025 இன் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டு கோவைப் பதிவுகளின் எண்ணிக்கை 2025 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி 14,898 ஆக 34.5 சதவீத வளர்ச்சியினைப் பிரதிபலித்து மேம்பட்ட வரி நிர்வாக வழிமுறைகளுடன் ஒன்றிணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளின் விரிவடைதலினால் தூண்டப்பட்டு 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.160.7 பில்லியனிலிருந்து 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.190.8 பில்லியனாக 18.8 சதவீதத்தினால் அதிகரித்தது. சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்தான வருவாயின் அடைவு 2025 இன் முதல் எட்டு மாதங்களின் 72.3 சதவீதமாகவிருந்தது.

### சுங்க இறக்குமதித் தீர்வை

சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.69.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.151.0 பில்லியனாக 117.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. பெரும்பாலான இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது இறக்குமதி கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை முக்கிய காரணமாக அமைந்தது. மற்றும் மோட்டார் வாசனய்களுககு 20 சதவீத சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டதும் இவ் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

### விசேட வியாபாரப் பண்ட அறவீடு

விசேட வியாபாரப்பண்ட அறவீட்டிலிருந்தான வருவாய் சேகரிப்பு 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.67.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.103.6 பில்லியனாக 54.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கு முக்கிய விற்பனைப் பண்ட பொருட்களின் இறக்குமதிகளின் அளவில் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது.

### வியாபாரப் பண்ட ஏற்றுமதி மானியத் திட்டம் (செஸ் வரி)

செஸ் வரியிலிருந்து சேகரித்த வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.52.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.56.5 பில்லியனாக 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதி செய்யப்படும் அநேகமான பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது செஸ் வரி வீதம் அதிகரிப்பு என்பன இதற்குக் காரணமாக அமைந்தது.

### துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு

துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.113.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.115.9 பில்லியனாக 1.7 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் இறக்குமதி அளவுகளில் அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

### தொலைத் தொடர்பு அறவீடு

தொலைத் தொடர்பு அறவீட்டிலிருந்து ஈட்டப்பட்ட வருவாயானது இணையமற்ற தொலைதொடர்பு சேவைகள் வழங்கலின் அளவு குறைவடைகின்ற அதேவேளை தொலைத் தொடர்பு அறவீடு ஏற்புடையதல்லாத இணையச் சேவைகளின் சேவைகளின் அளவு அதிகரிக்கின்றமை காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.11.2 பில்லியனிலிருந்து 2025 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.10.6 பில்லியனாக 5.9 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்தது.

### மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசுவரி மற்றும் ஏனைய வரி

மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசுவரி மற்றும் ஏனைய வரி என்பவற்றிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.21.1 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.45.1 பில்லியனாக 113.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. சொகுசு வரியிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.1.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.22.3 பில்லியனாக 1,115.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மோட்டார் வாகன உரித்துடைமை அறவீடு முறையே 2024 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூ.0.15 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.5.7 பில்லியனாக 3,705.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2025 பெப்ரவரி தொடக்கம் மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது அதேவேளை பந்தயம் மற்றும் சூதாட்டத்திலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூ.11.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.6.0 பில்லியனாக 47.1 சதவீதத்தினால் குறைவடைந்தன. பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீட்டிலிருந்தான வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய ரூ.1.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.4.5 பில்லியனாக 212.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கு பொருளாதார மீட்சியின் விளைவாக பங்குக் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியினதும் அளவினதும் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைநதது.

**அட்டவணை 2.7 : மோட்டார் வாகன இறக்குமதிகள்**

*அலகு : எண்*

| விபரம் | இறக்குமதிகள் சன - ஆக | | | |
|---|---|---|---|---|
| | 2024 | 2025 | மாற்றம் | % |
| மோட்டார் கார்கள் | 925 | 36,691 | 35,766 | 3,866.6 |
| சிற்றூர்திகள், பேருந்துகள் பயணிகள் | 18 | 1,069 | 1,051 | 5,838.9 |
| முச்சக்கர வண்டிகள் | 62 | 9,454 | 9,392 | 15,148.4 |
| மோட்டார் சைக்கிள்கள் | 11,411 | 97,952 | 86,541 | 758.4 |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள்(அ) | 274 | 4,834 | 4,560 | 1,664.2 |
| நில வாகனங்கள் (ஆ) | 3,224 | 4,302 | 1,078 | 33.4 |
| ஏனையவை (இ) | 19,840 | 22,912 | 3,072 | 15.5 |
| **மொத்தம்** | **35,754** | **177,214** | **141,460** | **396** |

*மூலம் : இலங்கைச் சுங்கம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்*

*(அ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்*

*(ஆ) ட்ராக்டர் மற்றும் கை ட்ராக்டர்கள் பவுசர் மற்றும் தரை வாகனங்கள் உள்ளடங்கலாக*

*(இ) ஒற்றை வண்டி , இருநோக்க வாகனங்கள், குவாட்ரிசைக்கிள் மற்றும் மோட்டார் வீடுகள் உள்ளடங்கலாக*

**அட்டவணை 2.8 : சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன - ஆக 2025 | | |
|---|---|---|---|
| | தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை (எட்டு HS இலக்கம்) | இறக்குமதி பெறுமதி (CIF/ரூபா. மில்லியன்) | ஏற்றுமதி பெறுமதி (FOB/ரூபா. மில்லியன்) |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 808 | 5,771 | 44,920 |
| இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 5,329 | 84,707 | 124,672 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 6,200 | 3,557 | 9,310 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(SAFTA) | 5,932 | 3,661 | 20,410 |
| சிங்கப்பூர் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SSFTA) | 4,334 | 1,008 | 19 |
| **மொத்தம்** | **22,603** | **98,704** | **199,331** |

*மூலம் : இலங்கை சுங்கம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

**அட்டவணை 2.9 : சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - ஆக | |
|---|---|---|
| | 2024 | 2025 |
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்** | 1,416 | 954 |
| தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | 331 | 241 |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 10 | 1 |
| தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 138 | 127 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 937 | 587 |
| **இறக்குமதிகள் மீதான செஸ்** - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 50,534 | 55,575 |
| **மொத்தம்** | **51,951** | **56,529** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

### வரியல்லா வருவாய்

வரியல்லா வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.209.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.226.2 பில்லியனாக 8.1 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. வரியல்லா வருவாய் மொத்த வருவாயின் 6.9 சதவீதத்திற்கு பங்களித்தது. அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், வட்டி வருமானங்கள் அத்துடன் சமூக பாதுகாப்பு பங்களிப்பு என்பவற்றிலிருந்து ஈட்டப்பட்ட அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதற்கமைய வட்டியிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.34.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.43.4 பில்லியனாக 25.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளில் இருந்தான வருவாய் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அத்துடன் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் என்பவற்றின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் மேல்நோக்கிய திருத்தத்தின் முக்கிய காரணமாக 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.102.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன்

அதேகாலப்பகுதியில் ரூ.112.6 பில்லியனாக 9.5 சதவீதத்தினால் அதிகரித்தது சமூகப் பாதுகாப்பு பங்களிப்பிலிருந்தான வருவாயும் பங்களிப்பு வீதத்தில் அதிகரிப்பு காரணமாக 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.27.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.36.6 பில்லியனாக 32.2 சதவீதத்தினால் அதிகரித்தது. வாடகையிலிருந்தான வருவாயும் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.3.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.3.9 பில்லியனாக 15.0 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிலிருந்து கிடைத்த இலாபங்கள் மற்றும் பங்குலாபங்களிலிருந்தான வரியல்லா வருவாய் 2024 இன் முதல் எட்டு மாதங்களில் ரூ.26.8 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.14.6 பில்லியனாக 45.3 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. வரி வருவாயின் அடைவு ரூ.370 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டுக்கு எதிராக 2025 இன் முதல் எட்டு மாதங்களில் 61.1 சதவீதமாகவிருந்தது.

**அட்டவணை 2.10 அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2024 சன - ஆக | 2025 (வருடாந்த மதிப்பீடு) | 2025 சன - ஆக (அ) | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| **வருமான வரி** | 624.7 | 1,167.0 | 702.4 | 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வருமான வரி மூலமான வருவாய் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 12.4 சதவீதம் அதிகரித்து 702.4 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வருமான வரி மூல வருவாய், ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டை விட 60.2 சதவீதமாக இருந்தது. இந்த செயல்திறனுக்கு முக்கியமான காரணங்களாக:<br>- 2025.04.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி (றுர்வு) விகிதம் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிப்பு.<br>- அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பள அதிகரிப்பு<br>- பொருளாதார நடவடிக்கைகளில் படிப்படியாக விரிவாக்கம் மற்றும்<br>- மேம்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 1,093,134 கோப்புகளிலிருந்து 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் பதிவான வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 16.3 சதவீதத்தால் அதிகரித்து 1,270,851 ஆக அதிகரித்து. |
| **பெறுமதி சேர் வரி** | 842.5 | 1,615.0 | 1,084.2 | பெறுமதி சேர் வரி வருமானம் 2024 இல் ரூபா 842.5 பில்லியனிலிருந்து 2025 இன்<br>முதல் 8 மாதங்களில் ரூ.1084.2 பில்லியன் ரூபாவாக 28.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து, வருடாந்த மதிப்பீட்டின் 67.1 சதவீத அடைதலுடன் அதிகரித்துள்ளது. பெறுமதிசேர் வரியிலிருந்து வருவாயின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக<br>- மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல்<br>- மொத்த இறக்குமதியில் 10.5 சதவீதம் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம்<br>- மேம்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி இணக்க நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டின் தொடக்கத்தில் இருந்து 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் வரி கோப்பு பதிவுகளின் எண்ணிக்கை 58.5 சதவீதம் அதிகரித்து 30,298 ஆக அதிகரித்துள்ளது, |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2024 சன - ஆக | 2025 (வருடாந்த மதிப்பீடு) | 2025 சன - ஆக [(அ)] | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| **உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி** | 385.7 | 841.0 | 607.9 | 2025 ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில் உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியிலிருந்து கிடைக்கும் வருவாய் 57.6 சதவீதத்தால் அதிகரித்து 607.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது, இது வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விட 72.5 பில்லியன் ரூபாயால் அதிகமாகும். இந்த செயல்திறன் முதன்மையாக உந்தப்பட்டது<br>- பெப்ரவரி 2025 முதல் அனைத்து வகையான மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வையிலிருந்து வருவாய் அதிகரிப்பு.<br>- 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மோட்டார் வாகனங்கள், சிகரெட்டுகள், சர்க்கரை சார்ந்த பானங்கள் உள்ளிட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கக்கூடிய பொருட்களின் மீதான உற்பத்தித் தீர்வை விகிதம் வருடாந்த பணவீக்க சரிசெய்தல் குறியீட்டின் அடிப்படையில் 5.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.<br>- வருடாந்த பணவீக்க சரிசெய்தல் குறியீட்டின் அடிப்படையில் மதுபானங்களுக்கான மது வரி விகிதம் 5.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.<br>- சர்க்கரை சார்ந்த பானங்கள், குளிர்சாதன பெட்டிகள், பாம் எண்ணெய் மற்றும் கொழுப்பு அமிலங்கள் போன்ற பிற உற்பத்தித் தீர்வை விதிக்கக்கூடிய பொருட்களிலிருந்து வருவாய் 72.9 சதவீதத்தால் அதிகரித்து 8.1 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.<br>இருப்பினும், பெற்றோலிய உற்பத்திகளிலிருந்து வருவாயில் 13.3 சதவீத சரிவும், சிகரட்டில் இருந்தான வருவாயில் 12.3 சதவீத சரிவும் உற்பத்தித் தீர்வை வருவாயின் ஒட்டுமொத்த செயல்திறனுக்கு எதிர்மறையாக பங்களித்தது. |
| **சுங்க இறக்குமதித் தீர்வைகள்** | 69.4 | 240.0 | 151.0 | 2025ஆம் ஆண்டிற்கான ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விட இறக்குமதி தீர்வை வருவாய் 62.9 சதவீதமாக இருந்தது, இதற்கு முக்கிய காரணம்:<br>- 2025.01.28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கு 20 சதவீத சுங்க இறக்குமதி வரி விதிக்கப்பட்டது.<br>- 2025.02.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கான இறக்குமதி வரிகளுக்கு 50 சதவீத மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டது.<br>- 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இறக்குமதிகள் 10.5 சதவீதத்தால் அதிகரித்தது |
| **துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு** | 113.9 | 185.0 | 115.9 | 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் து.வி.நி.அ. அறவீட்டு வருமானம் 1.7 சதவீதத்தினால் அதிகரித்து 115.9 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது, இது ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 62.6 சதவீதத்தை எட்டியுள்ளது. இந்த செயல்திறன் முக்கியமாக,<br>- 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இறக்குமதியில் 10.5 சதவீதம் அதிகரிப்பு. |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2024 சன - ஆக | 2025 (வருடாந்த மதிப்பீடு) | 2025 சன - ஆக (அ) | மாறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் |
|---|---|---|---|---|
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு** | 67.2 | 126.0 | 103.6 | 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விசேட வியாபார பண்ட அறவீட்டு வருமானம் கணிசமாக 54.2 சதவீதம் அதிகரித்து 103.6 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. இது ஆண்டிற்கான மதிப்பீட்டிலிருந்து 82.3 சதவீதம் அதிகமாகும். இதற்கு முக்கிய காரணம்:<br>- உருளைக்கிழங்கு, அரிசி, உப்பு மற்றும் வெங்காயம் மீதான வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டமை மற்றும்<br>- பால் பொருட்கள், தானியங்கள் மற்றும் அரைக்கும் தொழில் பொருட்கள், எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகள் உள்ளிட்ட முக்கிய பொருட்களின் இறக்குமதியின் மதிப்பு 16.9 சதவீதத்தால் அதிகரித்தமை |
| **சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு** | 160.7 | 264.0 | 190.8 | 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சமூக பங்களிப்பு அறவீட்டு வருவாய் ஆண்டு மதிப்பீட்டை விட 72.3 சதவீதமாக இருந்தது. இது முக்கியமாக அடையப்பட்டதற்குக் காரணம்:<br>- 2025ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 10.5 சதவீதமாக அதிகரித்த இறக்குமதியின் தாக்கம்.<br>- உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம். |
| **ஏனைய வரிகள்** | 84.4 | 152.0 | 112.6 | 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவான 84.4 பில்லியன் ரூபாயில் இருந்து 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஏனைய வரிகளிலிருந்தான வருவாய் 33.4 சதவீதத்தால் அதிகரித்து 112.6 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டு மதிப்பீட்டில் ஏனைய வரி வருவாய் 74.1 சதவீதமாகும். இது முதன்மையாக பின்வருவனவற்றால் உந்தப்பட்டது<br>- இறக்குமதி அதிகரிப்பு காரணமாக செஸ் வரி 8.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மற்றும்,<br>- மோட்டார் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் மூலம், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1.8 பில்லியன் ரூபாவாக இருந்த மோட்டார் வாகனங்களுக்கான சொகுசு வரியிலிருந்தான வருவாய் 2025 ஆம் ஆண்டின் இதே கால கட்டத்தில் 22.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.<br>இருப்பினும், தொலைத்தொடர்பு சேவைகளின் குறைந்த நுகர்வை பிரதிபலிக்கும் வகையில் தொலைத்தொடர்பு வரியில் 5.9 சதவீதம் குறைந்தது. |
| **வரி அல்லாத வருமானம்** | 209.3 | 370.0 | 226.2 | 2025 ஆம் ஆண்டு மீளாய்வு காலப்பகுதியில் வரி அல்லாத வருவாய் ஈட்டல் 8.1 சதவீதத்தால் அதிகரித்து 226.2 பில்லியன் ரூபாவாக இருந்தது, இதற்கு முக்கிய காரணம் வட்டி, வருமானம், வாடகை மற்றும் அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடு மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பிலிருந்து பெற்றுக் கொள்ளும் வருவாய் செயல்திறன் அதிகரித்ததே ஆகும். வரி அல்லாத வருமானம் 2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 61.1 சதவீதத்தை ஈட்டியுள்ளது.<br>இருப்பினும், இலாபம் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான குறைந்த வருமான செயல்திறன் ஆண்டு மதிப்பீட்டிலிருந்து விலகலை விரிவுபடுத்தியது |
| **மொத்தம்** | **2,557.8** | **4,960.0** | **3,294.7** | |

*தொகுப்பு : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - செப்டெம்பர் 2025)

<table>
<tr><th>நடைமுறைக்கு வரும் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td colspan="2">வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள்</td></tr>
<tr><td>01.04.2025</td><td>
2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்<br>
1) தனிநபர் வருமான வரி (PIT) வீத அமைப்பு<br><br>
தனிநபருக்கான தனிநபர் வருமான வரிச் சலுகையை ஆண்டொன்றுக்கு ரூபா 1,800,000/- வரை அதிகரித்தல் மற்றும் தனியாள் ஒருவரது வரி விதிக்கத்தக்க வருமானம் மீது ஏற்புடைய வரி வீதங்களை பின்வருமாறு திருத்தம் செய்தல்.<br><br>
<table>
<tr><th rowspan="2">விளிம்பு வரி விகிதம் (%)</th><th colspan="2">ஆண்டு வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூ.மில்லியன்)</th></tr>
<tr><th>முந்தைய விதிப்பு முறை</th><th>தற்போதைய விதிப்பு முறை</th></tr>
<tr><td>0</td><td>1.2 வரை</td><td>1.8 வரை</td></tr>
<tr><td>6</td><td>1.2 – 1.7</td><td>1.8 - 2.8</td></tr>
<tr><td>12</td><td>1.7 – 2.2</td><td>-</td></tr>
<tr><td>18</td><td>2.2 – 2.7</td><td>2.8 - 3.3</td></tr>
<tr><td>24</td><td>2.7 - 3.2</td><td>3.3 - 3.8</td></tr>
<tr><td>30</td><td>3.2 - 3.7</td><td>3.8 - 4.3</td></tr>
<tr><td>36</td><td>3.7 மேல்</td><td>4.3 மேல்</td></tr>
</table><br>
2) நிறுவன வருமான வரி (CIT) வீதங்களின் திருத்தம்<br><br>
(i) ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தியின் ஏற்றுமதி தவிர்ந்த வேறேதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தி, விற்பனை அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை என்பவற்றிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மீதும் பந்தயம் பிடித்தலும் சூதாட்டமும் நடத்துவதிலிருந்தான இலாபங்கள் மீதும் ஏற்புடைய வருமான வரி வீதத்தினை 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக அதிகரித்தல்<br><br>
(ii) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் சேவையாற்றும் ஏதேனும் சேவையிலிருந்து பெறப்படும் அல்லது பெறப்பட்ட இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய வருமான வரி வீதத்தை வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற, இலங்கைக்கு வெளியில் பயன்படுத்தப்படக்கூடிய எந்தவொரு ஆளுக்கும் ஏற்புடைய வருமான வரி வீதத்தை விதித்தல்.<br><br>
(iii) ஏதேனும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபங்கள் மீதும் , வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து அத்தகைய இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய 15 சதவீத வருமான வரி வீதங்களை விதித்தல்.<br><br>
3) முற்கூட்டிய வருமான வரி வீதம் (பிடித்து வைத்தல் வரி வீதம்)<br>
வட்டி அல்லது கழிவு மீதான ஏற்புடைய முற்பண வருமான வரி வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்தல்
</td></tr>
<tr><td colspan="2">முத்திரைத் தீர்வை- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரத் தீர்வை ( விசேட ஏற்பாடுகள்) சட்டம்</td></tr>
<tr><td>01.04.2025</td><td>
2025.03.27 ஆம் திகதிய 2429/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>
- ஏதேனும் சொத்தின் குத்தகை அல்லது வாடகை தொடர்பான ஏதேனும் சாதனத்தின் மீது பொருந்தக்கூடிய முத்திரைத் தீர்வையை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தத்தில் (வாடகைக் கொள்முதல் ஒப்பந்தங்களைத் தவிர்த்து) குறிப்பிடப்பட்டுள்ள முழு காலத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த குத்தகை அல்லது வாடகை தொகை, அதில் எந்தவொரு முன்பணமும் உட்பட, ஒவ்வொரு ரூ.1,000 அல்லது அதன் ஒரு பகுதிக்காக ரூ.10 இலிருந்து ரூ.20 ஆக உயர்த்தல்.
</td></tr>
</table>

**கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - செப்டெம்பர் 2025) (தொடர்ச்சி)**

| நடைமுறைக்கு வரும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **2025 ஆம் 17 ஆம் இலக்க, பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம்** | |
| 03.09.2025 | பின்வருவனவற்றிற்காக பணச்சூதாட்ட ஒழுங்குமுறை ஆணையமொன்றை ஸ்தாபித்தல்,<br>அ. பணச்சூதாட்ட நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்<br>ஆ. பணச்சூதாட்டம் தொடர்பாக வருமானத்தை வசூலிப்பதை உறுதி செய்தல்<br>இ. பணச் சூதாட்டத்தை நடத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியை உறுதி செய்தல்<br>ஈ. பணச்சூதாட்டத் தொழிலின் ஒருமைப்பாட்டில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்<br>ஊ. பணச்சூதாட்டம் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்தல் |
| **பெறுமதி சேர் வரி (VAT) – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| | 2025 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி(திருத்த) சட்டம் |
| 01.01.2024 | 1) 2023 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (பெசேவ) (திருத்த) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெ.சே.வ சீர்திருத்தங்களை சீராக நடைமுறைப்படுத்துவதற்கும் தெளிவினைப் பேணுவதற்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்திலிருந்து விலக்களிப்புகளை அகற்றுவதன் எதிர்பாராத விளைவுகளைத் தவிர்ப்பதற்கு. |
| 11.04.2025 | 2) வர்த்தக நோக்கங்களுக்காக ஏற்றுமதி/ இறக்குமதி மேற்கொள்ளும் போது பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது இறக்குமதியாளர்/ ஏற்றுமதியாளர் பெறுமதி சேர் வரி பதிவு செய்தல் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாது நிரந்தர பெசேவ பதிவுச் சான்றிதழை வழங்குதல் |
| 11.04.2025 | 3) பெசேவ வரிவிலக்களிக்கப்பட்ட வழங்கல்கள் / கொள்வனவுகள் தொடர்பிலும் பெ.சே.வ விபரத்திரட்டைப் பதிவுசெய்யுமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அறிவுரை வழங்குதல். |
| 11.04.2025 | 4) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப்பால் மற்றும் தயிர் வழங்கலுக்கு பெ.சே வரியிலிருந்து விலக்கு அளித்தல். |
| 01.10.2025 திகதி முதல் | 5) 2025 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து இலத்திரனியல் தளத்தினூடாக வதிவற்றோரினால் வழங்கப்படும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியை விதித்தல். |
| 01.10.2025 திகதி முதல் | 6) 2025 ஒக்டோபர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வ முறைமையினை நீக்குதல் மற்றும் மீளளிப்பு செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக இடர்நேர்வு அடிப்படையிலான மீளளிப்பு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல். |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 11.01.2025 | 2025.01.10 ஆம் திகதிய 2418/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வருடாந்திர பணவீக்க சீராக்கல் குறியீட்டின் அடிப்படையில் அலகு விகித உற்பத்தித் தீர்வை (பெட்ரோல் மற்றும் டீசல் நீங்கலாக) கொண்ட அனைத்துப் பொருட்களுக்கான உற்பத்தித் தீர்வையையும் 5.9 சதவீதம் உயர்த்துவதற்காக. |
| 01.02.2025 | 2025.01.31 ஆம் திகதிய 2421/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மின்சார வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையை 100 சதவீதம் அதிகரிப்பதற்காக |
| 29.04.2025 | 2025.04.28 ஆம் திகதிய 2434/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல<br>- வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, மின்சார திரட்டியை சார்ஜ் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப அலகுகளுக்கான உற்பத்தி வரியை விதித்தல். |
| **மதுவரி (கட்டளைச் சட்டம்) – மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 11.01.2025 | மதுவரி அறிவித்தல் இல.01/2025 (2025.01.10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வருடாந்த பணவீக்க சீராக்கல் சுட்டெண்ணின் அடிப்படையில் மதுபானங்களுக்கான மதுவரி வரியை 5.9 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக. |

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - செப்டெம்பர் 2025) (தொடர்ச்சி)

| நடைமுறைக்கு வரும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **புகையிலை வரி - 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம்** | |
| 02.04.2025 | 2025.04.01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல<br>- புகையிலைக்கு அறவிடப்படும் புகையிலை வரியை ஒரு புகையிலை குச்சிக்கு ரூ.2 லிருந்து ரூ.3 ஆக உயர்தல் |
| **செஸ் வரி விதிப்பனவு - 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்** | |
| 01.08.2025 | 2025.07.02 ஆம் திகதிய 2443/49 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பட்டியலிடப்பட்ட உயர் விளைவுடைய கம்பனிகள் கடன் பிணையங்கள் தொடர்பாக மதிப்பின் மீது 0.006% செஸ் வரியை விதிக்கவும், நிறுவன கடன் பத்திரங்களின் மொத்த பரிவர்த்தனை மதிப்பில் 3 ஆல் வகுக்கப்பட்ட 0.01% செஸ் வரியை திருத்தவும். |
| **சுங்க இறக்குமதி தீர்வை (CID) - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 28.01.2025 | வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 01/2025 (2025.01.27 ஆம் திகதிய 2421/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது 20 சதவீதம் அல்லது 20 சதவீத சுங்க இறக்குமதி வரியை குறிப்பிட்ட தீர்வை வீதத்துடன் (கலப்பு வரி வீதம்) விதிப்பதற்கு |
| 29.04.2025 | வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 02/2025 (2025.04.28 ஆம் திகதிய 2434/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிய தேசிய உப பிரிவுகளை உருவாக்குவதற்காக |
| **சுங்க மேலதிக கட்டணம் - சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)** | |
| 01.02.2025 | 2025.01.31 ஆம் திகதிய 2421/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி வரிகள் மீது மிகை விதிப்பொன்றை விதிப்பதற்காக. |
| 29.04.2025 | 2025.04.28 ஆம் திகதிய 2434/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் மீது 50 சதவீத கூடுதல் கட்டணம் விதிப்பதற்கு |
| **விசேட வியாபார பண்ட அறவீடு (SCL) – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2025 | 2024.12.31 ஆம் திகதிய 2417/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட 63 பொருட்களின் இறக்குமதிக்கு நடைமுறையில் உள்ள வரியின் செல்லுபடியாகும் காலத்தை 2025 டிசம்பர் 31 வரை நீட்டித்தல். |
| 28.01.2025 | 2025.01.27 ஆம் திகதிய 2421/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல<br>- ரமழான் பண்டிகை காலத்தை கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்காக ஒரு கிலோவுக்கு ரூபா 199/- தீர்வை விலக்கு அளித்தல். |
| 26.08.2025 | 2025.08.25 ஆம் திகதிய 2451/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்ளூர் அறுவடை காலத்தைக் கருத்தில் கொண்டு, உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீடு கிலோவுக்கு ரூ.60/- லிருந்து ரூ.80/- ஆகவும், வெங்காய இறக்குமதிக்கான பெரிய வெங்காயத்தை கிலோவுக்கு ரூ.10/- லிருந்து ரூ.50/- ஆகவும் உயர்த்துதல். |
| **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் – 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்** | |
| 28.01.2025 | 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- வர்த்தக அல்லது சரக்கு போக்குவரத்து வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்காக. |

**கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - செப்டெம்பர் 2025) (தொடர்ச்சி)**

| நடைமுறைக்கு வரும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 01.02.2025 | 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- சொந்த பாவனை மோட்டார் வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை) உட்பட மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தினை நீக்குவதற்கும் ஆகக்கூடிய வயது வரம்பை மீறும் மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை விதிப்பதற்கும் |
| 19.03.2025 | 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.03.19 ஆம் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான ஏற்றுமதி பரிசோதனை சான்றிதழ்களை வழங்குவதற்கு அனைத்து நாடுகளுக்குமான அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகராக வெரிடாஸ் பணியகத்தை நியமித்தல் மற்றும் ஏற்றுமதி நாட்டில் வங்கியின் முத்திரை இல்லாமல் பெறப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான ஏற்றுமதி பரிசோதனை சான்றிதழ்களை வழங்குவதற்கு நிகழ்நிலை சரிபார்ப்பு மூலம் உரிம வங்கிகளுக்கு அதிகாரமளித்தல் (2013 ஏப்ரல் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதியால் தேவைப்படுத்தப்படுகிறது). |
| 29.04.2025 | 2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.04.29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2023.01.01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் பிரகாரம் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலை மீளாய்வு செய்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பொருட்களை பட்டியலிலிருந்து நீக்குதல் மற்றும் எந்தவொரு நாட்டிலும் பதிவு செய்யப்படாத மின்சார மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் தேவையை நீக்குதல் (புத்தம் புதியது) |
| 05.05.2025 | 2025 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.05.05 ஆம் திகதிய 2435/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br><br>மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு பொருந்தக்கூடிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குமுறைகளில், 28 ஏப்ரல் 2025 தேதியிட்ட அதி விசேட வர்த்தமானி இலக்கம் 2434/02 மூலம் மின்சார மோட்டார் வாகனங்களுக்காக வெளியிடப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் தேசிய உட்பிரிவுகளை இணைத்தல். |
| 19.05.2025 | 2025 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.05.19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br><br>ஜூன் 10, 2025 வரை, 2501.00 என்ற HS குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மூல அயோடின் சேர்க்கப்படாத உப்பு மற்றும் உண்ணக்கூடிய அயோடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூள் மற்றும் சிறுமணி உப்பு) இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ICL) தேவையை நீக்க.* |
| 15.08.2025 | 2025 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.08.15 ஆம் திகதிய 2449/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>- 2024.05.17 ஆம் இலக்க 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலத்தை 2025.09.30 ஆம் திகதி நீடித்தல்.* |
| **புறப்படுகை அறவீடு- 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 31.01.2025 | 2025.01.31 ஆம் திகதிய 2421/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவையின் ஊடாக இலங்கையை விட்டு வெளியேறும் நபர்களுக்கான வரி விலக்குக் காலத்தை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு நீடித்தல்.<br>- இரத்மலான மற்றும் யாழ்ப்பாண விமானநிலையங்கலிருந்து விமான சேவையை ஆரம்பிக்கும் விமானங்களின் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு விதிக்கப்படும் புறப்படுகை அறவீட்டிற்காக 30 அமெரிக்க டொலரை சலுகை வீதமாக ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு |

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - செப்டெம்பர் 2025) (தொடர்ச்சி)

| நடைமுறைக்கு வரும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் அறவீடு- 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 01.04.2025 | 2025.04.01 ஆம் திகதிய 2430/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்கள், உள்வரும் உள்ளூர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டு கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணம் மீதான செலுத்த வேண்டிய விதிப்பின் வீதத்தை 2025 ஜனவரி 01 முதல் 2027 டிசம்பர் 31 வரை மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்தல். |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி – 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 01.02.2025 | 2024.12.31 ஆம் திகதிய 2421/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- மின்சார வாகனம் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு எரிபொருள் வகைக்குமான மோட்டார் வாகனங்களுக்கான சொகுசு வரி வரம்பினை 1.5 மில்லியன் ரூபாவால் திருத்தியமைப்பதற்கு |
| 29.04.2025 | 2025.04.28 ஆம் திகதிய 2434/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது பகுதியளவு டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் மீது மோட்டார் வாகனங்களின் மீதான சொகுசு வரியை விதிப்பதற்கு |
| **2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்** | |
| 20.09.2025 | 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர ஒழுங்குவிதிகள் (2025.09.20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br><br>- கொழும்பு துறைமுக நகரின் அதிகார எல்லைக்குள் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்குகள் அல்லது ஊக்கத்தொகைகளை வழங்குவது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் |

** – இந்த வர்த்தமானி தற்போது நடைமுறையில் இல்லை*

### 2.3 அரசாங்கச் செலவினம்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசாங்கச் செலவினம் ரூபா 3,712.5 பில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 3,381.3 பில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 331.2 பில்லியன் மூலதனம் மற்றும் நிகர கடன் ஆகும். அரசாங்கச் செலவினங்கள் ஆண்டுதோறும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன்படி, 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அரசாங்கம் 2025 ஆம் ஆண்டில் செலவினங்களைச் செய்ய முடிந்தது.

அட்டவணை 2.11 அரசாங்க செலவின செயலாற்றுகை

*ரூபா. மில்லியன்*

| விடயம் | சன - ஆகஸ்ட் | |
|---|---|---|
| | 2024 | 2025(அ) |
| **மீண்டெழும் செலவினம்** | **3,041,565** | **3,381,309** |
| சம்பளங்கள் | 659,502 | 760,687 |
| ஓய்வூதியம் | 254,006 | 282,905 |
| வட்டி | 1,559,721 | 1,687,571 |
| ஏனைய | 568,336 | 650,146 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **435,320** | **331,183** |
| **மொத்த செலவினம்** | **3,476,885** | **3,712,492** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

#### ஆள்சார் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபை ஊழியர்கள் உட்பட அரசாங்க ஊழியர்களின் ஆள்சார் வேதனாதிகளுக்கான செலவு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 15.3 சதவீதம் அதிகரித்து ரூபா 760.7 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 659.5 பில்லியனாக இருந்தது. இதே நேரத்தில், ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான செலவு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 11.4 சதவீதம் அதிகரித்து ரூபா 282.9 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 254.0 பில்லியனாக இருந்தது. இந்த அதிகரிப்பு முக்கியமாக அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பள அதிகரிப்பு மற்றும் 2025 வரவு செலவுத்திட்டத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய திருத்தங்கள் காரணமாக ஏற்பட்டது.

#### வட்டிக் கொடுப்பனவுகள்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டி கொடுப்பனவுகள் 8.2 சதவீதம் அதிகரித்து ரூபா 1,687.6 பில்லியனாக உயர்ந்துள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,559.7 பில்லியனாக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உள்நாட்டு கடனுக்கான வட்டி கொடுப்பனவுகள் 0.5 சதவீதம் அதிகரித்து ரூபா 1,466.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா

1,459.7 பில்லியனாக இருந்தது. இதற்கிடையில், வெளிநாட்டுக் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 121.1 சதவீதம் அதிகரித்து ரூபா 221.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 100.0 பில்லியனாக இருந்தது.

### நலன்புரிச் செலவுகள்

அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துவதைத் தொடர்ந்ததுடன், சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்கு மேம்பட்ட இலக்கு மற்றும் பாதுகாப்பு மூலம் நிவாரணம் வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்திய அதே நேரத்தில் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு அதிகாரம் அளித்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், சமூக நலன், சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, மேம்பாட்டு உதவி மற்றும் உற்பத்தி மற்றும் தொழிலாளர் சந்தை உள்ளடக்கத்திற்கான மானியங்கள் உள்ளிட்ட மொத்த நலச் செலவு 17.7 சதவீதம் அதிகரித்து ரூபா 629.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது ரூபா 534.4 பில்லியனாக இருந்தது. சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்புச் செலவுகள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 557.3 பில்லியனாக இருந்தது. முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகை உள்ளிட்ட "அஸ்வெசும" திட்டத்திற்கான ரூபா 112.6 பில்லியனின் செலவு இதில் அடங்கும், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 27.2 சதவீதம் அதிகமாகும்.

**அட்டவணை 2.12 : அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2024 - 2025**

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| 2024 | சன | 11.97 | 12.20 | 12.00 | 13.83 | 13.08 | 14.21 | 13.65 | 321.17 |
| | பெப் | 9.87 | 9.95 | 10.05 | – | 10.81 | – | 11.90 | 312.58 |
| | மார் | 10.07 | 10.23 | 10.28 | – | 11.33 | – | 12.25 | 305.67 |
| | ஏப் | 9.61 | 9.89 | 9.99 | – | 11.44 | 11.72 | 12.37 | 299.42 |
| | மே | 8.62 | 9.04 | 9.18 | – | – | 11.01 | – | 299.69 |
| | யூன் | 10.07 | 10.19 | 10.31 | – | 10.69 | 11.90 | 11.78 | 303.81 |
| | யூலை | 9.14 | 9.34 | 9.95 | – | 12.07 | – | – | 303.76 |
| | ஆகஸ் | 9.49 | 9.84 | 10.01 | – | – | – | 12.98 | 300.69 |
| | செப் | 10.49 | 10.72 | 10.05 | – | 13.79 | – | 13.98 | 301.15 |
| | ஒத் | 9.35 | 9.68 | 9.95 | – | 11.79 | 11.84 | – | 293.79 |
| | நவ | 8.73 | 8.97 | 9.08 | 11.63 | 10.62 | – | 11.28 | 292.01 |
| | திசெ | 8.62 | 8.77 | 8.96 | – | – | 10.42 | 10.75 | 291.68 |
| 2025 | சன | 7.93 | 8.09 | 8.47 | – | – | 10.42 | 10.73 | 296.18 |
| | பெப் | 7.57 | 7.87 | 8.35 | – | – | 10.63 | – | 296.80 |
| | மார் | 7.50 | 7.84 | 8.25 | – | – | – | 10.72 | 295.91 |
| | ஏப் | 7.65 | 7.97 | 8.30 | – | – | 10.30 | 10.64 | 298.53 |
| | மே | 7.55 | 7.77 | 7.98 | – | 8.85 | 10.22 | 9.47 | 299.41 |
| | யூன் | 7.55 | 7.75 | 7.94 | – | – | 9.41 | – | 299.90 |
| | யூலை | 7.62 | 7.91 | 8.03 | – | – | 9.46 | 9.77 | 301.12 |
| | ஆகஸ் | 7.58 | 7.89 | 8.03 | – | – | – | – | 301.49 |

*மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

மேலும், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான நலத்திட்டங்களுக்கான அரசாங்கச் செலவினம் 54 சதவீதம் அதிகரித்து ரூபா 25.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 16.4 பில்லியனாக இருந்தது. இது, பாடசாலை ஊட்டச்சத்துத் திட்டத்திற்கான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன், அனைத்து ஆரம்பப் பாடசாலை சிறுவர்களுக்கும் "பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம்" உள்ளடக்கம் அதிகரித்ததன் காரணமாகும்.

அட்டவணை 2.13 **நலன்புரி செலவினம்**

ரூபா. மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | சன - ஆகஸ்ட் 2024 உண்மையான | சன - ஆகஸ்ட் 2025 தற்காலிக |
|---|---|---|
| **சமூக நலன்புரி** | **76,784** | **94,426** |
| அரச வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருட்கள் வழங்கல் (ஆயுர்வேத மருந்துகள் உட்பட) | 45,780 | 74,952 |
| பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் காப்புறுதி (சுரக்ஷா) | 1,166 | 1,376 |
| ஓய்வூதியதாரர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம் | 689 | 486 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 251 | 490 |
| ரணவிரு மாபியா ரகவரண கொடுப்பனவு | 1,451 | 916 |
| அரசு ஊழியர்களுக்கான சொத்துக் கடனுக்கான வட்டி | 1,131 | 958 |
| பொருளாதார ரீதியாக லாபமற்ற வழித்தடங்களுக்கான மானியம், சமூக ரீதியாக கட்டாயமான பேருந்து சேவைகளின் பங்களிப்பு (சிசு சரிய, கமி சிரிய மற்றும் நிசி சிரிய) மற்றும் ஆயுதப்படை பேருந்துகள். | 2,169 | 2,606 |
| சுவசரிய - 1990 இலவச அம்புலன்ஸ் சேவை | 1,514 | 1,686 |
| முதியோர்களின் கணக்குகளில் வட்டி வேறுபாடு | 20,000 | 10,000 |
| உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் | 632 | 332 |
| ஏனைய | 2001 | 622 |
| **சமூக பாதுகாப்பு** | **401,200** | **462,944** |
| குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு காசு மானியம் | 97,819 | 98,132 |
| குறைந்த வருமானம் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு | 4,288 | 9,453 |
| முதியோருக்கான நிதி உதவி | 8,709 | 29,769 |
| சிறுநீரக நோயாளிகளுக்கு நிதி உதவி | 1,852 | 3,166 |
| **பாடசாலை எழுதுபொருட்கள் கொள்வனவு செய்ய நிதி உதவி** | - | 2,833 |
| ஓய்வூதியம் | 254,006 | 282,631 |
| இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடு | 31,088 | 33,312 |
| விவசாயிகளுக்கு ஓய்வூதியம் | 3,284 | 3,523 |
| ஏனைய | 155 | 126 |
| **சுகாதாரம் மற்றும் போசாக்கு** | **16,496** | **25,442** |
| திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் | 1,551 | 1,750 |
| கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவுப் பொதி | 4,161 | 4,196 |
| பாடசாலை போசணை உணவுத் திட்டம் | 9,466 | 17,894 |
| முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு | 673 | 1,342 |
| ஏனைய | 645 | 260 |
| **கல்வி** | **15,326** | **18,931** |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 3,421 | 1,567 |
| பாடசாலை சீருடைகள் | 1,039 | 58 |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | 570 | 2490 |
| புலமைப் பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 616 | 824 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் மற்றும் மாணவர் உதவி | 1,750 | 3,245 |
| அரச பல்கலைக்கழகங்களில் சேர முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம். | 1,228 | 1,335 |
| பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவகால சீட்டுக்கள் | 6,125 | 8,250 |
| ஏனைய | 577 | 1,162 |
| **அபிவிருத்தி மானியங்கள்** | **24,628** | **27,695** |
| உர மானியம் | 24,280 | 22,625 |
| ஏனைய | 348 | 5070 |
| **மொத்தம்** | **534,434** | **629,439** |

*மூலம் : தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்*

## பொது முதலீடு

சில வெளிநாட்டு கடன்களைப் பெறுவதில் தாமதம், பெறுகை, காணி மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கருத்திட்டங்களின் சில சரிசெய்தல்களுக்கான கொடை வழங்குநர் அங்கீகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு தடைகள் காரணமாக, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பொது முதலீடு செயல்படுத்தப்படாமல் இருந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பின்வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா 338.8 பில்லியனுக்கும் அதிகமான பொது முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன:

i. கிராமிய பாதைகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப் பாதைகளின் பராமரிப்பு, மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ரூபா 121.5 பில்லியன்

ii. குழாய் நீர் வழங்கல் திட்டங்கள், வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்காக ரூபா 18.73 பில்லியன்

iii. புகையித சேவைகள், புகையித பாதைகள் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ரூபா 9.96 பில்லியன்

iv. நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய பெறுமதிச் சங்கிலியில் உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 14.99 பில்லியன்

v. வட மத்திய மாகாண கால்வாய் உட்கட்டமைப்பு மேம்பாட்டை நிறைவு செய்தல் மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான பிற உட்கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் மூலம் விவசாய நோக்கங்களுக்கான நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரூபா 20.23 பில்லியன்

vi. கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழிற்கல்வி மையங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களின் மறுசீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூபா 21.8 பில்லியன்

vii. மருத்துவமனைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கும் மருத்துவமனை மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கும் ரூபா 19.43 பில்லியன்

viii. மின்சாரம் வழங்கல் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 2.59 பில்லியன்் மற்றும்

ix. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, கடன் மறுசீரமைப்பு காரணமாக நிறுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களை மீண்டும் தொடங்குதல் மற்றும் டாக்டர் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை உள்ளிட்ட பொது நிறுவனங்களுக்கு பங்குரிமை பங்களிப்பாக ரூபா 42.72 பில்லியன்.

## 2.4 பொது திறைசேரியின் காசுப் பாய்ச்சல் செயலாற்றுகை

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வருமானம் மற்றும் பிற பெறுகைகள் மூலம் பொது திறைசேரிக்கான காசுப் பாய்ச்சல் ரூபா 3,187.5 பில்லியனாக இருந்ததுடன், இது ரூபா 2,989.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டதிலிருந்து 106.6 சதவீதத்தை எட்டியது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த ரூபா 2,496.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 27.6 சதவீதம் அதிகமாகும். இதே நேரத்தில், தொடர்ச்சியான மற்றும் பொது முதலீட்டிற்கான காசு வெளியேற்றம் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 3,620.2 பில்லியனாக இருந்ததுடன் இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்திலிருந்த ரூபா 3,664.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய சரிவைக் குறிக்கிறது.

**அட்டவணை 2.14 : அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**

*ரூபா. பில்லியன்*

| விடயம் | சனவரி - ஆகஸ்ட் | | |
|---|---|---|---|
| | 2024 | 2025 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | 599.5 | 805.1 | 805.1 |
| வருமானம் மற்றும் பிறபெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 2,496.8 | 2,989.4 | 3,187.4 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -3,065.0 | -3,890.7 | -3,292.4 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல் * | -599.7 | -676.1 | -327.7 |
| தேறிய காசு மிகை / (பற்றாக்குறை) | -1,167.8 | -1,577.5 | -432.7 |
| மொத்த பெறுகை * | 2,306.5 | 2,569.6 | 2,295.6 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -924.6 | -1,286.7 | -1,457.6 |
| தேறிய பெறுகை | 1,382.0 | 1,282.8 | 838.0 |
| சரிப்படுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புக்கள் ஏனைய மாற்றல்கள் போன்றன) | -53.5 | - | -4.7 |
| **இறுதி காசு மீதி** | **760.1** | **510.4** | **1,205.8** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

2025 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு, நிகர பணப் பற்றாக்குறை கணிசமாக 62.9 சதவீதம் குறைந்து ரூபா 432.7 பில்லியனாக இருந்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,167.8 பில்லியனாக இருந்தது. இந்த முன்னேற்றம் ஈர்க்கக்கூடிய வருமான அறவீடு மற்றும் மூலதனச் செலவினத்தில் கணிசமான குறைப்பு ஆகியவற்றால் உந்தப்பட்டதுடன் இது தொடர்ச்சியான செலவினங்களில் மிதமான அதிகரிப்பு இருந்தபோதிலும் சிறந்த காசுப் பாய்ச்சலினை பிரதிபலிக்கிறது. 2025 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு, இறுதி நேர்மறை காசு இருப்பு, 2024 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட ரூபா 760.1 பில்லியனிலிருந்து ரூபா 1,205.8 பில்லியனாக

கணிசமாக அதிகரித்துள்ளது. இது நாட்டில் ஒட்டுமொத்த காசு நிலைமையை மேம்படுத்துவதை பிரதிபலிக்கிறது. காசு உள்ளீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வருமான அறவீடு அதிகரிப்பு மற்றும் வரி இணக்கத்தை மேம்படுத்துவதன் காரணமாக இருக்கலாம். மேலும், விவேகமான நிதி முகாமைத்துவ மற்றும் செலவினக் கட்டுப்பாடுகள் ஆரோக்கியமான காசு இருப்புக்குப் பங்களித்தன. இந்த மேல்நோக்கியப் போக்கு ஒரு நேர்மறையான நிதிக் கண்ணோட்டத்தைக் குறிப்பதுடன், அதன் நிதி உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கும், அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முதலீடு செய்வதற்கும், பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் வினைத்திறனை மேம்படுத்துகிறது.

### 2.5 அரசாங்க படுகடன் முகாமைத்துவம்

2025 நிதியாண்டிற்கான மொத்த நிகர கடன்பெறுகை வரையறையினை ரூபா 4,000 பில்லியனாக பாராளுமன்றம் அங்கீகாரமளித்துள்ளது. இதில், 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலத்திற்கு ரூபா 2,723.5 பில்லியன் ஒதுக்கப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து கடன் பெறுகையானது முறையே ரூபா 1,847.8 பில்லியன் மற்றும் ரூபா 281.8 பில்லியனாகக் காணப்பட்டது. இந்தக் கடன் பெறுகைகளின் முதன்மை நோக்கங்கள் படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை நிறைவேற்றுவதும் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளுக்கு நிதியளிப்பதுமாகும்.

அறிக்கையிடப்பட்ட திகதியின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த கடன்களில் ஏறக்குறைய 86.8 சதவீதம் உள்நாட்டில் பெறப்பட்டவையாகும். திறைசேரி முறிகள் உள்நாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் முக்கியமாக திறைசேரி முறிகளை வெளியிடுவதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கடன் வரையறையின் பயன்பாடு ரூபா 2,129.6 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தரவுகள் ரூபா 240.2 பில்லியன் மதிப்புடைய நிகர எதிர்மறை திறைசேரி உண்டியல் வெளியீடுகளைக் குறிக்கின்றன. புதிய வெளியீடுகளைவிட வெளிப்பாய்ச்சல் அதிகமாக இருந்தன என்பதைக் குறிப்பதுடன், இக்காலப் பகுதியில் திறைசேரி உண்டியல் திருப்பிச் செலுத்துதலின் நிலுவையிலுள்ள அளவைக் குறைக்க பணப் பாய்ச்சல் நிதி பயன்படுத்தப்பட்டது என்பதைக் குறிக்கிறது.

**அட்டவணை 2.15 : மொத்த உள்நாட்டு கடன்கள் (2025 சனவரி முதல் ஆகஸ்ட் வரை)**

*ரூபா பில்லியன்*

| மூலங்கள் | 2025 சன-ஆக |
|---|---|
| திறைசேரி முறிகள் (மொத்தக் கடன்) | 1,847.8 |
| **மொத்தம்** | **1,847.8** |

### 2.6 வெளிநாட்டு நிதியளிப்பு

குறித்த காலட்பகுதியில் திறைசேரி உண்டியல்களின் மூலம் ரூபா 240 பில்லியன் தேரிய எதிர்மறை கடன் பெறுகை காரணமாக சந்தையிலிருந்து பெறப்பட்ட ரூபா 4,495 பில்லியனுக்கு எதிராக இக்காலப்பகுதியில் ரூபா 4,735 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சி அடைந்தன.

### மேன்நோக்கு

இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது தற்போது பெரும்பாலும் முடிவுக்கு வந்துள்ளதுடன், இது கடன் நிலைத்தன்மை மற்றும் பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பாதையில் அவசியம். நான்கு ஆண்டு சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்ட காலத்தில் இலங்கை சுமார் ஐ.அ.டொ. 9.5 பில்லியன் கடன் சேவை கொடுப்பனவு குறைப்புகளைப் பெறும், இலங்கையின் முறிகளின் கூப்பன் விகிதத்தில் 4.4 சதவீதத்தில் 31 சதவீதம் குறைப்பு மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான சராசரி முதிர்வு சுயவிவரத்தின் நீடிப்பு காணப்பட்டது.

### வெளிநாட்டு நிதி உறுதிமொழிகள்

2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலகட்டத்தில், இருதரப்பு, பலதரப்பு அல்லது வெளிப்புற வணிகக் கடன் வழங்குநர்களுடன் புதிய உறுதிமொழிகள் எதுவும் செய்யப்படவில்லை.

### வெளிநாட்டு நிதி வழங்கல்கள் மற்றும் பயன்பாடு

2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலகட்டத்தில், மொத்த வெளிநாட்டுக் கடன் வழங்கல்கள் ஐ.அ.டொ. 938.8 மில்லியனாக இருந்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மிகப்பெரிய தொகை வழங்கல்கள் பதிவு செய்யப்பட்டதுடன் இது மொத்த தொகையில் 73 சதவீதமாகும். இதைத் தொடர்ந்து உலக வங்கி (11 சதவீதம்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (7 சதவீதம்) உடனான கடன் ஒப்பந்தங்களின் கீழ் வழங்கல்கள் செய்யப்பட்டன. முக்கிய இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இருதரப்பு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதைத் தொடர்ந்து, வழங்கல்கள் மீண்டும் தொடங்கப்பட்டன. மேலும் அந்தக் காலகட்டத்தில், இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து வழங்கல்கள் ஐ.அ.டொ. 26.4 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டன.

துறைவாரியான ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, வரவு செலவுத்திட்ட ஆதரவுத் துறை பெரும்பான்மையான பங்கைக் கொண்டிருந்தது. இது மொத்த விநியோகங்களில் 65 சதவீதத்தைக் குறிக்கிறது. அதைத் தொடர்ந்து மனிதாபிமான உதவித் துறை (7 சதவீதம்) மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறை (5 சதவீதம்) ஆகியவை காணப்படுகின்றன.

**அட்டவணை 2.16 : 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள்**

| அபிவிருத்தி பங்காளிகள் / கடன் வழங்கும் முகவர்கள் | வழங்கல்கள்* (ஐ.அ.டொ.மில்லியன்) |
|---|---|
| | கடன் |
| **இருதரப்பு** | **26.4** |
| ஜப்பான் | 14.3 |
| சவூதி நிதி | 8.1 |
| நெதர்லாந்தின் மத்திய கூட்டுறவு | 2.6 |
| கொரியா | 1.2 |
| **பலதரப்பு** | **912.4** |
| சர்வதேச நாணய நிதியம் | 681.6 |
| உலக வங்கி | 107.5 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 70.4 |
| ஒபெக் நிதி | 33.9 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 17.9 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 1.0 |
| **மொத்தம்** | **938.8** |

*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

*வெவ்வேறு நாணயங்களில் செய்யப்படும் பணப் பரிமாற்றங்களை ஐ.அ. டொலராக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பணப்பரிமாற்ற திகதியிலும் நிலவும் குறியீட்டு மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*
*விசேட எடுப்பனவு உரிமத்தினை ஐ.அ.டொலராக மாற்றுவதற்கு, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட்ட முந்தைய மாத , இறுதிக்கு பயன்படுத்தப்படும் விசேட எடுப்பனவு உரிமத்தின், மாத இறுதி மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*
* *தற்காலிகமானது*

**வரைபு 2.4 :அபிவிருத்தி பங்காளிகள் / கடன் வழங்கும் நிறுவனங்களின்படி 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான வழங்கல்கள் (ஐ.அ.டொ மில்லியன்)**




*மூலம் :பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*

வரைபு 2.5 : **பிரதான பொருளாதார துறைகளினால் 2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை பயன்படுத்தப்பட்ட வழங்கல்கள் (ஐ.அ.டொ மில்லியன்)**




*மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்*
*** ஏனைய = விவசாயம், கல்வி மற்றும் பயிற்சி, சுகாதார மற்றும் சமூக நலன்புரி, காணி அபிவிருத்தி , மின்சக்தி மற்றும் வலுசக்தி, கிராமிய அபிவிருத்தி*

### வெளிநாட்டுப் படுகடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள்

2025 ஆகஸ்ட் இறுதியில் உள்ளவாறு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் ஐ.அ.டொ. 37.3 பில்லியனாக இருந்தது.[1] மொத்த அரசாங்க வெளிநாட்டுக் கடனில் பலதரப்பு கடன் 36 சதவீதமாகும், அதைத் தொடர்ந்து வணிகக் கடன் 34 சதவீதமாகவும், இருதரப்பு கடன் 30 சதவீதமாகவும் உள்ளது.வணிகக் கடனில் ஏறக்குறைய 81 சதவீதம் நிலுவையிலுள்ள சர்வதேச இறையாண்மை முறி வெளியீடுகளைக் கொண்டுள்ளதுடன், மீதமுள்ளவை வெளிநாட்டு நாணய தவணைக் கால நிதி வசதிகளை (கூட்டுக் கடன்கள்) உள்ளடக்கியது.

பலதரப்பு கடன் வழங்குநர்களில், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை மொத்த பலதரப்பு கடனில் 83 சதவீதத்திற்கும் அதிகமாகக் கொண்டிருந்தன. இருதரப்பு கடனைப் பொறுத்தவரை, 61 சதவீதம் பாரிஸ் கிளப் அல்லாத கடன் வழங்குநர்களால் நடத்தப்பட்டதுடன், மீதமுள்ள 39 சதவீதம் பாரிஸ் கிளப் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்தது.

*1 - தற்காலிகமானது, மத்திய அரசின் நிலுவையிலுள்ள வெளிநாட்டுக் கடன் மட்டுமே காட்டப்பட்டுள்ளது.*
*- கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து திரட்டப்பட்ட செலுத்தப்படாத அசல் தொகையும் இதில் அடங்கும்.*
*- திறைசேரி உண்டியல் / திறைசேரி முறிகளின் வதிவல்லாத வைத்திருப்புகள் சேர்க்கப்படவில்லை.*
*- சர்வதேச இறையாண்மை முறி நிலுவைத் தொகைகள், அவற்றின் தற்போதைய வதிவாளர் / வதிவல்லாதோரின் அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை.*

2025 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரையிலான மொத்த படுகடன்[2] மீள் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ. 1,745.0 மில்லியனாக இருந்தன. இதில் ஐ.அ.டொ. 1,036.2 மில்லியன் அசல் திருப்பிச் செலுத்துதலுக்காகவும், மீதமுள்ள ஐ.அ.டொ. 708.8 மில்லியன் வட்டி செலுத்துதலுக்காகவும் இருந்தன.

2025 ஆகஸ்ட் இறுதி வரை, வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் எதுவும் இல்லை. ஒப்பந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, எந்தவொரு பொருந்தக்கூடிய சலுகை காலத்திற்கும் உட்பட்டு, நிலுவையிலுள்ள காலத்தில் செலுத்தப்படாத வதிவல்லாதோருக்குச் செலுத்த வேண்டிய கடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் (அசல் மற்றும் வட்டி) வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ஆகும். இருப்பினும், சர்ச்சைக்குரிய காலக்கெடுவுக்கு உட்பட்டு, நிலுவையிலுள்ள கடன் மற்றும் கடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு நோக்கங்களுக்காக வெளிநாட்டு கொடுப்பனவு நிலுவைத் தொகைகளாகக் கருதப்படாது. மீள்திட்டமிடல் அல்லது மறுசீரமைப்பு ஒப்பந்தம் கோரப்படும் கடன் மீள்கொடுப்பனவை செலுத்தாததால் ஏற்படும் நிலுவைத் தொகைகள் இந்த வரையறையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.[3]

*2 படுகடன் மீள்கொடுப்பனவு = மூலதனம் + வட்டிக் கொடுப்பனவு*
*3 2025 யூலை மாத சர்வதேச நாணய நிதிய நாட்டு அறிக்கை இல. 25/162*

# பொருளாதார நோக்குகள்

# 03

## 3.1 மேன் நோக்கு

2025 இன் முன்னரையாண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் எதிர் கொள்ள வேண்டியேற்பட்ட தடைகளைத் தொடர்ந்து தாங்கிக் கொள்வதன் மூலம் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும், குறிப்பிடத்தக்க அளவிலான பெறுபேறுகளை பிரதிபலிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் மேலும் வலுவடைந்தது. 2025 இன் முன்னரையாண்டில், பொருளாதாரம் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு, விவசாயம், கைத்தொழில், சேவைகள், மற்றும் வரிகள் கழிக்கப்பட்ட மானியங்கள் உள்ளடங்களாக பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் பரந்த அடிப்படையில் யதார்த்த நிலைக்கு மாறின. பதினொரு மாதங்களாக தொடர்ச்சியாக எதிர்மறை எல்லைக்குள் காணப்பட்ட பணவீக்கமானது, 2025 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் முறையே 1.5 சதவீதம் மற்றும் 2.1 சதவீதத்தினை பதிவதன் மூலம் நேர்மறை வலயத்திற்குள் திரும்பியுள்ளது. 2025 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத இறுதியில், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 6.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களை அடைந்துள்ளது. வர்த்தகக் கொள்கை பற்றிய நிச்சயமற்ற தன்மை அதிகரித்தமை, மற்றும் புவிசார் அரசியல் தடைகளுக்கு மத்தியிலும் வெளிவாரித் துறையானது அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனைக் கொண்டிருந்தது. பிரதானமாக, சுற்றுலாத் துறையிலிருந்தான வருமானம் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் உள்வரும் பண வரவுகள் அதிகரித்தமையின் காரணமாகவே 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிவாரித் துறையின் நடைமுறைக் கணக்கு மீதியானது, 2 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் மிகையொன்றினை பதிவு செய்தது. படுகடன் மீள் கட்டமைப்புச் செயன்முறையானது, பெரும்பாலும் முடிவடைந்ததன் காரணமாக படுகடன்களின் நிலைபேறான தன்மையை மீட்டெடுப்பதற்கான ஒரு பாதை உருவாக்கப்பட்டுள்ளது. வளர்ச்சிப் பாதையை விருத்தி செய்வதற்காக பொருளாதாரத்தின் கட்டமைப்பு பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அத்தியாவசியமான சரிசெய்தல்களுடன் கொள்கை களை தொடர்ச்சியாக பேணும் அதே வேளை, விரிவான முறையில் ஊழல் எதிர்ப்புச் செயற்பாடுகளை அறிமுகம் செய்வதன் மூலம் பேரினப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அனைத்துத் துறைகளின் ஊடாக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை விருத்தி செய்வதற்கு பரந்த மற்றும் மிகவும் அவசியமான சீர்திருத்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைதல் மற்றும் சீர்திருத்த முயற்சிகளில் முதலீட்டாளர்களின் தன்னம்பிக்கையை பிரதிபலிப்பதன் மூலம் பிச் தரப்படுத்தல் மதிப்பீடுகள் இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குனர்களின் புறக்கணிப்புத் தன்மையை தரப்படுத்தல் வரையறுக்கப்பட்ட கடன் புறக்கணிப்பு'' மட்டத்திலிருந்து (RD) 'CCC+' மட்டம் வரை மூடீஸ் முதலீட்டுச் சேவை அதன் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குனர்களின் தரப்படுத்தலை 'Ca', மட்டத்திலிருந்து 'Caa1' மட்டம் வரையிலும், S&P உலகளாவிய தரப்படுத்தல் இலங்கையின் நீண்ட கால மற்றும் குறுகிய கால வெளிநாட்டு நாணய தரப்படுத்தலை SD/SD மட்டத்திலிருந்து 'CCC+'/C' மட்டம் வரை உயர்த்தியுள்ளது.

**வரைபு 3.1 : மொ.உ.உ. வளர்ச்சி**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமை, அரச மற்றும் முறை சாரா துறைகளின் சம்பளங்களை அதிகரித்தல், தனியார் துறைக்கு கணிசமான அளவில் கடன்களை வழங்குதல், மற்றும் 2025 பெப்ரவரி மாதத்திலிருந்து வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை என்பன உள்நாட்டு கேள்வியில் உறுதியானதொரு முறையில் மறுமலர்ச்சியை அடைவதற்கு வழிவகுத்தன.

தயாரிப்பு, சுரங்கம், மற்றும் நிர்மாண செயற்பாடுகளின் வலுவான செயலாற்றுகைகளினன் காரணமாக கைத்தொழில் துறை விரிவடைந்தமை, நிதிச்சேவைகள், மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் உறுதியான ஒரு வளர்ச்சியைக் காட்டியமை, மற்றும் சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சி என்பனவற்றின் காரணமாக சேவைகள் துறை விரிவடைந்தமையினால் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆண்கள் மற்றும் பெண்கள் இரு சாராரினதும் வேலையின்மை விகிதங்கள் முறையே 2.5 சதவீதம் மற்றும் 6.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வேலையின்மை விகிதமானது, 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவாகிய 4.5 சதவீதத்திற்கு ஒப்பீட்டளவில் 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 3.8 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கிடையில், ஆண் மற்றும் பெண் தொழிற்படையின் பங்களிப்பு விகிதங்கள் முறையே 70.1 சதவீதம் மற்றும் 32.0 சதவீதம் வரை உயர்வடைந்ததன் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 47.1 சதவீதமாக இருந்த தொழிற்படை பங்களிப்பு விகிதம் 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 49.7 சதவீதம் வரை உயர்வடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்குப் பதிலாக 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒற்றைக் கொள்கை வட்டி வீத பொறிமுறையொன்றினால் மாற்றப்பட்டதோடு, ஆரம்பத்தில் 8.00 சதவீதமாக

இருந்த ஒரு நாள் கொள்கை வீதத்தை அறிமுகம் செய்வதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பாக எதிர்வு கூறுவதற்கும் மற்றும் செயல்படுத்துவதற்கும் முதன்மை நாணய செயற்பாடொன்றாக அதனை முன் வைத்தது. 2025 மே மாத இறுதியில் ஒரு நாள் கொள்கை வட்டி வீதத்தை 7.75 சதவீதம் வரை குறைப்பதன் மூலம் 2025 ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பேணியுள்ளது. நடைமுறையிலுள்ள நாணயக் கொள்கை நிலைப்பாடானது, தற்போது நிலவும் பொருளாதார மறுமலர்ச்சிக்கான செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் அதே வேளை, 5.0 சதவீத நடுத்தர கால பண வீக்க இலக்கை அடைவதற்கு இசைவானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால் கொள்கை வட்டி வீதமானது அம்மட்டத்தில் பேணப்பட்டு வந்துள்ளது.

**வரைபு 3.2 : மொ.உ.உற்பத்தி வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக நிலவிய பணச் சுருக்கத்தைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI, 2021=100), ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மை பணவீக்கம், 2025 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் 1.5 சதவீதத்திலிருந்து 2025 ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 2.1 சதவீதமாக அதிகரித்தது. உணவுப் பணவீக்கமானது (ஆண்டுக்கு ஆண்டு) 2025 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் 2.9 சதவீதம் வரை துரிதமாக உயர்வடைந்த அதே வேளை, உணவல்லாத பொருட்களின் பண வீக்கமானது, (ஆண்டுக்கு ஆண்டு) 0.7 சதவீதத்தில் நிலையான மட்டத்தில் இருந்தது. பொருத்தமான நாணய மற்றும் அரசிறைக் கொள்கைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியமையின் காரணமாக எதிர்வரும் ஒரு சில மாதங்களில் பண வீக்கம் படிப்படியாக அதிகரிக்கும் எனவும். நடுத்தர கால அடிப்படையில் இது 5 சதவீத இலக்கை நோக்கி நெருங்கும் எனவும் எதிர்வரும் எதிர்வு கூறல்கள் மூலம் பிரதிபலிக்கன்றன. இதற்கிடையில், பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கப் போக்குகளை பிரதிபலிக்கும் மையப் பண வீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) 2025 செப்தெம்பர் மாதத்தில் 2.0 சதவீதமாக மாறாமல் காணப்பட்டது.

நடைமுறையில் இடம் பெறும் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் பங்குச் சந்தை செயலாற்றுகையானது குறிப்பிடத்தக்க அளவிலான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. முதலீட்டாளர்களின் தன்னம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்கும், மற்றும் சந்தை அணுகலை விருத்தி செய்தலை பிரதிபலிப்பதன் மூலம் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் மொத்த பங்கு விலைச் சுட்டெண்ணானது, (ASPI, 1985=100) 18,027 அலகுகள் வரை 48.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதே வேளை, (ஆண்டுக்கு ஆண்டு) ஸ்டாண்டர்ட் என்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 சுட்டெண் (S&P SL20, 2004=1,000) 5,353 அலகுகள் வரை 49.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வெளிவாரித் துறை மேம்படுத்தப்பட்ட ஒரு செயலாற்றுகையினை எடுத்துக் காட்டியது. வெளிநாட்டுக் கேள்வி உறுதியான முறையில் வளர்ச்சியடைந்தமை, மற்றும் பிரதான ஏற்றுமதிக் கைத்தொழில்கள் மறுமலர்ச்சியை பிரதிபலிப்பதன் மூலம் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 8.5 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களாக இருந்த வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 9.1 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்கள் வரை 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. பிரதானமாக உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக முன்னைய ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 12.1 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களாக இருந்த வர்த்தகப் பொருட்களின் இறக்குமதியானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 13.3 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களனாக 10.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு நிகராக 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தக நிலுவையானது, 3.6 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 4.3 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களாக அதிகரித்துள்ளது.

பிரதான புலம் பெயர்ந்த இடங்களிலிருந்தான உறுதியான உட்பாய்ச்சல்களை பிரதிபலிப்பதன் மூலம், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 4.3 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களாக இருந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பண வரவுகள், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 5.1 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களை வரை 19.3 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சியொன்றினை பதிவு செய்துள்ளது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய் அதிகரித்தமையினாலும், மற்றும் ஒரு சுற்றுப் பிரயாணியினால் மேற்கொள்ளப்படும் செலவு அதிகரித்தமையின் காரணமாகவும், முன்னைய ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2.2 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களாக இருந்த சுற்றுலாத் துறையினால் ஈட்டப்பட்ட வருவாய் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2.3

ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்கள் வரை 5.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதற்கு நிகராக சேவைகள் துறையிலிருந்து கிடைக்கப் பெற்ற தேறிய உட்பாய்ச்சல்கள் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பதிவான 2.6 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2.7 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன்கள் வரை விரிவடைந்துள்ளது.

நடைமுறையிலுள்ள படுகடன் சேவைக் கடப்பாடுகளுக்கு மத்தியிலும் கூட, 2025 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத இறுதியில் சீன மக்கள் வங்கியுடனான அந்நியச் செலாவணிப் பரிமாற்ற வசதி உள்ளடங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் பெறுமதி 6.2 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியனாக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத இறுதி நிலவரப்படி, ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து இன்று வரை 3.3 சதவீதத்தினால் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது.

## 3.2 பொருளாதார வளர்ச்சி

விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் போன்ற பொருளாரத்தின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட நேர்மறையான வளர்ச்சியின் காரணமாக 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் 4.8 சதவீதத்தினால் விரிவடைந்தது. விவசாயத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவாகிய 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 0.6 சதவீதத்தினால் சிறிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில் துறையைப் பொறுத்த வரை, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவாகிய 10.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7.9 சதவீதத்தினால் மிதமான அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவாகிய 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சேவைகள் துறையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 3.3 சதவீதத்தினால் மிதமான அளவில் விரிவடைந்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் மீது அறவிடப்படும் மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், 2024 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் பதிவான 6.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 10.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

### விவசாயம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8 சதவீதம் பங்களிப்புச் செலுத்தும் விவசாயத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் பதிவாகிய 1.8 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 0.6 சதவீதத்தினால் சிறிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. தானியப் பயிர்ச்செய்கை, (அரிசி தவிர்ந்த), கால் நடை உற்பத்தி, மற்றும் நாற்றுக்களை பரப்புதல், வனப் பயிர்ச்செய்கை, மரப் பலகை தயாரிப்பு, கடல் மீன்பிடி, மற்றும் கடல் நீர்வாழ் தாவரங்கள் போன்ற துணைத் துறைகளில் ஏற்பட்ட நேர்மறையான வளர்ச்சியே இதற்கான பிரதான காரணமாகும். இருப்பினும், எண்ணெய்யைக் கொண்டுள்ள பழங்களின் பயிர்ச்செய்கை, (தேங்காய், செவ்விள நீர் தேங்காய், எண்ணெய் பனை), இறப்பர் பயிர்ச்செய்கை, நன்னீர் மீன் பிடிக் கைத்தொழில், நன்னீர் வாழ் உயிரினங்களின் வளர்ப்பு போன்ற துணைத் துறைகள் இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தன.

**அட்டவணை 3.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்)**

*ரூ. மில்லியனில்*

| | துறை | 2022(ஆ) | 2023(ஆ) | 2024(அ) | முதல் பாதி | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024(ஆ) | 2025(அ) | 2024(ஆ) | 2025(அ) |
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **911,252** | **925,822** | **937,104** | **466,927** | **469,935** | **1.8** | **0.6** |
| 1 | தானியங்கள் | 16,507 | 16,920 | 18,758 | 9,573 | 10,100 | 17.1 | 5.5 |
| 2 | நெல் (அரிசி தவிர) | 94,730 | 110,946 | 114,369 | 56,261 | 57,599 | 5.5 | 2.4 |
| 3 | மரக்கறிகள் | 103,161 | 106,135 | 109,069 | 52,499 | 52,077 | -0.1 | -0.8 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 3,803 | 3,515 | 3,187 | 1,555 | 1,570 | -11.3 | 1.0 |
| 5 | பழங்கள் | 73,310 | 78,076 | 81,548 | 40,368 | 41,163 | 4.0 | 2.0 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 111,196 | 104,725 | 92,703 | 51,171 | 44,931 | -1.5 | -12.2 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 62,867 | 61,912 | 62,953 | 30,635 | 32,428 | -6.4 | 5.9 |

அட்டவணை 3.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) (தொடர்ச்சி)

*ரூ. மில்லியனில்*

| | துறை | 2022(ஆ) | 2023(ஆ) | 2024(அ) | முதல் பாதி | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024(ஆ) | 2025(அ) | 2024(ஆ) | 2025(அ) |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,229 | 1,136 | 1,110 | 555 | 596 | -2.3 | 7.4 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 101,653 | 99,729 | 101,653 | 49,583 | 50,576 | 2.8 | 2.0 |
| 10 | இறப்பர் | 23,871 | 22,024 | 22,503 | 11,942 | 9,903 | -3.6 | -17.1 |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள் | 27,533 | 29,440 | 25,949 | 12,942 | 12,862 | -12.4 | -0.6 |
| 12 | விலங்கு வேளாண்மை | 83,307 | 83,587 | 95,363 | 45,455 | 52,860 | 9.2 | 16.3 |
| 13 | தாவர வளர்ச்சி | 965 | 728 | 626 | 311 | 339 | -26.1 | 8.8 |
| 14 | விவசாயத் துறைக்கான ஒத்தழைப்புச் செயற்பாடுகள் | 33,062 | 32,888 | 31,868 | 17,659 | 18,256 | -2.5 | 3.4 |
| 15 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 50,931 | 47,221 | 46,209 | 22,378 | 23,892 | -0.8 | 6.8 |
| 16 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 95,447 | 100,099 | 104,947 | 51,374 | 54,042 | 4.2 | 5.2 |
| 17 | நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 27,682 | 26,739 | 24,290 | 12,665 | 6,740 | 11.9 | -46.8 |
| | **கைத்தொழில்** | **3,308,573** | **3,002,968** | **3,333,008** | **1,654,609** | **1,785,503** | **10.5** | **7.9** |
| 18 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 198,613 | 154,303 | 184,166 | 88,929 | 101,795 | 14.2 | 14.5 |
| 19 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 869,371 | 899,739 | 954,409 | 471,506 | 490,008 | 8.8 | 3.9 |
| 20 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 511,860 | 450,438 | 500,210 | 249,361 | 284,023 | 6.5 | 13.9 |
| 21 | மரம் மற்றும் தயாரிப்புகள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 29,758 | 23,807 | 24,975 | 11,646 | 11,766 | 12.1 | 1.0 |
| 22 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 52,069 | 47,259 | 48,734 | 26,922 | 30,789 | -0.2 | 14.4 |
| 23 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 6,474 | 21,895 | 19,690 | 11,349 | 12,485 | 5.8 | 10.0 |
| 24 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 82,349 | 82,949 | 90,994 | 50,241 | 48,742 | 21.5 | -3.0 |
| 25 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 67,505 | 56,157 | 60,972 | 31,093 | 32,445 | 8.2 | 4.3 |
| 26 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 85,182 | 84,670 | 86,813 | 45,546 | 54,727 | 4.3 | 20.2 |
| 27 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலே-ாக உற்பத்தி தயாரிப்புகள் | 58,780 | 60,303 | 70,963 | 31,080 | 34,076 | 39.2 | 9.6 |
| 28 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 59,181 | 50,229 | 53,372 | 22,068 | 23,503 | 3.2 | 6.5 |
| 29 | தளபாட உற்பத்திகள் | 60,837 | 56,089 | 61,740 | 36,648 | 40,118 | 6.6 | 9.5 |
| 30 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 79,088 | 66,747 | 72,427 | 42,375 | 39,275 | 9.7 | -7.3 |

அட்டவணை 3.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) (தொடர்ச்சி)

*ரூ. மில்லியனில்*

| | துறை | 2022 (ஆ) | 2023 (ஆ) | 2024 (அ) | முதல் பாதி | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024 (ஆ) | 2025 (அ) | 2024 (ஆ) | 2025 (அ) |
| 31 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 178,059 | 174,017 | 185,978 | 95,721 | 99,926 | 13.2 | 4.4 |
| 32 | நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 14,059 | 11,590 | 11,906 | 6,504 | 6,818 | 5.2 | 4.8 |
| 33 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 28,070 | 27,955 | 28,319 | 13,135 | 14,114 | 3.8 | 7.5 |
| 34 | நிர்மாணம் | 927,319 | 734,821 | 877,339 | 420,486 | 460,892 | 13.7 | 9.6 |
| | **சேவைகள்** | **7,217,485** | **7,206,496** | **7,381,059** | **3,560,132** | **3,677,533** | **2.3** | **3.3** |
| 35 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 1,675,528 | 1,677,941 | 1,700,232 | 853,201 | 865,889 | 1.1 | 1.5 |
| 36 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,364,677 | 1,422,786 | 1,464,296 | 713,291 | 736,020 | 3.3 | 3.2 |
| 37 | தபால், கூரியர்.·. விரைவுத் தபால் செயற்பாடுகள் | 19,780 | 20,349 | 21,627 | 10,621 | 11,496 | 8.1 | 8.2 |
| 38 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 166,030 | 209,172 | 274,921 | 128,642 | 144,995 | 34.4 | 12.7 |
| 39 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி.·. ஒளி தயாரிப்புக்கள் | 37,350 | 36,551 | 37,767 | 19,331 | 19,601 | 3.7 | 1.4 |
| 40 | தொலைத்தொடர்பு | 140,524 | 137,403 | 143,109 | 70,575 | 72,675 | 4.0 | 3.0 |
| 41 | தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 238,455 | 187,341 | 198,512 | 97,678 | 109,916 | 2.3 | 12.5 |
| 42 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவை-கள் | 529,744 | 475,201 | 482,557 | 233,540 | 264,876 | -0.2 | 13.4 |
| 43 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 78,187 | 103,519 | 89,030 | 45,378 | 51,623 | -8.7 | 13.8 |
| 44 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 554,456 | 521,463 | 543,265 | 275,632 | 284,487 | 4.4 | 3.2 |
| 45 | தொழில்வாய்மை சேவைகள் | 248,467 | 254,360 | 263,382 | 117,330 | 120,480 | 3.9 | 2.7 |
| 46 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 629,031 | 618,542 | 600,314 | 281,558 | 274,577 | -3.7 | -2.5 |
| 47 | கல்வி | 302,435 | 307,712 | 314,755 | 161,451 | 162,759 | 2.4 | 0.8 |
| 48 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 237,677 | 236,087 | 234,358 | 100,252 | 102,569 | -1.8 | 2.3 |
| 49 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 995,147 | 998,069 | 1,012,933 | 451,649 | 455,567 | 1.1 | 0.9 |
| | **மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில்** | **11,437,311** | **11,135,286** | **11,651,170** | **5,681,668** | **5,932,971** | **4.5** | **4.4** |
| | **(+) பொருட்கள் மீதான வரிகள் கழி - மானியங்கள்** | **723,576** | **742,270** | **821,299** | **386,605** | **427,676** | **6.4** | **10.6** |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | | **12,160,886** | **11,877,556** | **12,472,469** | **6,068,273** | **6,360,647** | **4.6** | **4.8** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) திருத்தப்பட்ட*
*(ஆ) தற்காலிகமானது*

**வரைபு 3.3 : விவசாயத்துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

### நெற் பயிர்ச்செய்கை

நெற் பயிர்ச்செய்கை எனும் துணைத் துறை, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 5.5 சதவீத விரிவாக்கத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2.4 சதவீதத்தினால் சிறிய அளவில் விரிவாக்கப்பட்டது. 2025 மார்ச் மாத இறுதியில் பதிவான விதைக்கப்பட்ட நிலப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு 2024/2025 பெரும்போகத்தின் நெல்லுற்பத்தியானது, 2.62 மெட்ரிக் தொன் மில்லியன்களாக இருந்த தோடு, அது 2023/2024 பெரும் போகத்தின் விளைச்சலுடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. வெள்ளத்தினால் நெற் பயிர்ச்செய்கைக்கு சேதம் ஏற்படல், பூச்சி நாசினி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் மஞ்சள் நிறமாதல் போன்றனவற்றை இவ்வாறு உற்பத்தி குறைவடைவதற்கான காரணங்களாகக் காட்ட முடியும். இருப்பினும், 2025 ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் பதிவான விதைக்கப்பட்ட நிலப் பரப்பின் அடிப்படையில் எடுக்கும் போது, 2025 சிறு போகத்திற்கான நெல் உற்பத்தி 2.2 மெட்ரிக் தொன் மில்லியன்களாக இருந்ததோடு, அதனை 2024 ஆம் ஆண்டின் சிறு போகத்துடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீத அதிகரிப்பாகும். சிறு போகத்தில் போதிய அளவிலான நீர் கிடைக்கப் பெற்றமை மற்றும், விதைக்கப்பட்ட நிலப் பரப்பு விரிவடைந்தமையுமே இவ்வாறு நெல் உற்பத்தியானது அதிகரிப்பதற்கு காரணங்களாக அமைந்திருக்கலாம்.

### தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை

தேயிலைப் பயிர்ச்செய்கை எனும் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 6.4 சதவீத சுருக்கத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் 5.9 சதவீதத்தினால் விரிவடைந்திருந்தது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 128.0 கிலோ கிராம் மில்லியன்களாக இருந்த தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் தேயிலை உற்பத்தியானது, 134.9 கிலோ கிராம் மில்லியன் வரை 5.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வாறு தேயிலை உற்பத்தி யானது அதிகரிப்பதற்கு முக்கியமாக சாதகமான வானிலையே காரணமாக அமைந்திருந்தது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 3.6 சதவீத சிறு சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 17.1 சதவீதத்தினால் குறிப்பிடத் தக்க அளவில் சுருக்கமடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவாகிய 37.0 கிலோ கிராம் மில்லியன் இறப்பர் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இறப்பர் உற்பத்தியானது, 32.4 மில்லியன் கிலோ கிராம்கள் வரை 12.4 சதவீதம் வரை மிதமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது மேலும், எண்ணெய் உள்ள பழங்களின் பயிர்ச்செய்கை (தேங்காய், செவ்விள நீர், மற்றும் எண்ணெய் பனை), ஆகிய துணைத் துறைகளும், 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 1.5 சதவீத சுருக்கத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 12.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதன் படி,தேங்காய் உற்பத்தியானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 1,549 மில்லியன் தேங்காய் உற்பத்திக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1,351 மில்லியன் தேங்காய்கள் வரை 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

### தானியங்கள், காய்கறிகள், பழங்கள், வாசனைத் திரவியங்கள், மற்றும் மருந்துப் பயிர்கள்

தானியப் பயிர்ச் செய்கை (அரசி தவிர்ந்த) துணைத் துறை, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 17.1 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 5.5 சதவீதத்தினால் சிறிய

அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. காய்கறிகள் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 0.1 சதவீத மிகச் சிறிய அளவிலான சுருக்கத்துடன் ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 0.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளதோடு, பழங்கள் எனும் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 4.0 வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 இன் அதே காலப்பகுதியில் 2.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வாசனைத் திரவியங்கள். நறுமணம் தரும் பயிர்கள், மருந்து மற்றும் மருந்துவப் பயிர்கள் எனும் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 2.8 சதவீத விரிவாக்கத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 2.0 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது.

### மீன்கள் மற்றும் கால்நடை வளங்கள்

கடற்றொழில் கைத்தொழில், மற்றும் கடல் வாழ் உயிரினங்கள், எனும் துணைத் துறைகள் 2024 ஆம் ஆண்டின் அரைப் பகுதியில் 4.2 சதவீதம் விரிவடைந்ததோடு அதனை ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 5.2 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. இருப்பினும், நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நன்னீர் வாழ் உயிரினங்கள் எனும் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவான 11.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 46.8 சதவீத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் சுருக்கமடைந்துள்ளது. நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவிலான சுருக்கத்தின் காரணமாக மொத்த மீன்களின் உற்பத்தி (கடல்நீர் மற்றும் நன்னீர்) 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 204 கிலோ கிராம் மில்லியனாக இருந்த மொத்த மீன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 186 கிலோ கிராம் மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. கால்நடை உற்பத்தித் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் 9.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததோடு, ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டில் அதே காலப்பகுதியில் 16.3 சதவீததத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தது.

### கைத்தொழில் மற்றும் தயாரிப்புத் துறை

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.0 சதவீத பங்களிப்பைச் செலுத்தும் கைத்தொழில் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 10.5 சதவீத நேர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டு அதே காலப்பகுதியில் 7.9 சதவீத நேர் மறையான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்துள்ளது. நிர்மாணக் கைத்தொழில், சுரங்கம், மற்றும் அகழ்வு, நெசவுத் தயாரிப்பு, தைத்த ஆடைகள், மற்றும் தோல் தொடர்பான உற்பத்திப் பொருட்கள், உலோகமல்லாத ஏனைய கனிய வள உற்பத்திப் பொருட்கள், மின்சாரம், எரிவாயு, நீராவி, மற்றும் குளிரூட்டல் நிரம்பல் துணைத் துறைகள் முறையே 9.6 சதவீதம், 14.5 சதவீதம், 13.9 சதவீதம், 20.2 சதவீதம், மற்றும் 4.4 சதவீதமாக நேர் மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தமையானது, இதற்கான பிரதான காரணமாகும்.

இதற்கு மேலதிகமாக உணவு, பானங்கள், மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களை (3.9 சதவீதம்), மரத் தளபாடங்கள் தவிர்ந்த மரப் பலகை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய மரத் தயாரிப்புக்கள் (1.0 சதவீதம்), காகிதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்கள், அச்சிடல் நடவடிக்கைகள், ஊடகத் தயாரிப்புகளின் மீள் தயாரிப்பு, (14.4 சதவீதம்) நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய தயாரிப்புப் பொருட்கள், (10.0 சதவீதம்), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புப் பொருட்கள் (4.3 சதவீதம்), அடிப்படை உலோகப் பொருட்கள் மற்றும் புனையப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள், (9.6 சதவீதம்), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தயாரிப்புக்கள் (6.5 சதவீதம்), தளபாடத் தயாரிப்புக்கள் (9.5 சதவீதம்), நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு, மற்றும் வழங்கலும் (4.8 சதவீதம்), கழிவகற்றும் நடவடிக்கைகள் (7.5 சதவீதம்) போன்ற துணைத் துறைகளும் 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் விரிவடைந்துள்ளன.

இருப்பினும், இரசாயன உற்பத்திப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்துப் பொருட்களின் உற்பத்திகள் எனும் துணைத் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 21.5 சதவீத குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சிக்கு ஒப்பிட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 3.0 சதவீதமாக சுருங்கியுள்ளது. மேலும், ஏனைய தயாரிப்புப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் துணைத் துறையின் திருத்தங்கள் மற்றும் பொருத்தல்கள் துணைத் துறையும், 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 9.7 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7.3 சதவீதமாகக் சுருங்கியுள்ளது.

வரைபு 3.4 : கைத்தொழில்த் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வரைபு 3.5 : தயாரிப்புத் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

மொத்த மின்னுற்பத்தியானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 8,284 ஜிகாவாற் மணித்தியாலங்களுடன் ஒப்பீட்டளவில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 8,675 ஜிகாவாற் மணித்தியாலங்கள் வரை 4.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கைத்தொழில் துறை நடவடிக் கைகளின் விரிவாக்கத்தின் காரணமாக கைத்தொழில் துறைக்கு விற்பனை செய்யப்பட்ட மின்சக்தி அலகுகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 2,263 ஜிகாவாற் மணித்தியாலங்கள் ஒப்பீட்டளவில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2,315 ஜிகாவாற் மணித்தியாலங்கள் வரை 2.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில், நீர்மின்சக்தி மூலமான மின் உற்பத்தி மிதமான அளவில் 18.9 சதவீதம் அதிகரித்து, 2,975 ஜிகாவாற் மணித்தியாலங்களாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் இருந்த 2,503 ஜிகாவாற் மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும். காற்றாலைகள் மூலமான மின் உற்பத்தியும் 2025 முதல் பாதியில் 8.0 சதவீதம் அதிகரித்து, 166 ஜிகாவாற் மணித்தியாலங்களாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் இருந்த 154 ஜிகாவாற் மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும். எனினும், எரிபொருள் எண்ணெய் மூலமான மின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் 28.8 சதவீதம் குறைந்தது. அதேசமயம், கரி

அடிப்படையிலான மின் உற்பத்தி மிதமான அளவில் 8.9 சதவீதம் சரிந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில், தனியார் துறை மூலம் மின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் 23.1 சதவீதம் அதிகரித்து, 2,233 ஜிகாவாற் மணித்தியாலங்களாக உயர்ந்தது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் இருந்த 1,814 ஜிகாவாற் மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும்.

### சேவைகள் துறை

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 55.2 சதவீதத் திற்கான பங்களிப்புச் செலுத்தும் சேவைகள் துறையானது, 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் பதிவான 2.3 சதவீதமாக சிறிய அளவிலான வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 3.3 சதவீதத்தினால் சிறிய அளவிலான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. இதற்கு பிரதானமாக தங்குமிட வசதிகளை வழங்குதல், உணவு மற்றும் பானங்களை வழங்கும் சேவைகள் (12.7 சதவீதம்), தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல் தொடர்பான ஆலோசனை சேவைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் (12.5 சதவீதம்), மற்றும் நிதிச்சேவை செயற்பாடுகள், மற்றும் மேலதிக நிதிச் சேவைகள் ஆகிய துணைத் துறைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கமேயாகும்.( 13.4 சதவீதம்).

இதற்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் மொத்த வர்த்தகம் மற்றும் சில்லறை வர்த்தகம் (1.5 சதவீதம்), பயணிகள், பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் போக்குவரத்து, மற்றும் களஞ்சிய வசதிகளை வழங்குதல், (3.2 சதவீதம்), தபால் மற்றும் கொண்டு செல்லல் சேவைகள் (8.2 சதவீதம்), ஒலி பரப்பு நடவடிக்கைகள், அரையொலி மற்றும் காணொளி தயாரிப்புகள் (1.4 சதவீதம்), தொலைத்தொடர்பு, (3.0 சதவீதம்), காப்புறுதி, மீள் காப்புறுதி, மற்றும் ஓய்வூதிய நிதியீடு, (13.8 சதவீதம்), குடியிருப்புகளின் உரிமை மற்றும் ஆதன கொள்முதல் (3.2 சதவீதம்), தொழில்முறை சேவைகள் (2.7 சதவீதம்), கல்வி (0.8 சதவீதம்), சுகாதார நடவடிக்கைகள், குடியிருப்பு பராமரிப்பு சேவைகள், சமூக தொழில் நடவடிக்கைகள் (2.3 சதவீதம்), மற்றும் பிற தனிப்பட்ட சேவைகள் (0.9 சதவீதம்), எனும் துணைத் துறையும் விரிவடைந்தது. இருப்பினும், பொது நிர்வாகம், பாதுகாப்பு, அத்தியாவசிய சமூக பாதுகாப்பு எனும் துணைத் துறை 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 2.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

வரைபு 3.6 : **சேவைத் துறை வகுதி - 2025 இன் முதல் அரையாண்டு**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## அட்டவணை 3.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| சுட்டி | 2021 | 2022 | 2023 | 2024(அ) | 2024(அ) | 2025(அ) |
|---|---|---|---|---|---|---|
| துறைமுக சேவைகள் | | | | | சன- ஆக | சன- ஆக |
| வருகை தந்த கப்பல்கள் (இல) | 4,180 | 4,073 | 4,809 | 4,562 | 2,987 | 3,335 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000) | 109,356 | 100,376 | 103,794 | 120,203 | 80,713 | 82,370 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000) | 7,249 | 6,862 | 6,950 | 7,792 | 5,141 | 5,435 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)(ஆ) | 6,050 | 5,832 | 5,754 | 6,623 | 4,386 | 4,577 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | **ஜுன் இறுதி** | **ஜுன் இறுதி** |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண்."000) | 2,852 | 2,651 | 2,308 | 2,122 | 2,155 | 2,142 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 29,959 | 28,838 | 28,986 | 28,820 | 29,005 | 29,027 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,587 | 1,388 | 1,163 | 1,046 | 1,063 | 1,074 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 22,106 | 21,668 | 22,864 | 23,149 | 23,349 | 23,686 |
| **சுகாதாரத் துறை** | | | | | | |
| தனியார் வைத்தியசாலைகள் | 243 | 250 | த.இ | த.இ | த.இ | த.இ |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 618 | 617 | த.இ | த.இ | த.இ | த.இ |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 78,228 | 78,228 | த.இ | த.இ | த.இ | த.இ |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 20,209 | 21,045 | த.இ | த.இ | த.இ | த.இ |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 39,091 | 40,775 | த.இ | த.இ | த.இ | த.இ |
| **நிதித் துறை** | | | | | **ஜுன் இறுதி** | **ஜுன் இறுதி** |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 7,369 | 7,378 | 7,522 | 7,613 | 7,602 | 7,489 |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 2,054,985 | 2,054,896 | 1,987,857 | 1,990,271 | 1,926,931 | 2,093,738 |
| | | | | | **ஆக இறுதி** | **ஆக இறுதி** |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் (உ) | 39 | 37 | 33 | 32 | 33 | 32 |
| விசேட குத்தகைக் கம்பனிகள் | 3 | 1 | 1 | 1 | 1 | 1 |
| **சுற்றுலாத்துறை** | | | | | **சன- ஆக** | **சன- ஆக** |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 194,495 | 719,978 | 1,487,303 | 2,053,465 | 1,362,668 | 1,566,523 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.) | 507 | 1,136 | 2,068 | 3,169 | 2,167 | 2,290 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 18.6 | 30.4 | 39.0 | த.இ | த.இ | த.இ |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | **சன- ஆக** | **சன- ஆக** |
| பேருந்துகள் | 281 | 404 | 685 | 146 | 111 | 853 |
| கார்கள் | 3,495 | 1,489 | 1,816 | 1,644 | 964 | 26,894 |
| லொறிகள்(இ ) | 2,593 | 940 | 523 | 1,284 | 790 | 1,700 |
| மோட்டார் சைக்கிள்கள் | 8,011 | 9,060 | 20,200 | 65,289 | 35,336 | 127,745 |
| முச்சக்கர வண்டிகள் | 2,093 | 36 | 60 | 94 | 50 | 5,967 |
| நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் (ஈ) | 12,616 | 5,285 | 4,020 | 5,070 | 3,190 | 5,176 |
| ஏனைய (ஊ) | | | 586 | 883 | 642 | 3,246 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி, போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை துறைமுக அதிகார சபை.*

*(அ) தற்காலிக*

*(ஆ) மீள்புதுப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக*

*(இ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.*

*(ஈ) நில வாகனங்கள், கைநில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக*

*(உ) வரையறுக்கப்பட்ட ETI நிதி கம்பனி நீங்கலாக*

*(ஊ) இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், குவாட்ரிசைக்கிள்கள் மற்றும் மோட்டார் வீடுகள் ஆகியவை அடங்கும்.*

### போக்குவரத்து மற்றும் துறைமுக சேவைகள்

போக்குவரத்துத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 3.2 சதவீதத்தினால் விரிவடைந்தது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 26,345 ஆக இருந்த புதிய வாகனங்களின் பதிவுகளின் எண்ணிக்கை, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 96,056 பதிவுகளாக ஆக 264.6 சதவீதத்தினால் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் முச்சக்கர வண்டிகளின் பதிவானது, 7,460.5 சதவீதத்தினாலும், மோட்டார் வாகனங்களின் பதிவானது, 2,110.1 சதவீதத்தினாலும், பேருந்துகளின் பதிவானது, 381.6 சதவீதத்தினாலும், இரட்டை நோக்க வாகனங்களின் பதிவுகள் 301.4 சதவீதத்தினாலும், மோட்டார் சைக்கிள்களின் பதிவானது, 226.1 சதவீதத்தினாலும், பொருட்கள் போக்குவரத்து வாகனங்களின் பதிவானது 96.8 சதவீதத்தினாலும், உழவு இயந்திரங்களின் பதிவானது, 56.7 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்களின் எண்ணிக்கையான இருபது-அடி கொள்கலன்களின் அலகுகளாக (TEUs) இருந்த 3.8 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டின் அதே

காலப்பகுதியில் 3.9 மில்லியன் வரை 2.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையானது, 16.2 சதவீதத்தினாலும் மற்றும் மீளக் களஞ்சியப்படுத்துவதற்காக கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை 4.6 சதவீதத் தினாலும் அதிகரித்த அதே வேளை, மீள கப்பலில் மாற்றுதலுக்கான கையாளப்பட்ட கொள் கலன்களின் எண்ணிக்கையானது, 0.4 சதவீதத்தினால் குறை வடைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் எண்ணிக்கை 59.5 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, இதனை ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் மொத்த சரக்குகளின் கையாளுகையானது, 60.8 மில்லியன் மெட்ரிக் தொன் வெளியேற்றமானது, 32.7 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, 2.1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் சரக்குகளின் எண்ணிக்கை 59.5 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, இதனை ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் சரக்குகளின் வெளியேற்றம் 33.7 மில்லியன் மெட்ரிக் தொன்களாக 3.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது 2024 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் சரக்குகளின் ஏற்றம் 26.7 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததோடு, இதனை ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் சரக்குகளின் ஏற்றம் 27.0 மில்லியன் மெட்ரிக் தொன்களாக 1.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது

### தொலைத்தொடர்பு

தொலைத்தொடர்பு துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் 3.0 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. செலியுலர் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட தொலைபேசி ஊடுருவலானது, 2024 ஆம் ஆண்டின் ஜுன் மாத இறுதியில் பதிவான 100 நபர்களுக்கு 143.2 ஆக இருந்ததோடு, அது ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் ஜுன் மாத இறுதியில் 100 நபர்களுக்கு 141.8 வரை 1.0 சதவீதத்தினால் சிறிய அளவில் குறைவடைந்துள்ளது. கையடக்கத் தொலைபேசிகளுக்கான இணையத்தள இணைப் புக்கள் உள்ளிட்ட இணையத்தள சந்தாதாரர்களின் எண்ணிக்கையானது, 2024 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் பதிவான 23.3 மில்லியனுக்கு ஒப்பீட்டளவில் 2025 ஜுன் மாத இறுதியில் 23.7 மில்லியன் வரை 1.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் பதிவான பெறுமதி களுடன் ஒப்பிடுகையில் 2025 ஜுன் மாத இறுதியில் நிரந்தர தொலைபேசி வரிசைகளின் எண்ணிக்கை 0.6 சதவீததத்தினால் சிறிய அளவில் குறைவடைந்துள்ள அதே வேளை, செலியுலர் தொலைபேசிகளின் எண்ணிக்கை 0.1 சதவீதத்தினால் சிறிய அளவில் குறைவடைந்துள்ளது.

### வேலையின்மை

வேலையின்மை வீதமானது, 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவாகிய 4.5 சதவீதத்துக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், 3.8 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான வேலையின்மையானது, முறையே 6.3 சதவீதமாகவும், மற்றும் 2.5 சதவீதமாகவும் பதிவாகியது. இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் (15-24 ஆண்டு வயதுகள்) இளைஞர்களின் வேலையின்மையானது, 19.7 சதவீதத்தை பதிவு செய்ததோடு, இது அனைத்து வயதினரிடையேயும் பதிவான மிக உயர்ந்த வேலையின்மை விகிதத்தைக் குறிக்கிறது. அனைத்து வயதினருக்கிடையில் ஆண்களுக்கிடையிலான வேலையின்மையை விட பெண்களுக்கிடையிலான வேலையின்மையானது, அதிகமாக உள்ளது.

இதற்கிடையில், தொழிற்படை பங்கேற்பு விகிதமானது, 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவாகிய 47.1 சதவீதத்திற்கு ஒப்பிட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 49.7 சதவீதம் வரை சிறிய அளவில் அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில், பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான தொழிற்படை பங்கேற்பு விகிதம் முறையே 32.0 சதவீதம் மற்றும் 70.1 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 3.3 : சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை**

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2023 | 2024 | 2025(அ) | 2021 | 2022 | 2023 | 2024(ஆ) | 2025(அ) |
| சனவரி | 1,682 | 82,327 | 102,545 | 208,253 | 252,761 | 4.4 | 151.7 | 153.5 | 341.8 | 400.7 |
| பெப்ரவரி | 3,366 | 96,507 | 107,639 | 218,350 | 240,217 | 8.8 | 169.4 | 161.6 | 345.7 | 367.6 |
| மார்ச் | 4,581 | 106,500 | 125,495 | 209,181 | 229,298 | 11.9 | 161.2 | 188.8 | 338.4 | 354.0 |
| ஏப்ரல் | 4,168 | 62,980 | 105,498 | 148,867 | 174,608 | 10.9 | 108.7 | 148.2 | 225.7 | 256.7 |
| மே | 1,497 | 30,207 | 83,309 | 112,128 | 132,919 | 3.9 | 43.5 | 100.0 | 154.0 | 164.1 |
| ஜுன் | 1,614 | 32,856 | 100,388 | 113,470 | 138,241 | 4.2 | 45.0 | 122.9 | 151.1 | 169.5 |
| ஜுலை | 2,429 | 47,293 | 143,039 | 187,810 | 200,244 | 6.3 | 85.0 | 219.0 | 328.3 | 318.5 |
| ஆகஸ்ட் | 5,040 | 37,760 | 136,405 | 164,609 | 198,235 | 13.1 | 67.9 | 210.5 | 282.1 | 258.9 |
| செப்டெம்பர் | 13,547 | 29,802 | 111,938 | 122,140 | | 35.3 | 40.5 | 152.2 | 181.0 | |
| ஒக்டோபர் | 22,771 | 42,026 | 109,199 | 135,907 | | 59.3 | 54.9 | 136.7 | 185.6 | |
| நவம்பர் | 44,294 | 59,759 | 151,496 | 184,158 | | 115.4 | 81.0 | 205.3 | 272.9 | |
| டிசெம்பர் | 89,506 | 91,961 | 210,352 | 248,592 | | 233.3 | 127.4 | 269.3 | 362.1 | |
| **மொத்தம்** | **194,495** | **719,978** | **1,487,303** | **2,053,465** | **1,566,523** | **506.8** | **1,136.3** | **2,068.0** | **3,168.6** | **2,290.0** |

*மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை*
*(அ) தற்காலிகமானது*
*(ஆ) திருத்தியடைக்கப்பட்டது*

**வரைபு 3.7 : தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

## 3.3 நாணயத் துறை அபிவிருத்திகள்

2025 ஜனவரி மாதத்தில் இலங்கை மத்திய வங்கி ஒரு நாள் கொள்கை வட்டி வீதத்தை (OPR) 2024 நவம்பர் மாதத்திலிருந்து முதலில் இருந்த பெறுமதியிலேயே அதாவது, 8.00 சதவீதமாகப் பேணுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு நாள் கொள்கை வட்டி வீதமானது, 2025 மே மாதத்தில் அடிப்படை இலக்கம் 25 இனால் குறைத்து 7.75 சதவீதம் வரை குறைப்பதன் மூலம் நாணயக் கொள்கை மேலும் எளிதாக்கப்பட்டது. அதன் படி, ± 50 அடிப்படைப் புள்ளிகள் விளிம்புடன் ஒரு நாள் கொள்கை விகிதத்துடன் இணைக்கப்பட்ட துணை நில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணை நில் கடன் வசதி வீதம் (SLFR) முறையே 7.25 சதவீதம் மற்றும் 8.25 சதவீதமாகக் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக, குறுகிய கால வீதங்கள் மற்றும் சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்கும் வீதம் மற்றும் சராசரி நிறையிடப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான வீதம் மற்றும் ஏனைய பிரதான சந்தை வைப்புக்கள் மற்றும் கடன் வட்டி வீதங்கள் போன்ற கடன் வழங்கும் வீதங்கள் உள்ளிட்ட பெரும்பாலான சந்தை வட்டி வீதங்கள் குறைவடைந்தன. 2025 ஜனவரி – ஜுலை மாதம் வரை முதன்மை ஏலங்களில் அனைத்து முதிர்வுகள் தொடர்பாக திறைசேரி உண்டியல்களின் வருவாய் வீதம் 90 – 100 அடிப்படைப் புள்ளிகளினால் எல்பீஎஸ்களினால் குறைவடைந்திருந்ததோடு, முதன்மை மற்றும் இரண்டாந் தர சந்தைகள் இரண்டிலும் நீண்ட கால முதிர்வுகளுடன் தொடர்புடைய வருவாய் வீதம் குறைவடைந்திருந்தது. இருப்பினும், 2025 ஜூன் மாத நடுப்பகுதியில் வருவாய் வீதங்களில் சிறிய அளவில் வீழ்ச்சியடையும் போக்கை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 2025 ஆம் ஆண்டில் நியதி இருப்பு வீதம் 2.00 சதவீதமாக மாற்றமில்லாது தொடர்ந்து காணப்பட்டதோடு, அதன் காரணமாக இது பணப் புழக்கத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தாததனால் நாணய நிலைமைகள் பிரதானமாக தாக்கம் செலுத்தியமையானது, கொள்கை விகித மாற்றங்கள் மற்றும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளினாலுமேயாகும்.

**அட்டவணை 3.4 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)**

| துறை | 2020 | 2021 | 2022 | 2023 (அ) | 2024 (அ) | முதல் பாதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2024 (ஆ) | 2025 (அ) |
| **விவசாயம்** | **-0.9** | **1.0** | **-4.1** | **1.6** | **1.2** | **1.8** | **0.6** |
| தேயிலை | -6.5 | 9.8 | -15.7 | -1.5 | 1.7 | -6.4 | 5.9 |
| நெல் | 7.7 | -11.8 | -11.8 | 17.1 | 3.1 | 5.5 | 2.4 |
| இறப்பர் | 0.2 | 9.9 | -9.8 | -7.7 | 2.2 | -3.6 | -17.1 |
| தானியங்கள் | 59.8 | 2.8 | -24.8 | 2.5 | 10.9 | 17.1 | 5.5 |
| மரக்கறிகள் | 8.9 | -1.7 | -5.5 | 2.9 | 2.8 | -0.1 | -0.8 |
| கால்நடைகள் | -3.7 | 8.2 | -11.4 | 0.3 | 14.1 | 9.2 | 16.3 |
| காடாக்கம், விறகு | -1.3 | 4.1 | 14.8 | -7.3 | -2.1 | -0.8 | 6.8 |
| மீன்பிடி | -17.0 | 1.5 | -10.5 | 3.0 | 1.9 | 5.6 | 5.1 |
| **கைத்தொழில்** | **-5.3** | **5.7** | **-16.0** | **-9.2** | **11.0** | **10.5** | **7.9** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | -10.9 | 1.4 | -31.0 | -22.3 | 19.4 | 14.2 | 14.5 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | -2.6 | -46.2 | -12.2 | -3.2 | 7.6 | 8.8 | 7.0 |
| ஏனைய கைத்தொழில்கள் | -1.3 | 2.2 | -4.3 | -3.0 | 5.9 | 11.6 | 4.8 |
| நிர்மாணம் | -9.4 | 4.4 | -20.9 | -20.8 | 19.4 | 13.7 | 9.6 |
| **சேவைகள்** | **-1.9** | **3.4** | **-2.6** | **-0.2** | **2.4** | **2.3** | **3.3** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 0.9 | 1.5 | 0.0 | 0.1 | 1.3 | 1.1 | 1.5 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | -6.1 | 0.9 | 3.0 | 4.3 | 2.9 | 3.3 | 3.2 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | -40.8 | 1.7 | 27.0 | 26.0 | 31.4 | 34.4 | 12.7 |
| தகவல், தொடர்பாடல் | 15.0 | 11.0 | 6.5 | -2.2 | 4.2 | 4.0 | 3.0 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 9.2 | 7.0 | -11.1 | -10.3 | -1.2 | -1.7 | 13.5 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | -1.0 | 4.4 | -12.1 | -6.0 | 4.2 | 4.4 | 3.2 |
| தொழிற்துறை சேவைகள் | -3.3 | 4.9 | -17.7 | 2.4 | 3.5 | 3.9 | 2.7 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | 2.5 | 3.7 | -2.0 | 0.7 | 1.0 | 0.8 | 1.4 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 1.7 | 0.9 | 1.2 | -1.7 | -2.9 | -3.7 | -2.5 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | -6.6 | 0.9 | 0.3 | 0.3 | 1.5 | 1.1 | 0.9 |
| **மொ.உ.உ.** | **-4.6** | **4.2** | **-7.3** | **-2.3** | **5.0** | **4.6** | **4.8** |

*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*
*(ஆ) திருத்தியமைக்கப்பட்டது*

நாணய கொள்கையைத் தளர்த்தல் மற்றும் பணப்புழக்க நிலைமைகளின் முன்னேற்றங்களுடன், பரந்த நாணய வழங்கல் ($M_2B$) 2025 ஜனவரி மாத இறுதியில் பதிவான ரூபா 14,439.1 பில்லியனிலிருந்து 2025 ஜூன் மாத இறுதியளவில் ரூபா 15,175.8 பில்லியன் வரை அதிகரித்துள்ளதோடு, தனியார் துறையின் கடன்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமையினாலும், மற்றும் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் விரிவடைந்தமையுமே இதற்கான பிரதான காரணமாகும். தனியார் துறைக்குக் கிடைக்கப் பெற்ற கடன் பாய்ச்சலானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் பதிவான ரூபா 8,149.8 பில்லியனிலிருந்து 2025 ஆம் ஆண்டின் ஜூன் மாத இறுதியில் ரூபா 8,854.6 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. வெளிநாட்டுத் துறை செயலாற்றுகையை பிரதிபலிப்பதன் மூலம் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2025 ஜனவரி மாத இறுதியில் பதிவான ரூபா 747.4 பில்லியனிலிருந்து 2025 ஜூன் மாத இறுதியில் 889.6 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

**வரைபு 3.8 : விளைவு வீதங்கள், நாணய திரட்டுக்கள், தனியார்த்துறை கடன் வளர்ச்சி**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*



*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**பணவீக்கம்**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (CCPI, 2021=100), ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் முதன்மை பணவீக்கம், 2025 ஜனவரி மாதத்தில் -4.0 சதவீதத்திலிருந்து 2025 ஒக்டோபர் மாதத்தில் 2.1 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. 2024 செப்தெம்பர் மாதத்தில் (-0.5 சதவீதம்) எதிர்மறை எல்லைக்குள் நுழைந்ததன் பின்னர் 2025 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் பணவீக்கம் அதில் பதிவான மிகக் குறைந்த பெறுமதியான -4.2 சதவீதத்தை அடைந்ததோடு, 2025 ஆகஸ்ட் மாதத்தில் 1.2 சதவீத பண வீக்க விகிதத்தை பதிவு செய்வதன் மூலம் மீண்டும் நேர்மறையான எல்லைக்குள் நுழைந்தது. குறிப்பாக, மின் கட்டணங்கள, எரிபொருள் மற்றும் எல் பீ எரிவாயு விலைகள் பல முறைகள் குறைக்கப்பட்டன. உள்நாட்டு நிரம்பல் சங்கிலிகளை விருத்தி செய்தல், மற்றும் உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளின் மீட்சி போன்ற நிரம்பல் துறையின் காரணிகள் இப்பணச்சுருக்கத்துக்கான பிரதான காரணங்களாக அமைந்தன. இருப்பினும், பிரதானமாக புள்ளி விபர அடிப்படையிலான தாக்கம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் மின்சாரக் கட்டணங்களில் ஏற்படுத்திய விலை உயர்வுகளும் பணச்சுருக்கம் போக்கு தளர்வதற்கு பங்களிப்புச் செலுத்தியதோடு, அதன் மூலம் இப்பணச்சுருக்கக் காலப்பகுதி நிரம்பல் துறையின் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெரிய வருகின்றது.

இதற்கிடையில், அடிக்கடி விலை ஏற்ற இறக்கங் களுக்கு உள்ளாகும் பொருட்களான உணவு, எரிசக்தி, மற்றும் போக்குவரத்து போன்ற நிலையற்ற பொருட்கள் கைவிடப்படுவதால் பொருளாதாரத்தில் அடிப்படை பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (CCPI 2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் மையப் பணவீக்கமானது, 2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்கள் முழுவதும் நேர் மறையான பெறுமதிகளையே பதிவு செய்தது. அது 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் பதிவான 1.2 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 2.2 சதவீத் வரை அதிகரித்தது. மையப் பணவீக்கமானது, இவ்வாறு ஒப்பீட்டளவில் நிலையாக இருந்ததன் மூலம் பணச்சுருக்கமானது கேள்வியை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதை எடுத்துக் காட்டும் அதே வேளை, மையப் பணவீக்கத்தின் போக்கானது எரிசக்தி விலைகளின் திருத்தங்களின் இரண்டாம் கட்ட தாக்கங்களையே பிரதிபலிக்கின்றது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ( (NCPI, 2021=100), ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் முதன்மை பணவீக்கம் 2024 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் (-0.2 சதவீதம்) எதிர்மறை எல்லைக்குள் நுழைந்ததன் பின்னர், 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் அதன் மிகக் குறைந்த பெறுமதியான -4.0 சதவீதத்தை பதிவு செய்தது. 2025 மே மாதத்தில் இது 0.6 சதவீதத்தைப் பதிவு செய்வதன் மூலம் அது மீண்டும் நேர் மறை எல்லைக்குள் நுழைந்ததோடு, 2025 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாததத்தில் 2.1 சதவீதம் வரை படிப்படியாக அதிகரித்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மை பண வீக்கத்தின் ஆரம்பத் திருப்பமானது, மாற்றமடைந்தமை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் திசைகள் மாறுவதற்கு முன் நிகழ்ந்தமை, நுகர்வுக் கூடை கலவையில் உள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் , நுகர்வுக் கூடை கலவையில் உணவல்லாத பொருட்கள் அதிக அளவில் உள்ள அதே வேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் பொருட்களின் கூடையில் ஒப்பீட்டளவில் உணவில் அதிக நிறையைக் கொண்டுள்ளது. அதே போல, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ((NCPI, 2021=100),

ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படுவது போல மையப் பணவீக்கமானது, 2025 ஜனவரி மாதத்தில் -0.2 சதவீத பெறுமதியொன்றினைப் பதிவு செய்வதன் மூலம் எதிர்மறை எல்லைக்குள் நுழைந்ததோடு, 2025 மே மாதத்தில் இது 0.3 சதவீதத்தைப் பதிவு செய்வதன் மூலம் நேர் மறை எல்லைக்குள் நுழைந்து அதன் பின்னர் 2025 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாததத்தில் 2.1 சதவீதமாக படிப்படியாக அதிகரித்தது.

பல மாதங்களாக இலங்கை அனுபவித்த பணச்சுருக்கமானது, முன்னர் ஏற்பட்ட பண வீக்க அதிர்ச்சிகளிலிருந்து மீட்சியை அடைந்து வந்த குடும்பங்களுக்கும் மற்றும் வர்த்தகங்களுக்கும் ஒரு சில தற்காலிக நிவாரணங்கள் கிடைக்கப் பெற்றதோடு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மை பணவீக்கம் மீண்டும் நேர்மறை எல்லைக்குள் வந்ததன் மூலம் செலவு செய்தல் மற்றும் முதலீட்டைத் தாமதப் படுத்தக் கூடிய பணச்சுருக்கம் தொடர்பான எதிர்பார்ப்புகள் மேலும் நிகழ்வதற்கான இடரைக் குறைக்கின்றது. 2025 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட இந்த திருப்பம், மாற்றமடைந்ததன் மூலம் பொருளாதாரம் தற்போது நிரம்பல் துறை அதிர்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது என்பதனை பிரதிபலிக்கின்றது. எரிசக்தி மற்றும் போக்குவரத்து விலைகளின் ஸ்திரப்படுத்தல் மற்றும் நடைமுறையிலுள்ள இணக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் காரணமாக கேள்வி நிலைமைகளில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டதன் மூலம் 2025 ஆம் அண்டின் எஞ்சிய காலத்திற்கு பணவீக்கம் நேர்மறையாக இருக்கும் என்றும், மற்றும் படிப்படியாக 5 சதவீத இலக்கை நெருங்கும் என்றும் இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

**வரைபு 3.9 : முதன்மைப் பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள்**




*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*2023 சன அடிப்படை ஆண்டு 2013 = 100, 2023 பெப் இல் இருந்து அடிப்படை ஆண்டு 2021 = 100)*

**அட்டவணை 3.5 : நுகர்வோர் விலைப் பணவீக்கம் (அடிப்படை : 2021 = 100)**

| மாதம் | 2024 (அடிப்படை ஆண்டு 2021=100) | | | | 2025 (அடிப்படை ஆண்டு 2021=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முதன்மை பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | முதன்மை பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | | மைய பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) | |
| | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு | கொ.நு.வி.சு | தே.நு.வி.சு |
| சனவரி | 6.4 | 6.5 | 2.2 | 2.2 | -4.0 | -4.0 | 1.2 | -0.2 |
| பெப்ரவரி | 5.9 | 5.1 | 2.8 | 2.7 | -4.2 | -3.9 | 0.7 | -0.6 |
| மார்ச் | 0.9 | 2.5 | 3.1 | 3.4 | -2.6 | -1.9 | 0.7 | -0.6 |
| ஏப்ரல் | 1.5 | 2.7 | 3.4 | 3.0 | -2.0 | -0.8 | 0.8 | -0.1 |
| மே | 0.9 | 1.6 | 3.5 | 3.1 | -0.7 | 0.6 | 1.2 | 0.3 |
| ஜுன் | 1.7 | 2.4 | 4.4 | 3.9 | -0.6 | 0.3 | 1.5 | 0.6 |
| ஜுலை | 2.4 | 2.5 | 4.4 | 3.0 | -0.3 | 0.7 | 1.6 | 0.9 |
| ஆகஸ்ட் | 0.5 | 1.1 | 3.6 | 2.3 | 1.2 | 1.5 | 2.0 | 1.5 |
| செப்டெம்பர் | -0.5 | -0.2 | 3.3 | 1.9 | | | | |
| ஒக்டோபர் | -0.8 | -0.7 | 3.0 | 1.7 | | | | |
| நவம்பர் | -2.1 | -1.7 | 2.7 | 1.5 | | | | |
| டிசெம்பர் | -1.7 | -2.0 | 2.7 | 1.3 | | | | |

*மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

### 3.4 பங்குச் சந்தை

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், இலங்கையின் பங்குச் சந்தையானது குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சியொன்றினை எடுத்துக் காட்டி யது. அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்கு விலைகளின் வேறுபாட்டை பிரதிபலிக்கும் மொத்தப் பங்கு விலைச் சுட்டெண் (ASPI, 1985=100), 2024 ஆகஸ்ட் மாத இறுதியில் பதிவான 10,869 அலகுகளுக்கு ஒப்பீட்டளவில் 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் 20,997 அலகுகள் வரை 93.2 சதவீதத்தினால் குறிப்படத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட 20 முன்னணி பொது வர்த்தகக் கம்பனிகளின் செயலாற்றுகையைப் பரதிபலிக்கும் ஸ்டாண்டார்ட் அன்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 சுட்டெண்ணும் (S&P SL20, 2004 = 1,000) 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவான 3,059 இலிருந்து 2025 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் 6,077 வரை 98.7 சதவீதமாக குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.

வர்த்தகச் சூழலை மேம்படுத்துதல், மற்றும் முதலீட்டாளர்களின் தன்னம்பிக்கையினை அதிகரித் தலை குறிக்கோளாகக் கொண்ட அரசாங்கத் தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் வலுவான நிறுவன ரீதியான செயலாற்றுகை, மற்றும் நேர் மறையான பொருளாதார நோக்கு, மற்றும் தளர்வான நாணய நிலைமைகள் போன்றனவற்றின் காரணமாக உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்பு அதிகரித்தமையானது, இவ்வதிகரித்த போக்கிற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் மொத்தப் பெறுமதியை பிரதிநிதித்துவப் படுத்தும் சந்தை மூலதனமயமாக்கலானது, 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் பதிவான 4,321 ரூபா பில்லியன்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 7,425 பில்லியன்களாக 71.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. சந்தை மூலதனமயமாக்கத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சியானது, பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பெறுமதியை அதிகரிப்பதனையும், மற்றும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் பங்குச் சந்தை மீதுள்ள ஈர்ப்பை அதிகரிப்பதனையும் பிரதிபலிக்கின்றது. மேலும், கொழும்புப் பங்குச் சந்தையின் நாளாந்தத் திரும்பல், 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் பதிவாகிய 1,524 ரூபா மில்லியனுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில், ரூபா 4,841 மில்லியன் வரை 217.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சியொன்றினை பதிவு செய்தது. இதன் மூலம் பங்குச் சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் விதி விலக்கான அதிகரிப்பொன்றையும், மற்றும் சந்தைப் பணப்புழக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான விரிவாக்கம், மற்றும் முதலீட்டாளர்களின் தன்னம் பிக்கை மற்றும் பங்கேற்பின் அதிகரிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

### 3.5 வெளிவாரித் துறையின் அபிவிருத்திகள்

இலங்கையின் வெளிவாரித் துறையானது, 2025 ஆம் அண்டின் முதல் எட்டு மாதங்களிலும் ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தின் அதிகரிப்பு, புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பண வரவுகளின் அதிகரித்த உட்பாய்ச்சல்கள், மற்றும் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக நேர்மறையான செயலாற்றுகையை எடுத்துக் காட்டியது. ஏற்றுமதி வருமானமானது 9,076.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 6.7 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் இறக்குமதிகள் மீதான செலவீனமானது, 13,340.9 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 10.5 சதவீதத்தினால் அதிகரித்ததன் பெறுபேறாக வர்த்த நிலுவையானது 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 3,566.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 4,264.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை விரிவடைந்தது. சுற்றுப் பிரயாணிகளின் வருகை அதிகரித்தமையின் காரணமாக சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாயானது 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2,167.0 ஐக்கிய அமெலரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2,290.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 5.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கிடையில், புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பண வரவுகள், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 4,288.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 5,116.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 19.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

மொத்த சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இருந்த 522.5 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1761.1 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் மிகையைப் பதிவு செய்தது. கொழும்பு பங்குச் சந்தையில் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 43.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாகக் காணப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 69.1 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 251.4 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக இருந்த அரச பிணைகள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள், 2025 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 140.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. சீன மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி பரிமாற்ற வசதியளிப்பு உள்ளிட்ட (SWAP) 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (GOR) 6.2 ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியனாக

இருந்தது. இதற்கிடையில், 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் இலங்கையின் ரூபாவின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 3.3 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டது.

**அட்டவணை 3.6 : மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | ஆகஸ்ட் இறுதியில் 2024 | ஆகஸ்ட் இறுதியில் 2025(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,129 | 6,774 | 12,226 | 8,490 | 10,654 | 15,945 | 10,869 | 20,997 |
| S&P SL 20 குறிகாட்டி | 2,937 | 2,638 | 4,233 | 2,636 | 3,068 | 4,862 | 3,059 | 6,077 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 2,851 | 2,961 | 5,489 | 3,847 | 4,249 | 5,696 | 4,321 | 7,425 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 289 | 283 | 296 | 290 | 290 | 284 | 286 | 286 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 171 | 397 | 1173 | 687 | 411 | 538 | 242 | 755 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 68,272 | 104,165 | 86,689 | 36,863 | 37,088 | 52,441 | 41,736 | |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 56,537 | 52,889 | 39,410 | 67,488 | 41,451 | 42,524 | 35,926 | 36,527 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | -11,735 | -51,276 | -47,279 | 30,625 | 4,363 | -9,918 | -5,809 | -22,289 |

*மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*

*(அ) தற்காலிகமானது*

### ஏற்றுமதிகள்

பொருளாதார மறுமலர்ச்சியுடன் கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றமதிகளிலிருந்தான வருவாய் அதிகரித்ததன் காரணமாக ஏற்றுமதி வருமானம் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 8,506.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 9,076.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 6.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாய் மொத்த ஏற்றுமதி வருவாயில், முறையே 77.3 சதவீத பங்களிப்பைச் செலுத்திய அதே வேளை, விவசாய மற்றும் கனிமப் பொருட்களின் எற்றுமதிகள் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் முறையே 22.4 சதவீதமாகவும் மற்றும் 0.2 சதவீதமாகவும் இருந்தது.

பிரதானமாக நெசவு, ஆடைகள் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் அதிகரித்ததன் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 6,665.8 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து

**வரைபு 3.10 : வர்த்தக மீதி மற்றும் நாணய மாற்று வீத அசைவு**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*



2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 7,015.4 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 5.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.. நெசவு மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 3,364.8 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 3,595.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக 6.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 577.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 35.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதே வேளை, பெற்றோலியம் உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 654.7 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 7.8 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதோடு, இறப்பர் உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 618.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக 6.7 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**வரைபு 3.11 : ஏற்றுமதிகளின் வகுதி**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

தேயிலை, தென்னை, வாசனைத்திரவியங்கள், நுண் விவசாய உற்பத்திப் பொருட்கள், காய்கறிகள், இறப்பர், மற்றும் தயாரிக்கப்படாத புகையிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய் அதிகரித்ததன் காரணமாக விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,804.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2,030.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 12.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 942.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1,026.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக 8.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தெங்கு உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 367.5 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 35.0 சதவீதத்தினாலும், வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 282.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 4.8 சதவீதத்தினாலும் மற்றும் நுண் விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 132.8 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 26.5 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ள அதே வேளை, கடலுணவுப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 161.9 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 1.6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கனிமப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 18.8 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக இருந்ததோடு, அது 2025 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 14.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக 23.8 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

### இறக்குமதிகள்

பொருளாதாரச் செயற்பாடுகளின் மறுமலர்ச்சி, பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளின் நீக்கம், மற்றும் உலகளாவிய சந்தைகளில் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையின் தாக்கத்துடன் நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 12,072.5 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாகக் காணப்பட்ட இறக்குமதிகளின் செலவினமானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 13,340.9 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 10.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் . முதலீட்டுப் பொருட்கள் மீதான மொத்த இறக்குமதிச் செலவுகள் முறையே 24.7 சதவீதம், 55.7 சதவீதம் மற்றும் 19.5 சதவீதத்தைப் பதிவு செய்தது.

நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவானது 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவாகிய 2,176.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 3,294.7 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 51.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, உணவு, பானங்கள் மற்றும் உணவல்லாத பொருட்களின் இறக்குமதிச் செலவானது அதிகரித்தமையே இதற்கான காரணமாகும். பாற்பண்ணை உற்பத்திப் பொருட்கள், எண்ணெய் மற்றும் கொழுப்பு வகைகளின் உற்பத்திப் பொருட்களில் பதிவான இறக்குமதிச்

செலவுகள் அதிகரித்தமையினால் உணவு மற்றும் பானங்களின் இறக்குமதிச் செலவானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,214.1 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1,419.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாக 16.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பிரதானமாக தனிப்பட்ட வாகனங்கள், மருந்துகள் மற்றும் மருத்துப் பொருட்கள், ஆடைகள், மற்றும் துணைக் கருவிகள், தொடர்பாடல் சாதனங்கள், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பு ஏற்பட்டமையின் காரணமாக 962.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 1,875.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 94.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவுகள் அதிகரித்துள்ளன.

பிரதானமாக எரிபொருள், நெசவு மற்றும் நெசவுப் பொருட்கள் மீதான செலவுகள் குறைவடைந்ததன் காரணமாக இடை நிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவானது, 2024 ஆம் ஆண்டு முதல் எட்டு மாதக் காலப்பகுதியில் 7,750.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 அதே காலப்பகுதியில் 7,437.4 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 4.0 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மீதான இறக்குமதி செலவானது, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,846.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் வரை 14.4 சத வீதத்தினாலும், மற்றும் 539.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியனாக 5.4 சதவீதத்தினாலும், மற்றும் நிலக்கரி மீதான இறக்குமதிச் செலவு 135.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் வரை 20.7 சதவீதத்தினாலும் குறைவடைந்ததனால் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவானது, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2,520.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 13.0 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. நெசவு மற்றும் நெசவுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,839.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1,793.5 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 2.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2,140.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2,597.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 21.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பொருளாதார மறுமலர்ச்சியோடு. முதலீட்டுச் செயற்பாடுகளின் வளர்ச்சியடைந்ததன் காரணமாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதிச் செலவானது, 1,658.4 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 15.3 சதவீதத்தினாலும், கட்டடப் பொருட்கள் மீதான செலவினம் 649.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 7.9 சதவீதத்தினாலும் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் மீதான செலவினம் 286.7 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 192.4 சதவீதத்தினாலும் அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

### சுற்றுலாத் துறையும், மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பண வரவுகளும்

சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாயானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2,167.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களுக்கு ஒப்பீட்டு ரீதியல் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2,290.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுக்கான விசா தள்ளுபடிகள், இலக்காகக் கொள்ளப்பட்ட சர்வதேச சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விமானப் பயணங்களின் இணைப்புக்களின் வளர்ச்சியுறச் செய்தல் போன்ற அரசாங்கத்தின் பிரதான முன்னெடுப்புகளின் காரணமாக சுற்றுலாத் துறையானது வலுவான முறையிலும் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட முறையிலும் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சி இவ்வளர்ச்சிக்கு வித்திட்டது. அதன் படி, சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையானது, 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 1,362,668 நபர்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1,566,523 நபர்கள் வரை 15.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்தியா, ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, ஜேர்மனி, சீனா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பதிவாகின. இதற்கிடையில், முறையான சேவை வழிகள் மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் காரணமாக முறையான வழிகளின் ஊடாக புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பண வரவுகளைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 4,288.2 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 5,116.0 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்கள் வரை 19.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**வரைபு 3.12 : இறக்குமதிகளின் வகுதி**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

அட்டவணை 3.7 : வெளிநாட்டு வர்த்தகம்

ஐ.அ.டொ.மில்.

| வகை | 2022 | 2023 | 2024(ஆ) | சன - ஆக 2024(ஆ) | சன - ஆக 2025(அ) |
|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | **13,106** | **11,911** | **12,772** | **8,506** | **9,077** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **2,568** | **2,567** | **2,775** | **1,539** | **2,030** |
| தேயிலை | 1,259 | 1,310 | 1,436 | 818 | 1,026 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,309 | 1,257 | 1,339 | 722 | 1,004 |
| **கைத்தெழில் ஏற்றுமதிகள்** | **10,465** | **9,278** | **9,947** | **5,805** | **7,015** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 5,952 | 4,879 | 5,061 | 2,920 | 3,595 |
| உணவு, குடிபானம், புகையிலை | 520 | 539 | 652 | 376 | 577 |
| இறப்பர் உற்பத்திகள் | 977 | 902 | 976 | 588 | 619 |
| இயந்திர மற்றும் உபகரணங்கள் | 581 | 598 | 486 | 293 | 313 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 568 | 539 | 1,064 | 616 | 655 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,868 | 1,820 | 1,710 | 1,012 | 1,256 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **50** | **39** | **25** | **16** | **14** |
| **வகுக்கப்படாதவை** | **23** | **28** | **26** | **16** | **17** |
| **இறக்குமதிகள்** | **18,291** | **16,811** | **18,841** | **12,073** | **13,341** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **2,813** | **3,044** | **3,466** | **2,176** | **3,295** |
| உணவும் குடிபானமும் | 1,608 | 1,693 | 1,914 | 1,214 | 1,420 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,205 | 1,351 | 1,551 | 962 | 1,875 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **12,439** | **11,007** | **11,915** | **7,750** | **7,437** |
| பெற்றோலியம் | 4,897 | 4,703 | 4,354 | 2,897 | 2,521 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 3,065 | 2,371 | 2,847 | 1,839 | 1,794 |
| கோதுமை மற்றும் சோளம் | 303 | 338 | 383 | 205 | 205 |
| ஏனையவை | 4,174 | 3,595 | 4,331 | 2,810 | 2,918 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **3,030** | **2,745** | **3,448** | **2,140** | **2,597** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 1,969 | 1,868 | 2,363 | 1,439 | 1,658 |
| கட்டிடப் பொருட்கள் | 926 | 775 | 927 | 602 | 650 |
| போக்குவரத்து உபகரணம் | 132 | 99 | 57 | 98 | 287 |
| ஏனையவை | 3 | 3 | 3 | 2 | 3 |
| **வகுக்கப்படாதவை** | **9** | **28** | **13** | **6** | **12** |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **-5,185** | **-4,900** | **-6,069** | **-3,566** | **-4,264** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

*(அ தற்காலிகமானது.*

*(ஆ) திருத்தியமைக்கபட்டது*

## 3.6 உலகப் பொருளாதாரத்தின் எதிர்கால நோக்கு

கொவிட் 19 தொற்று நோய், உக்ரைன் - ரஷ்யா மோதல், கொள்கைகளின் நிச்சயமற்ற தன்மை மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடி, ஆகியவற்றால் ஏற்பட்ட இடையூறுகளுக்குப் பின்னர் உலகப் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத் தன்மையை அடைந்து வந்தாலும் கூட, சவால்கள் தொடர்ந்து காணப்பட்டமையினால் எதிர்காலம் ஒரு சவாலான போக்கினையே கொண்டிருக்கும். அதிகரித்த வர்த்தக பதட்டம். காலநிலை மாற்றம். அதிகரித்த கொள்கை நிச்சயமற்ற தன்மை, என்பன பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரங்களில் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. இருப்பினும், தனியார் துறை உடனே செயற்பட்டமை, மற்றும் உலகளாவிய திறந்த வர்த்தகத்தின் காரணமாக பாதகமான தாக்கங்கள் குறைவடைந்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்தினால் பிரசுரிக்கப்பட்ட ஒக்டோபர் மாதத்திற்கான உலகளாவிய பொருளாதார எதிர்கால நோக்கின் படி, உலகளாவிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் முறையே 3.2, 3.1 சதவீதம் வரை உறுதிப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய பணவீக்க மானது, நாடுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபாடொன்றைக் காட்டுவதன் மூலம் 2025 ஆம் ஆண்டில் 4.2 சதவீதமாகவும், 2026 ஆம் ஆண்டில் 3.7 சதவீதம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.

வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மை அதிகரித்தமைக்கு மத்தியில் சந்தை ஏற்ற இறக்கம், மற்றும் . குறைந்த இடர் தொடர்பான விருப்பங்கள் குறைவடைந்தமையினால், ˙உலகளாவிய நிதி நிலைமைகள் கடந்த ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் சராசரியாக இறுக்கமடைந்துள்ளன. மேலும், செயற்கை நுண்ணறிவு பங்குகளின் விலைகள் அதிகரித்தமையினால் பெரும்பாலான நாடுகளிலன் சந்தைகள் இலாபத்தைப் பெற்றுக் கொண்டன.

### உலகளாவிய வர்த்தகம் மற்றும் பொருட்களின் சந்தைகள்

அமெரிக்கா பல்வேறு நாடுகளின் மீது வரிகளை விதித்ததால், முன்னேறிய, வளர்ந்து வரும், மற்றும் குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரங்களில் வர்த்தக அதிர்ச்சிகள் காணப்பட்டன, இந்த வரிகள், ரஸ்யா - உக்ரைன் போருடன் சேர்ந்து, உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை சீர்குலைத்து, வர்த்தகப் பாய்வுகளில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தின.

பொருட்களின் விலைகள் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மெதுவான வளர்ச்சி, வர்த்தகத் தடைகள், மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் காரணமாக, குறைந்துள்ளன. எரிபொருள் விலைகள் 2026 ஆம் ஆண்டில் முறையே சுமார் 7.9 சதவிகிதம் மற்றும் 3.7 சதவிகிதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்கம் உட்பட உலோகங்களின் விலைகள் மார்ச் மற்றும் ஆகஸ்ட் 2025 இற்கு இடையில் 12.8 சதவிகிதம் அதிகரித்துள்ளன.

### பிராந்திய அபிவிருத்திகள்

முன்னேறிய பொருளாதாரங்களுக்கான 2025 ஆம் ஆண்டின் வளர்ச்சி எதிர்பார்க்கை, உயர்ந்து வரும் வர்த்தகத் தடைகள், கொள்கை நிச்சயமற்ற தன்மை, நிதிச் சந்தை நிச்சயமற்ற தன்மை மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை குறைவது ஆகியவற்றின் காரணமாக 1.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் துரிதமான இறக்குமதித் தேவை, நுகர்வு குறைவது மற்றும் பலவீனமடையும் தொழிலாளர் சந்தை காரணமாக 2025 இல் 2.0 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. யூரோ பிராந்தியத்தின் வளர்ச்சி சுங்க வரிகள், கொள்கை நிச்சயமற்ற தன்மை, வர்த்தகம் மற்றும் முதலீட்டில் பலவீனமான வெளிப்புறத் தேவை ஆகியவற்றின் காரணமாக, 2025 இல் 1.2 சதவீதமாகவும், 2026 இல் 1.1 சதவீதமாகவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2025 இல் 4.2 சதவீதம் மற்றும் 2026 இல் 4.0 சதவீதம் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த மந்தநிலை பரந்த அடிப்படையிலானதுடன் கிட்டத்தட்ட 60 சதவீத வளரும் பொருளாதாரங்களினைப் பாதிக்கிறது, மேலும் இது வர்த்தகம் மற்றும் நிதி பலவீனங்கள், அதிக கடன் அளவு, மற்றும் உள் மற்றும் வெளிப்புற அதிர்ச்சிகளைத் தாங்கும் திறன் குறைவாக இருப்பது ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. இருப்பினும், உயர்ந்து வரும் நிச்சயமற்ற தன்மை மற்றும் சுங்க வரிகளின் எதிர்மறையான விளைவுகள் இருந்தபோதிலும், 2025 இல் நிதிக் கொள்கை விரிவாக்கத்தால் ஊக்குவிக்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்தில் ஆரம்பகால ஆதாயங்கள் மற்றும் வலுவான உள்நாட்டு நுகர்வு ஆகியவற்றால் உந்தப்பட்டு, இந்த வளர்ச்சி எதிர்பார்த்ததை விட வலிமையாக உள்ளது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது, 2025 ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாக மதிப்பிடப்படுவதோடு, 2026-2027 ஆம் ஆண்டில் 5.0 சதவீதமாக உயரும் எனவும் எதிர்பார்க்கப்பட்டாலும், நீண்ட காலமாக நிலவி வரும் நடைமுறையிலுள்ள போர், உயர்வான படுகடன் மட்டங்கள் மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மை என்பனவற்றின் காரணமாக இவ்வளர்ச்சியானது, அதிக அளவிலான நிச்சயமற்ற தன்மையைக் கொண்டதாக உள்ளது.

### உலகளாவிய பொருளாதார இடர்கள்

பொருளாதார எதிர் கால நோக்கில் மேலும் பொருதாரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட வீழ்ச்சியடைந்து செல்வதற்கான எச்சரிக்கை பலம் வாய்ந்ததாக உள்ளதோடு, உயர்வான வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மை, உலகளாவிய வர்த்தகம், முதலீடுகள் மற்றும் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தகப் பதட்டங்கள், நிதிச் சந்தையில் பணப்புழக்கம் குறைவடைதல், மற்றும் இடருக்கு உள்ளாகக் கூடிய சந்தைகள், மற்றும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் ஏற்றுமதி மையமாகக் கொண்ட துறைகளின் கேள்வி, முதலீடுகள், மற்றும் வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்ததன் காரணமாக மூலதன வெளியேற்றம் ஏற்படலாம். அதே போல, வர்த்தக பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வை வரிக் குறைப்பு, தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளின் அதிகரிப்பு மற்றும் மேலதிக அரசிறை ஆதரவைப் பெற்றுக் கொண்டால் உலகளாவிய வளர்ச்சியானது வலுவடையக் கூடிய நிலையிலிருந்தாலும் கூட, இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் அரசிறை அழுத்தம் மற்றும் அரச படுகடன் இடர் போன்றன வளர்ச்சியடையக் கூடும்.

### உலகளாவிய எதிர்கால நோக்கும் இலங்கையின் பொருளாதாரத்திற்குள்ள தாக்கங்களும்

தற்போது உலகளாவிய பாதிப்புக்கள் இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 5.0 சதவீத வளர்ச்சியொன்றை அடையக் கூடியதாக இருந்தது. இதற்கு முன்னர் 44 சதவீதம், மற்றும் 30 சதவீதமாக இருந்த ஐக்கிய அமெரிக்காவின் தீர்வைக் கட்டணங்கள் 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டாலும் கூட, மேலும், தீர்வை வரி வீதமானது, உயர்வான ஒரு பெறுமதியில்

இருந்தமையினால் ஐக்கிய அமெரிக்கா பிரதானமாக ஆடைக் கைத்தொழில் போன்ற துறைகளுக்கு தாக்கமொன்றை ஏற்படுத்தலாம். இது ஏற்றுமதி வருவாயைக் குறைப்பதோடு, வேலை வாய்ப்புக்களின் இழப்பிற்கும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியும் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுக்கலாம்.

இலங்கையின் அரச இறைமைக் கடன்களின் தரப்படுத்தலில் கடனைச் செலுத்த முடியாத நிலையிலிருந்து (RD) CCC+ வரை அதிகரித்தமையினால் இலங்கைக்கு உலகளாவிய சந்தைகளுக்கு நுழையக் கூடியதாக இருந்ததோடு, இது வெளி நாட்டுக் கடன்களைச் செலுத்துவதனை எளிதாக்கல், முதலீட்டாளர்களின் தன்னம்பிக்கையை அதிகரித்தல், மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மீண்டும் உருவாவதற்கு காரணங்களாக அமைந்தன. இலங்கை 2025 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் வரை இலங்கை பண வீழ்ச்சியொன்றை அனுபவித்த போதிலும், வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மை, நிதிச் சந்தை ஏற்ற இறக்கம், மற்றும் புவி சார் அரசியல் மோதல்கள் போன்ற சவால்களை எதிர்நேக்கிக் கொண்டிருப்பதனால் எதிர்காலத்தில் உயர்வான பண வீக்கமொன்று ஏற்படலாம்.

**அட்டவணை 3.8 : உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2025 (கணிப்பு)**

| நாடு | மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்) | பணவீக்கம் (சதவீதம்) | வேலையின்மை (சதவீதம்) | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதம்) | தேறிய கடன் (மொ.உ.உ. சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | 4.5 | 41.3 | 7.5 | 0.4 | 78.8 |
| அவுஸ்திரேலியா | 1.8 | 2.6 | 4.2 | -2.7 | 51.0 |
| பிரேசில் | 2.4 | 5.2 | 7.1 | -8.4 | 91.4 |
| கனடா | 1.2 | 2.0 | 6.9 | -2.2 | 113.9 |
| சிலி | 2.5 | 4.3 | 8.6 | -2.1 | 42.7 |
| சீனா | 4.8 | 0.0 | 5.1 | -8.6 | 96.3 |
| பிரான்ஸ் | 0.7 | 1.1 | 7.6 | -5.4 | 116.5 |
| ஜேர்மனி | 0.2 | 2.1 | 3.7 | -2.5 | 64.4 |
| கிரீஸ் | 2.0 | 3.1 | 9.0 | 0.0 | 146.7 |
| இந்தியா | 6.6 | 2.8 | 4.9 | -7.1 | 81.4 |
| இந்தோனேசியா | 4.9 | 1.8 | 5.0 | -2.8 | 40.8 |
| இத்தாலி | 0.5 | 1.7 | 6.7 | -3.3 | 136.8 |
| ஜப்பான் | 1.1 | 3.3 | 2.6 | -1.3 | 229.6 |
| கொரியா | 0.9 | 2.0 | 3.0 | -1.5 | 53.4 |
| மலேசியா | 4.5 | 1.6 | 3.0 | -3.6 | 70.4 |
| மெக்சிகோ | 1.0 | 3.9 | 2.9 | -4.3 | 58.9 |
| ரஷ்யா | 0.6 | 9.0 | 2.4 | -2.7 | 23.1 |
| சிங்கப்பூர் | 2.2 | 0.9 | 2.1 | 3.1 | 175.6 |
| தென்னாபிரிக்கா | 1.1 | 3.4 | 32.7 | -6.0 | 77.3 |
| ஸ்பெயின் | 2.9 | 2.4 | 10.8 | -2.7 | 100.4 |
| தாய்லாந்து | 2.0 | 0.2 | 1.0 | -2.6 | 64.9 |
| ஐக்கிய இராச்சியம் | 1.3 | 3.4 | 4.7 | -4.3 | 103.4 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.0 | 2.7 | 4.2 | -7.4 | 125.0 |
| வியட்நாம் | 6.5 | 3.4 | 2.3 | -3.3 | 32.0 |

*மூலங்கள் : உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2025 ஒக்தோபர் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2024 ஒக்தோபர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி*

# அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

# 04

### 4.1 மேன்நோக்கு

பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகள் இலாப மீட்டும் தன்மையின் அடிப்படையில் மேம்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டின் முதல் ஒட்டு மாத காலப்பகுதியில் பதிவான ரூபா 307.1 பில்லியன் மொத்த இலாபத்தை பதிவாகியுள்ளதுடன், இதில் எட்டு அரசுடமைத் தொழில்முயற்சிகள், இத்துறையில் ரூபா 294.3 பில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளன. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வங்கித் துறை செயலாற்றுகை கணிசமாக மேம்பட்டுள்ளதுடன், இதற்குக் காரணம், மூன்று பெரிய அரசுக்குச் சொந்தமான வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் இலாபம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது, ரூபா 69.8 பில்லியனிலிருந்து ரூபா 147.1 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

முன்மொழியப்பட்ட பொது வர்த்தக வாணிப முகாமைத்துவச் சட்டம், வர்த்தகம் சாரா அரசுடமைத் தொழில்முயற்சிகளை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவை நியமித்த குழுவின் பரிந்துரைகளின்படி, பல வர்த்தகம் சாரா தொழில்முயற்சிகளை மூடுதல், மறுசீரமைத்தல் அல்லது இணைத்தல், மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் இல்லாத 33 தொழில்முயற்சிகளை கலைக்க அமைச்சரவை அங்கீகாரமளித்தல் உள்ளிட்ட பல சீர்திருத்தங்களை அரசுடமைத் தொழில்முயற்சி துறை தற்போது மேற்கொண்டு வருகிறது. அவற்றில், முன்மொழியப்பட்ட பொது வர்த்தக வாணிப முகாமைத்துவச் சட்டம் அனைத்து பொது வர்த்தக நிறுவனங்களையும் தொழில் ரீதியாகவும், சுயாதீனமாகவும், உற்பத்தி ரீதியாகவும், வணிகக் கொள்கைகளின்படியும் நிர்வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் நிர்வாகம், பொறுப்புக்கூறல் மற்றும் ஆய்வு ஆகியவற்றின் மிக உயர்ந்த தரநிலைகளுக்கு உட்பட்டது. மேலும், 2025 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின்படி, நகர மற்றும் புறநகர் பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளுக்காக மெட்ரோ பேருந்து சேவையை இயக்கும் நோக்கத்துடன், “லங்கா மெட்ரோ டிரான்சிட் (பிரைவேட்) லிமிடெட்” என்ற நிறுவனம் இலங்கை போக்குவரத்து சபையின் முழு உரிமையாளராக இணைக்கப்பட்டது.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான வங்கிகள் சீர்திருத்தக் கொள்கையின்படி நியமிக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்ட குழு, அனைத்து அரசுக்குச் சொந்தமான வங்கிகளும் சுயாதீன பணிப்பாளர்களை நியமிக்க தங்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்ததுடன், இது இலங்கை மத்திய வங்கியின் பொருத்தம் மற்றும் உரிமை அனுமதிக்கு உட்பட்டது. இதற்கிடையில், 2025 ஆகஸ்ட்டில் 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், இலங்கை மின்சார சபையின் சீர்திருத்த செயன்முறையை எளிதாக்குவதற்காக அரசாங்கத்திற்கு முழுமையாகச் சொந்தமான நான்கு நிறுவனங்கள் இணைக்கப்பட்டன. இந்த சீர்திருத்தங்கள் மின்சாரத் துறையில் செயற்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுடமைத் தொழில்முயற்சிகளிடமிருந்து வரிகள் மற்றும் பங்கிலாபங்கள் அறவீடு ரூபா 14.6 பில்லியனாகக் குறைந்துள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 26.7 பில்லியனாக இருந்தது.

### 4.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு

#### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,985 பில்லியனிலிருந்து 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 5,433 பில்லியனாக, 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில், வங்கியின் வைப்புத்தளமானது, 2024 ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட இது ரூபா 4,208 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 4,535 பில்லியனாக காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,178 பில்லியனாக இருந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 6.1 சதவீதம் அதிகரித்து ரூபா 2,311 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 7.20 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் கடன் விகித கட்டம் III ஆனது, 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் 7.58 சதவீதமாக சிறுதளவு குறைவடைந்துள்ளது. இலங்கை வங்கி 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 78.7 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 31.3 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். நிகர வட்டி வருமானம் மற்றும் வட்டி அல்லாத வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றங்களே இதற்கான பிரதான காரணமாகும்.

#### மக்கள் வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2024 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,298 பில்லியனிலிருந்து 2025 ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 3,598 பில்லியனாக 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2025 ஆகஸ்ட் மாத முடிவில் வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 3,173 பில்லியனை பதிவுசெய்துள்ளதுடன், 2024 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,855 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 11.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,522 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 1,610 பில்லியனாக சிறிதளவு அதிகரிப்பினை

பதிவு செய்துள்ளது. 2025 ஆகஸ்ட் இறுதிக்கான வங்கியின் கடன் விகித கட்டம் III ஆனது, இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்பதுடன், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் 9.3 சதவீதமாகக் காணப்பட்டது. மக்கள் வங்கி 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 37.8 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், 2024 இன் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 24.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 56.2 சதவீத குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகவும் காணப்படுகிறது.

### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்து அடித்தளமானது, 2025 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 1,821 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், இது 2024 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,752 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறியதொரு அதிகரிப்பினைக் காட்டுகிறது. 2025 ஆகஸ்ட் இறுதியில் வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 1,586 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2024 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,556 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.9 சதவீத அதிகரிப்பாகவும் அமைந்துள்ளது. 2024 ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 532 பில்லியன் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2025 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 519 பில்லியனாக 2.4 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 5.18 சதவீதமாக இருந்த வங்கியின் கடன் விகித கட்டம் III ஆனது, 2025 ஆகஸ்ட் இறுதியில் 2.82 சதவீதமாக மேம்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 30.5 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 21.7 பில்லியனாக காணப்பட்டதுடன் நிகர வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இம்மாற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, 2025 முதல் எட்டு மாதங்களுக்கு மொத்த வருமானம் ரூபா 5 பில்லியனாக இருந்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 3 பில்லியனாக இருந்தது. இது முதன்மையாக ரூபா 2.7 பில்லியனின் அதிக பங்கிலாப வருமானத்தால் உந்தப்பட்டதுடன், இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 0.4 பில்லியனாக இருந்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2025 இன் முதல் எட்டு மாதங்களுக்கு வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 4.4 பில்லியனாக இருந்ததுடன், இது 2024 ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவான ரூபா 1.8 பில்லியனிலிருந்து கணிசமான அதிகரிப்பைக் குறிக்கிறது. மொத்த சொத்துக்கள் 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 125.1 பில்லியனாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 115.2 பில்லியனிலிருந்து உயர்ந்துள்ளதுடன் வலுப்படுத்தப்பட்ட நிதி நிலைமையினை பிரதிபலிக்கிறது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி வணிகம் தொடர்பான இரண்டு துணை நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மேம்பட்ட செயற்திறனைப் பதிவு செய்துள்ளன. ஸ்ரீலங்கா இன்ஸுரன்ஸ் கோபரேஷன் லைப் லிமிடெட், 2025 முதல் எட்டு மாதங்களில் ரூபா 21.3 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 18.3 பில்லியனாக இருந்ததுடன் அதன் ஆயுள் காப்புறுதி வணிகத்தில் நிலையான வளர்ச்சியைக் காட்டுகிறது. இதற்கிடையில், ஸ்ரீலங்கா இன்ஸுரன்ஸ் கோபரேʼன் ஜெனரல் லிமிடெட் ரூபா 2.8 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாகப் பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 2.3 பில்லியனாக இருந்ததுடன் அதன் பொதுக் காப்புறுதி நடவடிக்கைகளில் தொடர்ச்சியான மீள்தன்மையை பிரதிபலிக்கிறது.

### இலங்கை மின்சார சபை

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மின்சார விற்பனையின் வருமானம் 32 சதவீதம் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து ரூபா 271.5 பில்லியனாக இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 402.1 பில்லியனாக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மின்சாரத்திற்கான தேவை 5 சதவீதம் அதிகரித்து 10,647 GWh ஆக இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 10,119 GWh ஆக இருந்தது. இது முக்கியமாக சராசரி இறுதி பயனர் கட்டணங்களைக் குறைப்பதன் காரணமாகும். அங்கு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அலகு ஒன்றுக்கு விற்பனை வருமானம் kWh ஒன்றுக்கு ரூபா 25.50 ஆகக் குறைவடைந்ததுடன், 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் kWh ஒன்றுக்கு ரூபா 39.74 ஆக இருந்தது.

இருப்பினும், இ.மி. சபையின் நேரடி உற்பத்தி செலவு 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 7 சதவீதம் குறைவடைந்து ரூபா 194.2 பில்லியனாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 208 பில்லியனாக இருந்ததுடன், முக்கியமாக சாதகமான வானிலை காரணமாக வெப்ப உற்பத்தியை நம்பியிருப்பதைக் குறைத்தது. 2025 ஆம் ஆண்டில் சராசரி இறுதி பயனர் கட்டணங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக உற்பத்தி செலவில் சரிவு இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 116.5 பில்லியனாக இருந்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இ.மி. சபை ரூபா 2.7 பில்லியனின் மொத்த இழப்பை பதிவு செய்தது. எனவே, இ.மி. சபையானது 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 4.9 பில்லியனின் நிகர இழப்பை பதிவு செய்ததுடன், 2024 ஆம்

ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 133.7 பில்லியனின் நிகர இலாபத்தை உள்ளடக்கியது. இதில் அதன் துணை நிறுவனமான லங்கா டிரான்ஸ்.ஃபார்மர்ஸ் லிமிடெட்டின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 26 பில்லியன் இலாபமும் அடங்கும்.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், உற்பத்தி கலவை 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 31:35:20:14 உடன் ஒப்பிடும்போது 35:30:24:11 இல் நீர்: அனல் (நிலக்கரி): புதுப்பிக்கத் தக்க சக்தி, காற்று மற்றும் கூரை: மற்றும் அனல் (எரிபொருள்) என சற்று மாறியது. நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியின் விரிவாக்கம், குறிப்பாக கூரை சூரிய சக்தி, உற்பத்தி செலவைக் குறைக்க உதவியது. அதன்படி, விற்பனை புள்ளியில் அலகொன்றின் விலை 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் kWh ஒன்றுக்கு ரூபா 27.08 ஆகக் குறைவடைந்ததுடன், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஒரு kWh க்கு ரூபா 30.76 ஆக இருந்தது.

2025 ஆகஸ்ட் இறுதியில், இ.மி. சபையின் வர்த்தக செலுத்த வேண்டிய தொகை ரூபா 36.7 பில்லியனாக பதிவாகியுள்ளது. இதில் 48 சதவீதம் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்கு செலுத்தப்பட உள்ளதுடன், ரூபா 17.7 பில்லியனாகும். இது 2024 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 14.1 பில்லியனாக இருந்தது.

2025 ஆம் ஆண்டிற்கான மூன்று கட்டண திருத்த முன்மொழிவுகளை இ.மி. சபை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்ததன் விளைவாக சனவரியில் இறுதிப் பயனர் சராசரி கட்டணக் குறைப்பு 20 சதவீதமாகவும், அதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் 15 சதவீதமாகவும், ஆகவும் அதிகரித்தது.

இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டதன்படி, 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் 2025 ஆகஸ்ட் 18 அன்று சான்றளிக்கப்பட்டது. இதன் விளைவாக, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் தேசிய முறைமை இயக்குநர் ஆகியவற்றுக்காக நான்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

**அட்டவணை 4.1 : மின் உற்பத்தி மற்றும் கொள்ளளவு என்பவற்றின் கூட்டமைவு**

| | உற்பத்தி : 2024 சனவரி - ஆகஸ்ட் | | | உற்பத்தி: 2025 சன - ஆகஸ்ட் (தற்காலிகமான) | | |
|---|---|---|---|---|---|---|
| | பொருத்தப்பட்டுள்ள கொள்ளளவு மெகாவோற | மொத்த உற்பத்தியில் சதவீதமாக | நிகர உற்பத்தி- ஜிகா வொற் மணித்தியாலம் | பொருத்தப்பட்டுள்ள கொள்ளளவு மெகாவோற் | மொத்த உற்பத்தியில் சதவீதமாக | நிகர உற்பத்தி- ஜிகா வொற் மணித்தியாலம் |
| நீர் | 1,413 | 31 | 3,447 | 1,533 | 35 | 4,169 |
| அனல் மின் - இ.மி.ச. எண்ணெய் | 801 | 10 | 1,129 | 801 | 7 | 849 |
| அனல் மின் - ஐ.பீ. பீ. எண்ணெய் | 482 | 4 | 509 | 482 | 4 | 491 |
| காற்று - இ.மி.ச. | 104 | 2 | 264 | 104 | 2 | 258 |
| அனல் மின் - நிலக்கரி | 900 | 35 | 3,875 | 900 | 30 | 3,466 |
| மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காற்று | 784 | 13 | 1,423 | 841 | 13 | 1,546 |
| கூரை சூரிய மின்கலம் | 937 | 5 | 523 | 1,684 | 9 | 1,027 |
| **மொத்தம்** | **5,421** | **100** | **11,169** | **6,345** | **100** | **11,805** |

*மூலம் : இலங்கை மின்சார சபை*

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 701 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.1 சதவீதமாகக் குறைவடைந்து ரூபா 595 பில்லியனாக உள்ளது. குறைந்த வருமானத்தின் விளைவாக, விற்பனைச் செலவில் சரிவு இருந்தபோதிலும், இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபம் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 30 சதவீதம் குறைவடைந்து ரூபா 43.4 பில்லியனாக உள்ளதுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 62.4 பில்லியனாக இருந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிகர இலாபம் 19 சதவீதம் குறைவடைந்து ரூபா 22.1 பில்லியனாக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 27.4 பில்லியனாக இருந்தது. இலாபத்தில் ஏற்பட்ட இந்த குறைவுக்கு, விற்பனை வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, ரூபா 1.1 பில்லியனிலிருந்து ரூபா 0.4 பில்லியனாகக் குறைவடைந்த இதர இயக்க வருமானத்தில் 60 சதவீதம் குறிப்பிடத்தக்க சரிவு மற்றும் 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 3.3 பில்லியனாக இருந்த நாணயமாற்று வீத வேறுபாட்டில் ஏற்பட்ட ரூபா 0.09 கூர்மையான சரிவு ஆகியவை முக்கிய காரணமாகும்.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டிய தொகை ஐ.அ.டொ. 160.9 மில்லியனிலிருந்து 2025 செப்டம்பர் இறுதியில் ஐ.அ.டொ. 105.9 மில்லியனாகக் குறைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் இறக்குமதி மற்றும் நடைமுறை செலவினங்களுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை ஐ.அ.டொ. 80 மில்லியனாக இருந்தது.

2024 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 9.9 பில்லியனாக இருந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த நிலுவையிலுள்ள வர்த்தகக் கடன், 2025 ஆகஸ்ட் இறுதியில் 38 சதவீதம் அதிகரித்து ரூபா 13.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம், 2025 ஏப்ரல் முதல் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட கடன் வசதிகள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான மாதாந்த பயன்பாட்டுக் கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்டதே ஆகும். மேலும், வெஸ்ட் கோஸ்ட் மின் உற்பத்தி நிலையத்திற்கு நீடிக்கப்பட்ட மேலதிக கடன் வசதிகளும் வர்த்தக வரவுகளின் அதிகரிப்புக்கு பங்களித்தன.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்

2025 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் பயணிகள் வருமானம் 7 சதவீதம் அதிகரித்து ரூபா 95.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்கு பயணிகள் தேவையில் ஏற்பட்ட வலுவான மீட்சியும், சுமை காரணி 76.4 சதவீதத்திலிருந்து 82.6 சதவீதமாகவும், பயணிகள் எண்ணிக்கையில் 22 சதவீதமாகவும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், சரக்கு வருமானம் ரூபா 1.8 பில்லியன் குறைவடைந்து, பிற வருமானம் ரூபா 2.5 பில்லியன் குறைவடைந்து, ஒட்டுமொத்த வருமானம் வளர்ச்சி குறைவாகவே இருந்தது. 2025 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் இயக்கச் செலவுகள் 3 சதவீதம் அதிகரித்தன. முக்கியமாக விமானப் பராமரிப்பு, நிலையங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக, எரிபொருள் செலவுகள் குறைக்கப்பட்டதால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. விமானப் போக்குவரத்திலிருந்து ரூபா 4.1 பில்லியன் இழப்பு ஏற்பட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளதுடன், இது விமான நிலைய சேவைகள் மற்றும் தரைவழி கையாளுதல் மற்றும் பயிற்சி உள்ளிட்ட பிற வருமானங்களைக் கணக்கிட்ட பிறகு ரூபா 4.9 பில்லியன் இலாபமாக மாறியது. இருப்பினும், ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்திடமிருந்து ரூபா 2.6 பில்லியன் நிகர வருமானம் அதிகருத்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில், ஏற்பட்ட ரூபா 4.2 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2025 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் குழுமத்தின் நிகர நட்டமாக ரூபா 12.6 பில்லியன் பதிவாகியுள்ளது. இதற்கு பெரும்பாலும் ரூபா 8.5 பில்லியன் குறிப்பிடத்தக்க நாணயமாற்று நட்டம் மற்றும் அதிக நிதி செலவுகள் காரணமாகும்.

2025 ஆகஸ்ட் இறுதியில், மொத்த சொத்துக்கள் ரூபா 198.6 பில்லியனாக இருந்ததுடன், இது 2025 மார்ச் இறுதியில் ரூபா 182 பில்லியனாக இருந்தது. இது பயன்பாட்டு உரிமை சொத்துக்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் சேர்த்தல்களை பிரதிபலிக்கிறது. திரட்டப்பட்ட நட்டங்கள் 2025 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 631.5 பில்லியனாக விரிவடைந்து, இருப்புநிலைக் குறிப்பைத் தொடர்ந்து பலவீனப்படுத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மற்றும் அரசுக்குச் சொந்தமான வங்கிக் கடன்களை மாற்றவோ அல்லது ஒத்திவைக்கவோ உதவும் வகையில், விமான நிறுவனத்தின் உள்ளூர் கடன் கடமைகளை நிவர்த்தி செய்யும் மறுசீரமைப்புத் திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இந்த நடவடிக்கை பணப்புழக்க அழுத்தங்களைக் குறைத்து விமான நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் பரந்த மறுசீரமைப்பு முயற்சிகள் அதன் நீண்டகால நிலைத்தன்மையை நிவர்த்தி செய்யும்.

### தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2025 ஆகஸ்ட் மாத இறுதியில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நாட்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை முறையே 63.7 சதவீதம் மற்றும் 99.1 சதவீதமாக அதிகரிக்க முடிந்ததுடன், இது 2024 ஆகஸ்ட் மாத இறுதியில் முறையே 62.4 சதவீதம் மற்றும் 98.1 சதவீதமாக இருந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 57.2 பில்லியனாக இருந்த வருவாயை விட ரூபா 56.1 பில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விற்பனை செலவும் 10 சதவீதம் குறைந்து ரூபா 20.4 பில்லியனாக உள்ளது. முக்கியமாக 2025 சனவரியில் மின்சார கட்டணக் குறைப்புடன் தொடர்புடைய நீரிறைப்பு செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி

காரணமாகும். எனவே, மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் சபையானது ரூபா 35.7 பில்லியனின் மொத்த இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 35.8 பில்லியனாக இருந்தது. அதன்படி, உள்ளூர் வட்டி விகிதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சரிவு காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 17.6 பில்லியனாக இருந்த நிகர இலாபத்தை விட ரூபா 25.2 பில்லியனை நிகர இலாபமாக சபை பதிவு செய்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நீர் உற்பத்தி மற்றும் நீர் விற்பனை இரண்டும் முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, சுமார் 2 சதவீதம் அதிகரித்து முறையே 568 மில்லியன் கன மீட்டர் மற்றும் 429 மில்லியன் கன மீட்டர் ஆக இருந்தது. மேலும், வருமானமற்ற நீர் (Non- Revenue Water – NRW) 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 24.52 சதவீதமாக சற்று முன்னேற்றமடைந்து, 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 24.69 சதவீதமாக இருந்தது.

### இலங்கை துறைமுக அதிகார சபை

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்திறன், 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது வலுவான செயல்பாட்டு வளர்ச்சியையும் மேம்பட்ட இலாபத்தையும் பிரதிபலிக்கிறது. துறைமுக செயற்திறன் மற்றும் செயற்பாட்டுத் திறன் அதிகரிப்பால் வருமானம் 12.4 சதவீதம் அதிகரித்து ரூபா 55.3 பில்லியனாக அதிகரித்துள்ள அதே நேரத்தில் நேரடி செலவுகள் 4.6 சதவீதம் குறைந்து மொத்த இலாபத்தில் 28 சதவீதம் அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், துறைமுகம் தொடர்பான சேவைகளிலிருந்து மேம்பட்ட வருமானத்தை பிரதிபலிக்கும் வகையில், பிற செயற்பாட்டு வருமானம் 44 சதவீதம் அதிகரித்துள்ளது. நிர்வாகச் செலவுகளில் மிதமான 6 சதவீத அதிகரிப்பு இருந்தபோதிலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் செயற்பாட்டு இலாபம் 41 சதவீதம் அதிகரித்து ரூபா 37.3 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. சாதகமான அந்நியச் செலாவணி செயற்பாடுகள் செயற்திறனை மேலும் வலுப்படுத்தியதன் விளைவாக 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்தைய இலாபம் 48 சதவீதம் அதிகரித்து ரூபா 39.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 26.4 பில்லியனாக இருந்தது.

நிதி நிலையைப் பொறுத்தவரை, 2025 ஆகஸ்ட் மாத இறுதியில் மொத்த சொத்துக்கள் 6.6 சதவீதம் அதிகரித்து ரூபா 789.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் துறைமுக உட்கட்டமைப்பில் தொடர்ந்து மூலதன முதலீடுகள் ஆகும். கிழக்கு கொள்கலன் முனையத்தை இயக்குவதற்கு ஒரு புதிய துணை நிறுவனத்தை நிறுவுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதுடன், இந்தச் செயன்முறை முடிந்ததும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முதலீட்டில் கணிசமான பகுதி இந்த நிறுவனத்திற்கு மாற்றப்படும். அதிக தக்கவைக்கப்பட்ட வருமானம் காரணமாக பங்குடமை 7.8 சதவீதம் வலுப்பெற்றுள்ளது. அரசாங்கம் துறைமுக அதிகாரசபையிலிருந்து ரூபா 10 பில்லியன் வரியைக் கோரியுள்ளதுடன், அதில் ரூபா 2 பில்லியன் ஏற்கனவே ஒருங்கிணைந்த நிதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, வலுவான இலாபம், வளர்ந்து வரும் பங்குடமை மற்றும் ஆரோக்கியமான இருப்புநிலையுடன் துறைமுக அதிகாரசபை நிதி ரீதியாக நல்ல நிலையில் உள்ளது.

### விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் மொத்த வருமானம் ரூபா 35.8 பில்லியனைப் பதிவு செய்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 28.5 பில்லியனாக இருந்ததை விட 25 சதவீதம் அதிகமாகும். இந்த வளர்ச்சி முதன்மையாக விமானத் தொழிற்பாடல்லாத வருமானத்தில் 31 சதவீதம் அதிகரிப்பால் உந்தப்பட்டதுடன், இது புறப்படுகை அறவீட்டிலிருந்து கிட்டத்தட்ட இரட்டிப்பான வருமானத்தினால் வழிநடத்தப்பட்டது.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த செயற்பாட்டுச் செலவு ரூபா 14.8 பில்லியனாகக் குறைந்ததுடன், இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 15.3 பில்லியனாக இருந்தது. இது பெரும்பாலும் தேய்மானத்தில் 31 சதவீதம் குறைவு காரணமாகும். இருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் நிதிச் செலவுகள் 45 சதவீதம் அதிகரித்து ரூபா 1.2 பில்லியனாக உயர்ந்துள்ளது. மேலும் நிறுவனம் ரூபா 2.5 பில்லியனின் கணிசமான நாணயமாற்று நட்டத்தைப் பதிவு செய்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 876 மில்லியன் இலாபத்தைப் பெற்றது. இருப்பினும், வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 21.9 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இது ஆண்டுக்கு ஆண்டு 17 சதவீத வளர்ச்சியாகும். ரூபா 5.9 பில்லியனின் அதிக வரி ஒதுக்கீட்டைக் கணக்கிட்ட பிறகு, நிகர இலாபம் ரூபா 16.1 பில்லியனாக உள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 14.9 பில்லியனாக இருந்தது.

2025 ஆகஸ்ட் இறுதி நிலவரப்படி, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் தனது வலுவான நிதி நிலையை வெளிப்படுத்தி, மொத்த சொத்துக்கள் ரூபா 249 பில்லியனை எட்டியுள்ளன. இதற்கு சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மற்றும் ரூபா 113 பில்லியனுக்கும் அதிகமான வலுவான குறுகிய கால முதலீடுகள் துணைபுரிகின்றன. நிறுவனம் ரூபா 106.5 பில்லியனின் ஆரோக்கியமான பங்குடமையினை பதிவுசெய்துள்ளது. இது முதன்மையாக தக்கவைக்கப்பட்ட வருமான மற்றும் மறுமதிப்பீட்டு இருப்புகளால் இயக்கப்படுகிறது. இருப்பினும், 2025 ஆகஸ்ட் இறுதியிலுள்ளவாறு மொத்த கடன்கள் ரூபா 102 பில்லியனாக உள்ளதுடன், இது குறிப்பாக விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டத்தில் அதிக உட்கட்டமைப்பு முதலீடுகளை பிரதிபலிக்கிறது.

அட்டவணை 4.2: 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் வரிக்கு முன்னரான இலாபம்

(ரூபா.மில்லியன்)

| | துறை | 2023 உண்மையான | 2024 (தற்காலிக) | 2025 சன.- ஆகஸ். (தற்காலிக) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 40,342 | 106,904 | 78,714 |
| 2 | மக்கள் வங்கி | 15,345 | 41,584 | 37,829 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 4,287 | 26,431 | 30,582 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | -1,165 | 158 | 364 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 2,650 | 412 | 315 ** |
| 6 | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 1,183 | 3,210 | 2,855 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 64,959 | 63,177 | 38,660*** |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 10,704 | 3,546 | 4,432 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 13,329 | 16,793 | 13,837 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 1,056 | 852 | 472 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | -3,885 | -3,182 | 574 |
| 12 | இலங்கை மின்சார சபை | 57,633 | 144,394 | -4,917 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | 120,346 | 33,265 | 22,130 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 40,359 | 46,734 | 39,174 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 5,235 | 23,945 | 25,238 |
| 16 | விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி | 33,639 | 28,671 | 21,955 |
| 17 | ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் | 3,871 | -7,595 | -15,205* |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | 2,189 | 547 | 1,873 |
| 19 | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம்(அ) | -2,709 | -1,041 | -152 |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம் | 748 | 608 | 200 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் | -2,246 | -1,411 | -279 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட் | -470 | -43 | 956 |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை(அ) | -136 | 281 | 4 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | -93 | -69 | -72 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை(அ) | -156 | -223 | -68 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 534 | 415 | 552 |
| 27 | சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட் | 303 | 219 | 505 |
| 28 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 69 | -11 | 66* |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | -5 | 14 | -2 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 4,051 | -77 | 94 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 363 | 465 | 230 |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் | 28 | 24 | 18* |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 3,516 | 4,197 | 4,270 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 845 | 1,693 | 1,417 |
| 35 | அரசு மருந்தாக்கற் உற்பத்திக் கூட்டுத்தபானம் | 2,173 | 3,083 | 2,007 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 218 | 183 | 208 |
| 37 | அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | 1,268 | 2,474 | 992 |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 304 | 552 | 771 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -205 | 3 | -99 |
| 40 | இலங்கை ‘ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | -360 | -247 | -224 |
| 41 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் | -528 | -158 | -65 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | 57 | 85 | 44 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 1,274 | 825 | 126 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | 1,501 | 367 | 62* |
| 45 | லங்கா சதொச நிறுவனம் | -695 | -1,097 | -332 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | 2,792 | 284 | -164 |
| 47 | இலங்கை கடற்தொழில் கூட்டுத்தபானம் (அ) | -47 | -20 | 13 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | 640 | -85 | -122 |
| 49 | லங்கா உரக் கம்பனி | 61 | -476 | -**** |
| 50 | கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர் கம்பனி | 162 | -41 | -**** |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | -784 | -268 | -279 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 2,835 | -1,945 | -2,077 |
| | **மொத்தம்** | **427,385** | **538,408** | **307,482** |

*மூலம்: அரசுடமைத் தொழல்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

*(அ) தற்காலிக*

** 2025 ஏப்ரில் - ஆகஸ்ட்*

*** 2025 யூன் 30*

**** 2025 யூலை 31*

***** சிலோன் உர நிறுவனம் லிமிடெட் மற்றும் கொழும்பு வணிக உர நிறுவனம் லிமிடெட் ஆகியவை 2024 இல் இணைக்கப்பட்டன, மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனமான அரச உர நிறுவனம் 2025 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை ‘ரூபா 337 மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது.*

அட்டவணை 4.3: அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு/பங்கிலாப வருமானம்

(ரூபா.மில்லியன்)

| தொழில்முயற்சி | தற்போதுள்ளது | | | எதிர்பார்க்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | 2023 | 2024 | 2025.8.31 இல் உள்ளவாறு | 2026 | 2027 |
| **தீர்வை** | **60,497** | **33,191** | **11,466** | **83,009** | **84,168** |
| மக்கள் வங்கி | – | – | – | 12,100 | 12,100 |
| இலங்கை வங்கி | – | – | – | 18,600 | 18,600 |
| தேசிய சேமிப்பு வங்கி | – | – | – | 6,650 | 6,650 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | – | – | – | 600 | 600 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 5,000 | 10,000 | – | 10,700 | 10,700 |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 23,000 | 9,000 | – | 10,000 | 10,000 |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 641 | – | 447 | 100 | 100 |
| அரசு மருந்து உற்பத்திக் கூட்டுத்தபானம் | 300 | 300 | 282 | 400 | 450 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 2,000 | 2,919 | 1,486 | 4,000 | 4,000 |
| புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | 2,000 | 1,468 | 1,688 | 2,150 | 2,200 |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | 390 | 25 | 120 | 50 | 50 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 533 | 928 | – | 1,265 | 1,392 |
| தேசிய லொத்தர் சபை | 1,000 | 1,060 | 350 | 1,000 | 1,000 |
| இலங்கை கட்டளைகள் நிறுவனம் | 40 | 13 | 64 | 154 | 169 |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 620 | 300 | 25 | 60 | 60 |
| இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | 500 | 500 | – | 1,100 | 1,210 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 4,000 | 750 | 500 | 100 | 100 |
| இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | – | 100 | – | 150 | 150 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | 150 | 850 | 125 | 300 | 325 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 7,000 | – | 5,000 | 5,500 | 6,050 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 300 | 250 | 150 | 250 | 280 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அணைக்குழு | 75 | – | – | 220 | 242 |
| இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு | 500 | – | – | – | 20 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | 8,066 | 607 | – | 5,764 | 5,764 |
| தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை | 646 | 880 | 716 | 300 | 350 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | 75 | 1,749 | – | – | – |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 350 | 15 | – | 550 | 605 |
| கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை | 200 | – | 10 | – | 5 |
| தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவகம் | 115 | 85 | 30 | 30 | 30 |
| முகாமைத்துவத்திற்கான பட்டமேற்படிப்பு நிறுவகம் | 25 | 4 | 30 | 30 | 30 |

**அட்டவணை 4.3: அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு/பங்கிலாப வருமானம் (தொடர்ச்சி)**

(ரூபா.மில்லியன்)

| தொழில்முயற்சி | தற்போதுள்ளது | | | எதிர்பார்க்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | 2023 | 2024 | 2025.8.31 இல் உள்ளவாறு | 2026 | 2027 |
| ஏனைய அரசுடமைத் தெழில்முயற்சிகள் | 2,971 | 1,388 | 444 | 886 | 936 |
| **பங்கிலாபங்கள்** | **15,204** | **7,890** | **3,172** | **14,943** | **15,436** |
| தேசிய சேமிப்பு வங்கி | 30 | – | – | – | – |
| இலங்கை வங்கி | 173 | – | – | – | – |
| மக்கள் வங்கி | 158 | – | – | – | – |
| வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 2,272 | 1,271 | – | 4,700 | 4,700 |
| விமான நிலையங்கள், விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி | 5,500 | 1,286 | – | 5,969 | 5,969 |
| இலங்கை கனிம மணல் கம்பனி | 2,500 | 158 | – | 500 | 700 |
| இலங்கை பொஸ்பேட் கம்பனி | 220 | 75 | 25 | 75 | 75 |
| லங்கா லேலாண்ட் லிமிடட் | 6 | – | – | 7 | 8 |
| ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட் | 125 | 75 | – | 134 | 148 |
| மாந்தை ஸோல்ட் லிமிடட் | 120 | – | – | 60 | 60 |
| சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 22 | 15 | – | – | – |
| கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் | 60 | 30 | – | – | – |
| வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி | 305 | 131 | – | 60 | 60 |
| வரையதுக்கப்பட்ட இன்டஸ்ட்கிலல் எஸ்டெட் | 150 | 50 | – | 60 | 65 |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ | 223 | – | 227 | 227 | 227 |
| டி லாரூ லங்கா லிமிடட் | – | 1,324 | 494 | 544 | 598 |
| வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி | 697 | 436 | – | 400 | 450 |
| வலையறுக்கப்பட்ட இன்டஸ்ட்கியல் எஸ்டேட் | 174 | 98 | – | – | – |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் | 167 | 202 | 131 | – | – |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 554 | 559 | 134 | 400 | 570 |
| லங்கா சீனி கம்பெனி லிமிடட் | 1,597 | – | – | – | – |
| லங்கா திரிபோஷ லிமிடட் | 75 | 100 | 11 | 150 | 150 |
| ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகள் | 75 | 2,080 | 2,150 | 1,657 | 1,657 |
| **மொத்தம்** | **75,701** | **41,081** | **14,639** | **97,952** | **99,604** |

*மூலம் : அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

# 05

# 2026 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை

## 5.1 மேன்நோக்கு

2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் பேரண்டப் பொருளாதார மற்றும் அரசிறை மதிப்பீடுகள் அதன் தயாரிப்பின்போது நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் தீர்மானங்கள் மற்றும் தொடர்ச்சியான அனுமானங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். இப்பிரிவானது, மொத்த உள்நாட்டு உற்பத்தி பணவீக்கம், வேலையின்மை, உலகளாவிய மற்றும் நிதித் துறையுடனான வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள், தொழிற் சந்தை அபிவிருத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வருமானம் மற்றும் செலவீன மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக கருத்திற்கொள்ளப்படும் முக்கிய பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளை வழங்குகின்றது.

## 5.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி

மேம்பட்ட அரசியல் மற்றும் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் ஆதரவுடன் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது. அத்துடன் விவசாயம்,கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற துறைகளின் பரந்த அளவிலான விரிவாக்கத்தை வெளிப்படுத்தியது. 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பொருளாதாரம் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2026 ஆம் ஆண்டில், அடிப்படை சூழ்நிலையின்படி, 2026 ஆம் ஆண்டில் 4-5 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்துடன் பொருளாதாரம் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளில் மீட்சி, அதிகரித்த வெளிப்புற கேள்வி, மேம்பட்ட விநியோக நிலைமைகள் மற்றும் சுற்றுலா மற்றும் பிற முக்கிய கைத்தொழில்களின் அபிவிருத்தி ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் அனைத்து துறைகளிலும் பரந்த அளவிலான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயத் துறையின் மீதான அரசாங்கத்தின் கொள்கையானது ஏற்றுமதி சார்ந்த, பெறுமதி சேர்க்கப்பட்ட துறையாக இருக்கக்கூடிய அதன் உற்பத்தித்திறன், போட்டித்தன்மை மற்றும் மீள்தன்மையை மேம்படுத்துவதாகும். முக்கிய நடவடிக்கைகளில் தரமான விதைகளை உருவாக்குதல், விவசாயத்தில் நீர்வளங்களை திறம்பட பயன்படுத்துதல் மற்றும் சந்தையில் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான முயற்சிகள் ஆகியவை அடங்கும். மேலும், உற்பத்தி முதல் நுகர்வு வரையான முழு பெறுமான சங்கிலியையும் உள்ளடக்கிய ஒரு விரிவான தரவு மற்றும் தகவல் அமைப்பை நிறுவுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த முயற்சிகள் விவசாய உற்பத்தித்திறனை வலுப்படுத்தும் என்றும் அதன் மூலம் ஒட்டுமொத்த உற்பத்தியை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்துறை துறை குறிப்பாக கட்டுமானம் மற்றும் உற்பத்தியில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கணிசமாக விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய பங்கைக் கொண்ட சேவைகள் துறை, நிதி, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற முக்கிய உப துறைகளின் வளர்ச்சியால் ஆதரிக்கப்பட்டு, போக்குவரத்து, தானியங்கி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றில் அதிகரித்த பொது முதலீட்டின் ஊடாக சீராக விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத்தின் முக்கிய தூணாகச் செயல்படும் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சியுடன் சேவைத் துறையின் வளர்ச்சி வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டிஜிட்டல் கொடுப்பனவு உள்கட்டமைப்பின் விரிவாக்கத்துடன், செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ் மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் தொடர்புடைய புத்தாக்கங்களில் அதிகரித்த முதலீடானது இந்தத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பை மேலும் மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் திருப்தியை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலமும் சுற்றுலாத்துறையிலிருந்து உருவாக்கப்படும் பெறுமானத்தை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

## 5.3 நுகர்வோர் விலைகள்

2025 ஜனவரி முதல் தொடர்ச்சியாக ஏழு மாதங்கள் பணச்சுருக்கத்தைப் பதிவு செய்த பின்னர், 2025 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் இலங்கை நேர்மறையான பணவீக்கப் பிரதேசமாக மாறியுள்ளது. சமீபத்திய பணவீக்கமானது உணவு மற்றும் மதுபானம் அல்லாத பானங்களின் விலை உயர்வு மற்றும் திருத்தப்பட்ட பயன்பாட்டு மற்றும் எரிபொருள் கட்டணங்களால் உந்தப்படுகிறது. 2025 செப்டம்பரில், உணவுப் பணவீக்கம் 2.9 சதவீதமாக இருந்தது, அதே நேரத்தில் உணவுப் பணவீக்கம அல்லாதது 0.7 சதவீதமாக இருந்தது.

உள்நாட்டு கேள்வியை மேம்படுத்துதல், நிர்வகிக்கப்பட்ட விலைகளை இயல்பாக்குதல் மற்றும் விவேகமான பணவியல் மற்றும் நிதிக் கொள்கைகள் ஆகியவற்றால், 2026 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் பணவீக்கம் படிப்படியாக 5 சதவீத இலக்கை நோக்கி உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கண்ணோட்டமானது நிலையான உலகளாவிய எரிசக்தி மற்றும் பொருட்களின் விலைகள், சாதகமான விவசாய உற்பத்தி மற்றும் தொடர்ச்சியான பரிமாற்று விகித நிலைத்தன்மையைக் கருதுகிறது.

## 5.4 வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வேலையின்மை விகிதம் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 3.8 சதவீதமாகக் குறைந்துள்ளது, மேலும், 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 47.1 சதவீதமாக இருந்த தொழிலாளர் பங்கேற்பு வீதம் 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 49.7 சதவீதமாக அதிகரித்துள்ளது .பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட மூன்று துறைகளின் விரிவாக்கங்களுடன், 2026 ஆம் ஆண்டில் வேலையின்மை விகிதம் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.5 வெளிநாட்டுத் துறை

2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை பதிவாகிய மாதாந்த நடைமுறைக் கணக்கு மிகையைத் தொடர்ந்து பதிவாகி, இந்தக் காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியில் அதிக வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2026 ஆம் ஆண்டில் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நடைமுறைக் கணக்கு 26.1 சதவீதம் அதிகரித்து ஐக்கிய அமெரிக்க டொலர் 2,039.5 மில்லியனாக இருந்தது, இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,618.0 மில்லியனாக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஐக்கிய அமெரிக்க டொலர் 2167.0 மில்லியனாக இருந்த சுற்றுலாத்துறை வருமானங்கள் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 5.7 சதவீதம் அதிகரித்து ஐக்கிய அமெரிக்க டொலர் 2,290.0 மில்லியனாக இருந்தது. தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐக்கிய அமெரிக்க டொலர் 5,116.0 மில்லியனாக உயர்ந்து, 19.3 சதவீதம் வலுவான வளர்ச்சியைக் காட்டியது, அதேவேளை 2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கான சேவைத் துறையின் மொத்த உட்பாய்ச்சல்கள் 2.3 சதவீதம் அதிகரித்து ஐக்கிய அமெரிக்க டொலர் 2.7 பில்லியனாக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அவதானிக்கப்பட்ட சுற்றுலாத்துறை வருமானம் மற்றும் தொழிலாளர்களின் பணவலுப்பல் விரிவாக்கம் 2026 ஆம் ஆண்டில் நிகர உட்பாய்ச்சலை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலையானது தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் அமுலாக்கல் திட்டத்துக்கிணங்க (2025–2029) உலகளாவிய சந்தைகளுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி விரிவாக்கத்துடன் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் தேசிய கட்டணக் கொள்கையின் அறிமுகமானது எளிமைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய கட்டண கட்டமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது. மேம்பட்ட வெளிப்புற சமநிலைகள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட சந்தை நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டில் செலாவணி விகிதம் பரந்ததாக நிலையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.6 நாணய திரட்டுக்கள்

பண நிரம்பல் பொருத்தமான மட்டத்தில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.2 சதவீதம் வருமானம் எதிர்பார்க்கப்படுவதனாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை 5.3 சதவீதம் ஆக எதிர்பார்க்கப்படுவதனாலும் அரசினுடைய மொத்த நிதியியல் தேவைகளை ஒரு நிலையான மட்டத்துக்கு பேணுவதற்கு எதிர்பர்க்கப்படுகின்றது. இது தனியார் துறை முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கும்.

## 5.7 வருமானம்

வருமான மதிப்பீடுகளின் அடிப்படையிலான அனுமானங்கள் இணைப்பு III இல் விபரிக்கப்பட்டுள்ளன.

## 5.8 செலவினம்

செலவீன மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை பின்வருமாறு

- **சம்பளம் மற்றும் ஊதியங்கள்:** மதிப்பீடுகள் சுமார் 1.3 மில்லியன் அரச ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டவை. 2026 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புகளின் மூலம் அரச ஊழியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கப்படாது என்று கருதப்படுகிறது. மேலும், அரச ஊழியர்களுக்கான 2025 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்புடன் வருடாந்த சம்பள அதிகரிப்பும் மதிப்பீட்டில் காரணியாகக் கொள்ளப்பட்டுள்ளன.

- **ஓய்வூதியங்களுக்கான செலவின மதிப்பீடுகள் :** ஓய்வூதியங்களுக்கான செலவின மதிப்பீடுகள், 2025 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டபடி, 745,000 ஓய்வூதியதாரர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் 2026 இல் ஓய்வூதிய கொடுப்பனவுகளின் அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவை.

- **வட்டி கொடுப்பனவு:** உள்நாட்டுக் கடனை மறுசீரமைத்தல் மற்றும் கொள்கை விகிதங்களைக் குறைப்பதற்கான

சாத்தியக்கூறுகளின் ஒருங்கிணைந்த விளைவைக் கருத்தில் கொண்டு, 2026 ஆம் ஆண்டிற்கான வட்டி கொடுப்பனவுக்கான செலவினம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **பொருட்கள் மற்றம் சேவைகள்:** பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலினமாக 401.0 பில்லியனாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **குடும்பங்களுக்கான மானியங்கள்** அஸ்வெசும போன்ற முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கும், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயாளிகள் ஆகியோரை ஆதரிக்கும் பிற இலக்குடைய முயற்சிகளுக்கும் அதிக ஒதுக்கீடுகளைப் பிரதிபலிக்க கூடிய வகையில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு திட்டங்கள் (SSNs) மீதான செலவுகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது .இதற்க மேலதிகமாக, சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்குவதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு ஆதரவு, மாற்றுத்திறனாளி வீரர்களுக்கான ஆதரவு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள், இலவச மருந்துகள் வழங்கல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உர மானியங்கள் உள்ளிட்ட பிற முக்கிய நலத்திட்டங்களுக்கான நிதியுதவியும் அதிகரித்த மட்டங்களில் தொடர்வதற்கு என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான இடமாற்றங்கள்:** முக்கிய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் (SOEs) மறுசீரமைப்பு காரணமாக மிதமான அதிகரிப்பு இருக்கும்.

- **பொது முதலீடு:** 2026 ஆம் ஆண்டில், பொது முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.0 சதவீதமாக இருக்கும், முன்னுரிமை அல்லாத மற்றும் அத்தியாவசியமற்ற செலவினங்களைக் குறைக்கும் அதே வேளையில் முன்னுரிமைத் துறைகளுக்கு முதலீடுகளை இலக்காகக் கொள்ளப்படும்

- **2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம்:** இந்தச் சட்டம் 2024 ஆகஸ்ட் 8ஆம் திகதி நடைமுறைக்கு வந்ததுடன் மற்றும் 2025 டிசம்பர் இறுதிக்குள் முழுமையாக செயல்படுத்தப்படும். இந்தச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைப்பு, நடைமுறை மற்றும் நிறுவன ரீதியான திருத்தங்கள், மற்றும் அவற்றுக்கிடையில் செலவின முகாமைத்துவம் உட்பட பொது நிதிகளின் முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஒழுக்கம், செயல்திறன், வினைத்திறன் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தும்,

- **தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள்:** அனைத்து அரசாங்க கொடுப்பனவுகளையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கான “GovPay“ தளத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டை டிஜிட்டல் சமூகமாக மாற்றுவதற்கான முயற்சிகள் பொது சேவை வழங்கல் மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும்.

- **நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு:** பொது நிறுவனங்களிடையே மேம்பட்ட ஒத்துழைப்பு மற்றும் வலுவான மேற்பார்வை ஆகியவை வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின் செயல்திறனை உறுதி செய்யும், அதே நேரத்தில் இரட்டிப்பாவதைத் தவிர்க்கும்.

- **அர்ப்பணிப்பு கட்டுப்பாட்டு வழிமுறைகள்:** 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம், நிதி மற்றும் பணப்புழக்க முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் ஒரு பயனுள்ள அர்ப்பணிப்பு கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவுவதற்கு வழங்குகிறது.

### 5.9 கடன்கள்

2026 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த கடன் தேவைகள் பற்றிய மதிப்பீடுகள் ரூபா 3,800 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாகிய 4.5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, அரசாங்க வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2026 ஆம் ஆண்டில் 0.8 சதவீத புள்ளிகளால் அதிகரித்து 5.3 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பொது தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகமானது அரசாங்க படுகடனை முகாமைத்துவம், கடன் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தலஇ கடன் வழங்கும் செயல்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பொதுப்படு கடனைப் பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய முக்கிய பொறுப்புகளுடன் நிறுவப்பட்டது. பொது தனிசு (கடன்) முகாமைத்துவ அலுவலகமானது திறமையான மற்றும் வெளிப்படையான கடன் நடைமுறைகளை செயல்படுத்துவதை உறுதி செய்யும்.

### 5.10 மதிப்பீடுகளுக்கான உணர்திறன்

நிதி மற்றும் பொருளாதார கணிப்புகள் பல அபாயங்கள் மற்றும் சவால்களால் பாதிக்கப்படலாம், அவற்றில் பின்வருவன அடங்கும்:

**பேரண்டப் பொருளாதார நிச்சயமற்ற தன்மை:** பொருளாதார நிலைமைகள் நிதி விளைவுகளை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியை உருவாக்குகின்றன இருப்பினும், அவை நிதி நிலையை முன்னறிவிப்பதில் நிச்சயமற்ற தன்மைக்கான முதன்மை ஆதாரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. உலகளாவிய பொருட்களின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், தற்போது நிகழும் அமெரிக்க வரி திருத்தங்கள், முன்னறிவிக்கப்பட்ட உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுடன இணைந்த உலகப் பொருளாதாரத்தில் அதிகரித்த புவிசார் அரசியல் பதட்டங்கள் ஆகியவை ஆரம்ப கணிப்புகளிலிருந்து உண்மையான வருமானம் மற்றும் செலவின விளைவுகளில் விலகல்களுக்கு வழிவகுக்கும். மேலும், அவசரகால பதில்கள் அல்லது எதிர்பாராத பொருளாதார அதிர்ச்சிகளால் தேவைப்படும் சமூக உதவி நடவடிக்கைகள் போன்ற எதிர்பாராத செலவின அழுத்தங்கள், 2026 நிதி மூலோபாய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் நிதி கணிப்புகளை மேலும் பாதிக்கலாம். பணவீக்கம், வட்டி விகிதங்கள் மற்றும் செலாவணி விகிதங்கள் போன்ற மாறுபாடுகள் கடன் பெறும் செலவு மற்றும் ஒட்டுமொத்த நிதி நிலையை நேரடியாக பாதிக்கின்றன. இந்த மாறிகள் பொருளாதார சக்திகளில் திடீர் மற்றும் கணிக்க முடியாத மாற்றங்களுக்கும் பாதிக்கப்படக்கூடியவை.

**வெளிப்புற அதிர்ச்சிகள்:** அமெரிக்காவிற்கும் உலகின் பிற பகுதிகளுக்கும் இடையே நடந்து கொண்டிருக்கும் வரி முரண்பாடுகள் போன்ற புவிசார் அரசியல் பதட்டங்களிலிருந்து எழக்கூடிய உலகளாவிய பொருளாதார அதிர்ச்சிகளை சரிசெய்வது சவாலானதாக இருக்கும். இந்த வெளிப்புற அதிர்ச்சிகள் உள்நாட்டு சர்வதேச வர்த்தகம், பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை பாதிக்கலாம்.

**இயற்கை பேரழிவுகள் மற்றும் சாதகமற்ற வானிலை நிலைமைகள்:** இயற்கை பேரழிவுகளிலிருந்து வரும் நிதி அபாயங்கள் பொதுவாக அனர்த்த முகாமைத்துவம், நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் சேதமடைந்த பொது உள்கட்டமைப்பின் மறுசீரமைப்பு அல்லது புனரமைப்பு தொடர்பான எதிர்பாராத செலவுகளுக்கு நிதியளிக்க வேண்டிய அவசியத்திலிருந்து உருவாகின்றன. நாடு வெள்ளம், மண்சரிவுகள், சூறாவளிகள் மற்றும் வறட்சி ஆகிய ஒவ்வொன்றும் எதிர்வரும் வருடங்களுக்குள் நிகழக் கூடியவை உள்ளிட்ட பல்வேறு இயற்கை ஆபத்துகளுக்கு ஆளாகிறது, இத்தகைய நிகழ்வுகள் தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் சாத்தியமான பொருளாதார வளர்ச்சியை மோசமாக பாதிக்கலாம், இதன் மூலம் நாட்டின் நிதி நிலையில் எதிர்மறையான அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

**நிர்வாக மற்றும் பெறுகைத் தாமதங்கள்:** அதிகாரப்படியாக்க திறமையின்மை மற்றும் தாமதங்கள் பொருளாதார முன்னேற்றம் மற்றும் நிதி நடவடிக்கைகளை தாமதமாக்கலாம். இது பொது முதலீட்டு திட்டங்களை செயல்படுத்துவதை தாமதமாக்கலாம். பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான அவற்றின் பங்களிப்பைக் குறைக்கலாம். தாமதங்கள் கருத்திட்ட செலவுகளை அதிகரிக்கலாம் மற்றும் பொது செலவினங்களில் திறமையின்மையை உருவாக்கலாம். இதன் விளைவாக, இந்த காரணிகள் நிதி சமநிலை மற்றும் வருமான திரட்டில் மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

**சட்டவாக்க தாமதங்கள் :** முக்கிய நிதி தொடர்பான சட்டங்களை அங்கீகரிப்பதில் ஏற்படும் தாமதங்கள் வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகளின் நேரம் மற்றும் செயல்படுத்தலில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கக்கூடும். ஒத்திவைக்கப்பட்ட வரி சீர்திருத்தங்கள் அல்லது செலவின ஒப்புதல்கள் வருமான பற்றாக்குறை மற்றும் செலவின அதிகரிப்புக்கு வழிவகுக்கும். இந்த நிச்சயமற்ற தன்மை நிதி ஒழுக்கத்தை பலவீனப்படுத்தலாம், கடன் வாங்கும் தேவைகளை அதிகரிக்கலாம், இறுதியில் அதன் நிதி இலக்குகளை அடைய அரசாங்கத்தின் திறனை அச்சுறுத்தும்.

